
அகஸ்தியர்

வைத்திய சதகம்



தாமரை நூலகம்
சென்னை-600 026

அகஸ்தியர் வைத்திய சதகம்

ஹகீம். பா. மு. அப்துல்லா சாயபு

அவர்கள் பதிப்பு

பதிப்பாசிரியர்

எஸ்.பி. இராமச்சந்திரன்

தாமரை நூலகம்

7, என். ஜி. ஓ. காலனி 3வது தெரு

வடபழனி, சென்னை - 600 026

தொலைபேசி எண் - 044 - 23620249

தாமரை வெளியீடு எண் : 259
முதல் பதிப்பு : ஏப்ரல் - 2000
இரண்டாம் பதிப்பு : ஆகஸ்டு - 2015
மூன்றாம் பதிப்பு : ஆகஸ்ட் - 2023

நூலைப்பற்றி

நூலின் பெயர்	: அகத்தியர் வைத்திய சதகம்.
நூலின் தன்மை	: சித்த மருத்துவம்
பதிப்பாசிரியர்	: எஸ்.பி. இராமச்சந்திரன்
வெளியிட்டோர்	: தாமரை நூலகம் 7, என். ஜி. ஓ. காலனி வடபழனி, சென்னை - 26.
பதிப்பு ஆண்டு	: ஆகஸ்டு - 2023
உரிமை	: பதிப்பகத்திற்கு
நூல் வடிவம்	: 21 செ. மீ. x 14 செ. மீ
தாளின் தன்மை	: 16.6 கி.கி. வெள்ளைத்தாள்.
எழுத்தின் அளவு	: 11 புள்ளி
மொத்த பக்கங்கள்	: 136+VIII
பிரதிகள்	: 1000
நூலின் விலை	: ரூ. 90.00
அச்சிட்டோர்	: கிரியேட்டிவ் ஆப்செட் நுங்கம்பாக்கம், சென்னை -

பதிப்புரை

என்னென்ன மருந்து ஒரு நோயின் வீரியத்தைக் குறைத்துக் குணப்படுத்தும்?

ஒரு மருந்து எந்தெந்த நோயைக் குணப்படுத்தும் மருந்தாகும்?

இப்படி வகைப்படுத்திக் கூறும். ஒரு நூலின் அவசியத்தைக் கருதி அரும்பாடு பட்டுத் தேடிக் கண்டு பிடித்து இந்த நூலை வெளியிட்டதாக ஹகீம். பா.மு. அப்துல்லா சாயபு அவர்கள் தமது முகவுரையில் கூறுகிறாரர்.

மருத்துவர்கள் இந்த நூலின் பயனை நன்கு உணர்வார்கள். இது போல இன்னும் விளக்கமாகவும் விரிவாகவும் நூல்கள் பல வெளி வந்தாலும் அவை மருத்துவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இந்தச் சிறந்த நூல்,

நிதி பெறு புதுவை யென்னும்
நீள்நகர் வைகி வாழும்
துதி பெறும் சவள வேளார்
தூய்குலத் திலத மானோன்
ததி பெறு மருந்து நூலோன்
சவரிமுத் தென்பா னீன்ற
திதி பெறு கனக ராய
சிரோமணி என்னு மன்னோன்
திருவளர் பரத்தைப் போற்றிச்
செக மெலாம் பயன் பயப்ப
மருவளர் சுலோக நூறாய்
வழங்கிய சத சுலோகம்.

புதுவை நகரத்தில் வாழ்ந்த சவளவேளார் குலத்தைச் சேர்ந்த சவரி முத்து என்னும் மருத்துவரின் மகனாகிய கனகராயன் என்பவரால் நூறு பாடல்களாகப்

பாடப்பட்டது என்று இதன் பாயிரத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

பாயிரத்தை இவற்றியவர் சாமிநாதன் என்பதும் அதே பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொருத்து நூல் பலவுஞ் செய்தோன்
புரவலன் சாமிநாதன்
மருத்துநூற் பாயிரத்தை
வளம்பெற உரைத்த தன்றே.

இந்நூலாசிரியர்.

இரத்த பித்தத்தி னரங்க ளென்றறிந்து
இயம்பினர் கும்ப முனியே.

என்றும்.

செயரோக மானதொரு கபத்துக் கரங்களாய்ச்
செப்பினன் கும்ப முனியே.

என்றும்.

தாம் அகத்தியமுனிவர் கூறியதை எடுத்துக் கூறியுள்ளதாகவே கூறியிருக்கிறார்.

அதிலிருந்து அவர் அகத்திய முனிவரிடம் மிகவும் ஈடுபாடு கொண்டவர் என்றும் அவருடைய மருத்துவ நூல்களை நன்கு கற்றுத் தேர்ந்தவர் என்றும் உறுதியாகிறது.

அப்துல்லா சாயபு அவர்கள் வெளியிட்டநூல்கள் அனைத்தும் சிறப்பானவை ஆயினும் அவை எல்லாம் கிடைக்கவும் இல்லை. வெளியிடப்படவும் இல்லை. ஏற்கெனவே வெளியிடப்பட்டவை தவிர மற்ற நூல்களை ஒவ்வொன்றாகத் தேடிக் கண்டு பிடித்து வெளியிடுவதில் பெருமை அடைகிறோம்.

பதிப்பாசிரியர்
எஸ்.பி.இராமச்சந்திரன்

பொருளடக்கம்

சரக்குகளின் பொருட்பண்பு அகராதி
சதகத்தின் அநுபந்தம்
பொது விதிகள்

முற்றும்

முகவுரை.

வைத்திய சகோதரர்களே!

இந்த அருமையான நூலை வெளிப்படுத்த நேரிட்டகாரணம் பின்வரும் விஷயங்களால் தெள்ளிதாய் நன்குவிளங்கும்.

நம்மால் வெளிப்படுத்தப்படும் நூற்களைக் கைக்கொண்டு அவற்றிலுள்ள பல முறைகளையும் செய்து தாமும் அனுபவித்துத் தம் இன பந்துமித்திரர் முதலிய பலருக்கும் உபயோகித்து அவற்றால் பல நற் பயன்களை அடைந்துவரும் நமது நண்பர்கள், நம்மைப் பலவிதத்தாலும் ஆதரித்து கனப்படுத்திவருகின்றார்கள். யூநானி வைத்தியத்திலும், இங்கிலீஷ் வைத்தியத்திலும் ஒரு வியாதிக்காம் பல சரக்குகளை ஒருங்கு திரட்டிச்சொல்லப்பட்ட நூற்கள் பல இருக்கின்றன. அப்படியிருப்பதால் அவசியமான சமயத்தில் ஒரு வியாதிக்கு இன்னின்ன சரக்குகளாம், இன்னின்ன தேகிகளுக்கு இன்னின்னவைகள் தக்கவைகள் என்று தெரிந்து சமயோசிதம்போல் அவுடதங்கள் செய்யப் பெரும் உதவியாயிருக்கிறது. அவ்விதம் தமிழில் ஒரு நூல் இல்லாதது பெருங்குறையாயிருந்தது. ஆதலால்; அவ்வகை நூலை வெளிப்படுத்தி அக்குறைவை நிவர்த்தி செய்வதுடன் அதனைச்சிறுவர் முதல் யாவரும் மனனஞ்செய்யும்படியாகச் செய்யுளாக அமைத்தால் மிகவும் பிரயோசனமா யிருக்குமென நமது நண்பர்களுட் பலர் பல நாளாக நம்மை வற்புறுத்தி வந்தனர்.

ஆனால், இப்பெருங் காரியத்தைச் செய்து நிறைவேற்ற அடியேன் பல விதத்திலும் சக்தியற்றவனாயிருந்தேன். ஆயினும், நமது நண்பர்களின் விருப்பத்தை அவலமாக்க வசமற்றவனாய் இக்காரியத்தில் அதிக கவலையுடன் முயற்சிசெய்து வந்தேன்; அவ்வாறு செய்துவரும்போது சமஸ்கிருதத்தில் சதசுலோகமென்னும் நூலொன்றிருப்பதாகத்தெரிந்து அதனைத்தமிழில் மொழிபெயர்த்து வெளிப்படுத்தலா மென்னும் உத்தேசத்துடன் பார்வையிட்டேன். ஆனால், அது சமஸ்கிருதம் தெரிந்த பண்டிதர்களுக்கும் சரக்கு முதலியவற்றின் பெயர்களுள் பலவித சந்தேகங்களைக் கொடுக்கக்கூடியதாயிருந்தது. அதனால் அதனைமொழி பெயர்த்தால் அரைகுறையா யிருப்பதுடன் வாகமாயு மிருக்கும். இது நமது நண்பர்களின் கோரிக்கைக்கு ஏற்றதன்று. ஆகையால் அதனைவிட்டு முன்னிலும் அதிக சிரமத்துடனும் கஷ்டத்துடனும் முயற்சிசெய்து முடிவாக நம்மிடத்திலுள்ள ஏட்டுச் சுவடிகளில் ஏதேனும் இவ்வகை நூல் அகப்படுமாவென்று பலநாள் ஆராய்ந்து தேடிவந்தேன்.

அப்படித்தேடிவரும்போது கடவுளினது கிருபையாலும் பெரியோர்களின் ஆசீர்வாதத்தினாலும் நமது நண்பர்களின் அதிர்ஷ்ட வசத்தாலும் நமது முயற்சி வீண்போகாமல் இந்த நூல் அகப்பட்டது. இதனை ஆதியோடந்தமாக வாசித்துப் பார்த்ததில் மேற்கண்ட கருத்திற் கிசைந்தபடி ஒரு வியாதிக்காம் பல சரக்குகளும் ஒன்றாகத் திரட்டப்பட்டும், சிறந்த செய்யுட்களாகவும் செய்யப்பட்டிருந்தபடியால் தேடிப் போன பொருள் வழியில் கிடைத்தது போல் அதிக சந்தோஷமுண்டாயிற்று. ஆதலால், இதனை இப்போது வெளிப்படுத்த முன்வந்தேன்.

இந்த நூலானது, புதுவையிலுள்ள, கனம். சாமிநாத, பண்டிதரவர்களாற் செய்யப்பட்டதாகத் தெரியவருகிறது. இந்நூலின் செய்யுட்களின் தன்மையை நோக்கும்போது இவர் வைத்திய சாஸ்திர ஆராய்ச்சியிலும், இலக்கண இலக்கிய ஆராய்ச்சியிலும் மகாபண்டித ரென்பது நன்கு விளங்குகின்றது. இந்நூல், ஒரு வியாதிக்குபயோகமாம் பலசரக்குகளையும் ஒன்றாகச் சேர்த்துச் செய்யுட்களாகச் செய்யப்பட்டிருப்பதால் இதனைமனப்பாடஞ்செய்து கொண்டு எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் ஆங்காங்கு அப்போதைக்கப்போது கிடைக்கும் சரக்குகளினால் தகுந்த சிகிச்சை செய்வதற்கேதுவுண்டாகும்; இன்னும், ஒவ்வொரு சரக்கின் குணங்களைத்தெரிந்து கொள்ளவேண்டுமானால் அநேகமாயிரஞ்செய்யுட்களை மனப்பாடஞ் செய்து கொள்ளவேண்டும். இவ்விதமாக தனித்தனியே எல்லாச்சரக்களின் குணங்களையும் தெரிந்து கொள்வது மிகவும் அரிது; அப்படித் தெரிந்திருந்த போதிலும் இன்ன வியாதிக்கு இன்ன சரக்கை உபயோகிக்கவேண்டு மென்று தக்ஷணம் தோற்றுவது அதனிலுமரிது; அப்படித் தோற்றினும் அந்தச்சரக்கு நினைத்த விடங்களிற்கிடைப்பது எல்லாவற்றினும் அரிது; ஆகையால், மேற்கூறியபடி ஒரு வியாதிக்குபயோகமாம் பல சரக்குகளடங்கிய இந்நூலின் செய்யுட்களை மனனஞ்செய்து கொண்டால் அவை எப்பொழுதும் ஞாபகத்திலிருக்குமாகையால் அவற்றிற் சொல்லப்படும் சரக்குகளில் ஏதேனுமொன்று நாம் நினைத்தசமயத்தில் கிடைக்கும். அதைக்கொண்டு மேற்கூறிய கஷ்டமில்லாமல் வைத்தியம் செய்யலாம். முன்னே கூறியபடி தனிச்சரக்குகளின் குணத்தைச்சொல்லும் செய்யுட்களை மனப்பாடம் செய்திருக்கிற வைத்தியரையும் பின்னே கூறியபடி ஒரு வியாதிக்காம் பல சரக்குகளடங்கிய செய்யுட்களை மனப்பாடஞ் செய்திருக்கிற வைத்தியரையும் சீர் தூக்கிப்பார்த்தால் பின்கண்டவரே அதிகம் சிறந்தவராவர்; ஏனெனில் இவர் தாம் கற்றிருக்கிற நூலின் வல்லபத்தினால் எந்த வியாதிக்கும்எந்தச் சமயத்திலும், எந்த வி[illegible]த்திலும் எவருக்கும் சமயோசிதமான சிகிச்சை

செய்வார். முன்கண்டவர் அவ்விதம் செய்யமுடியாது. இந்த விஷயம் பொய் மெய்யென்பதைச் சாஸ்திரவாதிகளும் அனுபவசாலிகளுமாகிய மகாபண்டிதர்கள் தெரிந்து கொள்வார்கள்.

இஃதன்றி வைத்தியத்தில் ஒருவர் அனுபவப்படவேண்டுமானால் முதலில் அங்காதிபாத நூல் முதலிய சாஸ்திரங்களை வாசிக்கவேண்டும்; அதன்மேல் குணவாகடங்கள், வியாதி லக்ஷணங்கள் ஆகியவைகளைப் படிக்கவேண்டும். அப்படிப் படித்தாலும் சிகிச்சை செய்ய அநேக வருடங்கள் செல்லவேண்டும். இந்த நூலை வாசித்தாலோ அனுபவப்பட அவ்வளவு காலம் அவசியமில்லை; கொஞ்சம் வாசிக்கத்தெரிந்த சிறுவர், ஸ்திரீகள் ஆகியவர்களுக்கும் இதனை மனப்பாடம் செய்வித்தால் அவர்களும் இலேசாக வைத்தியம் செய்தல் கூடும். மனப்பாடஞ் செய்வதற்கும் இது சுலபமான நூல்; மூன்று அல்லது நான்கு மாதங்களுக்குள் இதனை மனப்பாடஞ் செய்து விடலாம். இவற்றையெல்லாம் நோக்கும் போது இந்நூல் பல விதத்தாலும் சிறந்ததாகும்.

இவ்வகைச் சிறப்பு வாய்ந்த இந்நூலில் ஒரு வியாதிக்காம் பல சரக்குகள் ஒவ்வொரு செய்யுட்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றன; அவற்றுள் சில சரக்குகள் வேறு வியாதிகளுக்கும் எடுத்துக்கூறப்பட்டிருக்கின்றன. அதனால், இதில் சொல்லப்பட்டிருக்கும் ஒரு சரக்கானது எந்தெந்த வியாதிகளுக்கு உபயோகப்படு மெனத்தெரிந்து கொள்வதற்கு ஒவ்வொரு செய்யுட்களையும் ஆராய நேரிடும்: அப்படிச்செய்வது அசாத்தியமான காரியம். ஆகையால் இந்நூலிலுள்ள சரக்குகளை யெல்லாம் இதன் ஈற்றில் அகராதி ரூபமாக அமைத்து இன்னின்ன வியாதிகளுக்காம் என்ற விவரமும் எழுதிச்சேர்த்திருக்கிறோம்.

இதில் சில வியாதிகளுக்கு சமஸ்கிருத நாமங்களும், வைத்திய பரிபாஷை நாமங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளை யெல்லாம் சாமானியமான வைத்தியர்கள் தெரிந்து கொள்ளுவது கஷ்டம். ஆகையால் அவ்வகை நாமங்களையும் அகராதி ரூபமாக ஏற்படுத்தி அதனதன் சாதாரணப்பெயர்களையும் விளக்கிக்காட்டியிருக்கிறோம். இன்னும் இந்நூலிலுள்ள சரக்குகளை உபயோகிக்கும் முறைகள் சொல்லப்படவில்லை. ஆனால் இந்நூலின் ஈற்றிலுள்ள ஒரு பாட்டில் சரக்குகளை இன்னின்ன வகையாக உபயோகிக்கவேண்டு மென்று சிலவகைகள் மாத்திரம் குறிப்பாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. அந்த வகைகளுக்கும் செய்முறை விவரமில்லை. ஆதலால் ஒவ்வொரு வகையையும் இன்னின்ன விதமாகச்செய்யவேண்டுமென்னும் விவரமும் சரக்குகளின் அளவு

பிரமாணம் முதலியவைகளும் பொதுவிதியாக எழுதி இதனுடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இப்படிச் செய்திருப்பதால் வைத்தியர், வைத்தியரல்லாதவர்கள் ஆகிய எல்லோரும் முறைகளை இலகுவாகச்செய்து கொள்ளலாம். இன்னும் இதிலுள்ள அரும் பதங்களுக்கு விளக்கமும், விஷதருமமுள்ள சரக்குகள் இன்னின்னவை யென்பதும், தனியாய் உபயோகப்படுத்தப்படாத சில சரக்குகளின் முறைகள் இன்னின்னவையென்பதும் ஆங்காங்குக் குறிப்பிடப் பட்டிருக்கின்றன.

இன்னணபல விஷயங்களடங்கிய இந்த அருமையான நூலை வெளிப்படுத்த தேககஷ்டம், திரவியச் செலவு, காலம் முதலியன எவ்வளவு வேண்டுமென்பது கற்றறிந்த அறிவாளிகளுக்குத் தெரியாமற் போகாது. இதனைச்சிறிய நூலென அலட்சியம் செய்யாமல் ஆதியோடந்தமாக வாசித்து மனனஞ்செய்து கொள்பவர்கள் ஒருமகா பண்டிதருடைய சக்தியை யடைந்து எந்த வியாதிக்கும், எச்சமயத்திலும் தனிச்சரக்குச்சிகிச்சை செய்து வெற்றியடைவார்களென்பது திண்ணம். இந்த விஷயமானது அனுபவத்தால் நிச்சயித் தறியக்கூடுமே யொழிய வாய்ப்பேச்சினாலும் வீண் விவாத தர்க்கத்தினாலும் தெரிந்து கொள்ள முடியாது. ஆகையால் நமது நண்பர்கள் இதனை ஆதியோடந்தமாக வாய்ப்பாடஞ் செய்தாயினும் அல்லது அவசியமான காலங்களில் இதனை ஆழ்ந்த கருத்துடன் வாசித்தாயினும் இதிற் சொல்லியிருக்கிற விதிப்படி சிகிச்சைசெய்து தாமும் நற்பயனையடைந்து பிறர்க்கும் நல்ல பிரயோசனங்களை உண்டாக்குவார்களென நம்புகின்றோம்.

இந்த நூலானது ஏட்டிலிருந்தெடுத்து எழுதப்பட்ட படியாலும், மனிதசுபாவத் தவறுதலினாலும், இன்னும் வேறுபலவித அசந்தர்ப்பங்களினாலும் இதில் பலவிதபிழைகள் நேரிட்டிருக்கலாம். அவற்றைத்தெரிந்த பண்டிதர்கள், அறிவாளிகள், அனுபவசாலிகள் முதலியவர்கள் இவ்வேழையை மன்னித்து அப்பிழைகளைத் திருத்தித் தெரியப்படுத்தினால் அவை சாஸ்திரம், யுக்தி, புத்தி ஆகியவைகளுக்கு ஒத்திருக்குமாயின் அம்மகான்களின் நாமத்துடன் மறுபதிப்பில் திருத்திப் பதிப்பிக்கப்படும்.

இந்த நூலை வாசித்து இதிற் சொல்லப்படும் விஷயங்களை யுணர்ந்து அவற்றின்படி நடப்பவர்கள் இம்மைக்குரிய தேகசுகம், தேகதிடம், நீண்ட ஆயுள், நோயற்ற வாழ்வு ஆகியவைகளைப்பெற்று இனிது வாழ்வார்களாக. ஆமீன்.

இங்ஙனம்.

அக்கீம்-பா-முகம்மது-அப்துல்லா.

கடவுள் துணை.

அகஸ்தியர் வைத்திய சதகம்.

கடவுள் வணக்கம்.

நேரிசை வெண்பா.

பூதலத்தி லேபிணிகள் போக்குஞ் சரக்குவகை
சாதகமாச் சொல்லுஞ் சதகத்தை-ஆதரவாய்
அச்சிட் டுதவுதற்கிங் காதியிறை யோன்பாத
மிச்சைபெறு நற்றுணையா மே.

நூலாசிரியர் கடவுள் வணக்கம்.

நேரிசை வெண்பா.

சற்சதானந்த தனிமுதலோன் றாள்பணிந்து
சொற்சத சுலோகத்தைச் சொல்லிடவே-பற்கலையோர்
நற்றவத்தோர் மாபெரியோர்நன்மருந்து நூறெளிந்தோர்
கற்றறிந்தோர் தங்கள்பதங் காப்பு.

பாயிரம்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மணிகொண்ட திரைபூ வானும்
வயங்குமுச் சுடர்மற் றெல்லாம்
அணிகொண்ட விரலாற் றாங்கு
மனாதிமுத் தொழிலோன் பாதம்
பணிகொண்ட சிரமேற் கொண்டு
பண்டிதற் குதவி யாகத்
துணிகொண்ட மனத்திற் றேர்ந்து
சொற்றினன் றமிழின் நூலை.

நிதிபெறு புதுவை யென்னும்
　　நீணகர் வைகி வாழுந்
துதிபெறுஞ் சவள வேளார்
　　தூய்குலத் திலத மானோன்
றதிபெறு மருத்து நூலோன்
　　சவரிமுத் தென்பா னீன்ற
திதிபெறு கனக ராய
　　சிரோமணி யென்னு மன்னோன். 2

திருவளர் பரத்தைப் போற்றிச்
　　செகமெல்லாம் பயன்ப யப்ப
மருவளர் சுலோக நூறாய்
　　வழங்கிய சதசு லோகங்
கருவளர் தமிழாற் செய்யுட்
　　கவிபலவிருத்தப் பாவாற்
குருவள ரறிவாற் செய்தான்
　　குவலையம் வியப்பத் தானே. 3

கருத்தினூல் பலவுந் தேர்ந்து
　　காவிய புராணச் செய்யுட்
பொருத்து நூல் பலவுஞ் செய்தோன்
　　புரவலன் சாமி நாதன்
திருத்துநூ லனந்து வாத்தி
　　தேடருஞ் சதசு லோகம்
மருத்துநூற் பாயி ரத்தை
　　வளம்பெற வுரைத்த தன்றே. 4

பாயிரம் முற்றிற்று.

தாபசுரஹரம்.

முத்தமும் பற்படக முந்திரிகை பேரீந்து
மூங்கிலிலை பூநாகமும்
முலைப்பாலு மிளநீரு மஞ்சட்டி ரோகணியு
முயர்சந்த் னந்+தாரமுங்
கொத்தமல் லிகைசுக்கு காஞ்சோரி நிலவேம்பு
கொன்றைபுடல் தசமூலமுங்
கோஷ்டம்வெட் பாலைகரு நெய்தலர
சம்பட்டை கோரோச னம்மதுரமும்
சித்தர்முட் டியிலுப்பை நெய்ச்சட்டி புளியாரை
சிறுமூல நன்னாரியுஞ்
செவியந்திப் பிலிதோடை பூசனிக் கொடிசீனி
சிறுதேக்கு வேம்புமருளுந்
தத்தரத் தையும்வெட்டி வேருட னிலாமிச்சு
தான்றிகடு நெல்லிசீந்திற்
சதாவரி ருத்திராட்சம் வட்டத் திருப்பியுஞ்
சகலசுர ஹரமாகுமே. 1

1. அதிவெப்பத்தினால் தாபத்தை உண்டாக்கும் சுரங்களுக்கு மருந்து

நன்முத்து கோரைக்கிழங்கு முத்தக்காசு	பற்படாகம்
முந்திரி	பேரீச்சம்பழம்
மூங்கிலிலை	பூநாகம்
முலைப்பால்	இளநீர்
மஞ்சட்டி	கடுகுரோகிணி
சந்தனம்	அரிதாரம்அல்லது வெள்ளி
கோஷ்டம்	வெட்பாலை
கருநெய்தல்	அரசம்பட்டை
கோரோசனம்	அதி மதுரம்
சிற்றாமுட்டி	இலுப்பை
நெய்ச்சட்டி	புளியாரை
சிறுமூலம்(கண்டத்திப்பிலி)	நன்னாரி
செவியம்	திப்பிலி
ஆடாதோடை	பூசணிக்கொடி
சீனி	சிறுதேக்கு
வேம்பு	மருள்
அரத்தை	வெட்டிவேர்
விலாமிச்சுவேர்	தான்றிக்காய்

கடுக்காய் — நெலலிக்காய்
சீந்தில் — சதாவரி(தண்ணீர்
விட்டான் கிழங்கு
ருத்திராட்சம் — வட்டத்திருப்பி

சீதசுர ஹரம்.

வட்டத்திருப்பி வேரொடு பெருமுட்டி
மரமஞ்சள் திரிகடுகொ டுள்ளியதும்
விட்டுணு கிரந்தி நாரத்தம்வேரு மேவும்
*பத்திரி +பிஞ்சொடு நொச்சிலியும்
ஒட்டறை யோடிரு துளசியு மூக்குரட்டை
யுயரும் லவங்கத் தோலிலை சீரகமும்
திட்டப் பெருமரஞ் சிறுதேக் காலம்பழுப்புஞ்
சீதச் சுரஹர மாகிடு மென்றனரே. 2

2. சீதளத்தினால் உண்டான சுரங்களுக்கு மருந்துகள்

வட்டத்திருப்பி வேர் — பேராமுட்டி
மரமஞ்சள் — திரிகடுகு
பூண்டு — விஷ்ணுகிரந்தி
நாரத்தம்வேர் — தாளிசப்பத்திரி
கடுக்காய்பிஞ்சு — நொச்சிலி
ஒட்டறை — துளசி
கருந்துளசி — மூக்குரட்டை
இலவங்கத்தோல், இலை, — சீரகம்
பெருமரம் — சிறுதேக்கு
ஆலம்பழுப்பு

இரத்தபித்த ஹரம்.

நலமுட னாடா தோடைபற் படகம்
நற்சிறுக் கீரைமுந் திரிகை
நாட்டுள தென்னம் பாளையுமதுரம்
நல்லிலா மிச்சிருவேலி
தலமுய ராலின் விழுது பேரீந்து
தண்ணீர்முட் டான்கிழங்கறுகுந்
தான்றியுங் கடுக்காய் நெல்லியுங் குருந்துந்
தாதுமா துளங்கனிபாலுங்
குலவியசீனி காய்ந்திடுஞ் சாணங்
கோவதின் நெய்யொடு தேனுங்

கோரையின் கிழங்கும் இலுப்பையின் மலருங்
கோதையே சந்தனமுடனே
இலவதி நீரும் அதினுடபிசினு
மினியபொன் னாங்கணியிலையும்
இரத்த பித்தத்தி னரங்களென்றறிந்து
மியம்பினர் கும்பமாமுனியே. 3

3. இரத்தப்பித்தத்திற்கு மருந்துகள்

ஆடாதோடை
சிறுகீரை
தென்னம்பாளை
விளாமிச்சு
ஆலம்விழுது
தண்ணீர்விட்டான்கிழங்கு
நெல்லி
மாதுளம்பழம்
காய்ந்த சாணம்
தேன்
இலுப்பைப்பூ
இளவம்நீர்
பொன்னாங்காணி இலை
பற்படாகம்
முந்திரி
அதிமதுரம்
இருவேலி
பேரீச்சை - அறுகு
கடுக்காய் - தான்றிக்காய்
குருந்து
சீனி
பசுவின் நெய்
கோரைக்கிழங்கு
சந்தனம்
இலவம்பிசின்

பெரும்பாட்டு ஹரம்.

நாகலும் பாலை யத்திவெட் பாலை
நற்கருங் காலியின் பட்டை
நலந்தருங் கருப்பஞ் சாறுட னரக்கும்
நற்பெரும் பூசணீக் காயும்
தோகையே சிவந்த பருத்தியின் பூவுந்
துணியதின் சாம்பல்தா மரைப்பூ
சொன்னவிக் கிழங்கும் வாழையின்பூவுஞ்
சொற்கரு நெய்தலோ டிந்து
மோகமாந் தென்னம் பாளைசந் தனமு
முத்தமும் நெல்லியின் காயும்
மூடிய பேய்க்கொம் மட்டியினிலையு
முழங்குபச் சிலையுநீர்முட்டான்
மாகன லவங்கப் பட்டையீ தெல்லாம்
மாதர்கள் யோனியிற் பெருகும்
வன்பெரும் பாடோ டிரத்தமாம் பித்தம்
வாங்குமென் றுரைத்தனர் முனியே. 4

4. பெரும்பாட்டு நோய்க்கு மருந்து

நாவல்
வெட்பாலை
கருங்காலிப்பட்டை
அரக்கு
செம்பருத்திப்பூ
தாமரைப்பூ
கருநெய்தல்
தென்னம்பாளை
முத்தம்
பேய்க்குமட்டி இலை
இலவங்கப்பட்டை

பாலை
அத்தி
கருப்பஞ்சாறு
பெரும்பூசணிக்காய்
துணிச்சாம்பல்
வாழைப்பூ
இந்து
சந்தனம்
நெல்லிக்காய்
தண்ணீர்விட்டான்
சொன்னவிக்கிழங்கு

எலும்புருக்கி ஹரம்.

நிலப்பனையும் வெட்பாலை யொதியம்பட்டை
நெருஞ்சில்வே ரரக்குமுத்தம் நெல்லிசீந்தி
லிலுப்பையுடன் பலாசம்பூ தாமரைப்பூ
விலைக்கந்த மாம்பருப்பு நெய்தற் கந்தம்
நலப்படுவட் டத்திருப்பி வாழைக்கந்தம்
நந்தியா வட்டமதி மதுரம் நாக
லிலைப் பெருகுங் கருங்காலி தண்ணீர்முட்டா
னெலும்புருக்கி ஹரங்களென வியம்பினாரே. 5

5. எலும்புருக்கி நோய்களுக்கு மருந்து

நிலப்பனை
ஓதியம்பட்டை
அரக்கு
நெல்லி
இலுப்பை
தாமரைப்பூ
நெய்தல் கந்தம்
வாழைப்பூ
அதிமதுரம்
கருங்காலி

வெட்பாளை
நெருஞ்சில்வேர்
முத்தம்
சீந்தில்
பலாசம்பூ
மாம்பருப்பு
வட்டத்திருப்பி
நந்தியாவட்டம்
நாகஇலை
தண்ணீர்விட்டான்

சுவாசகாச ஹரம்.

கண்டுபாரங்கியிரு சங்குமா டாதோடை
காயமோ டிரு சீரமும்
கடுகுமோ தகனொச்சில் தாளக மனோசிலை
கரிசாலை பருத்தி யிலைபுங்

கானதூ துளையிந்து சாரணை விளாவிலை
கனியொடு வசம்பு குக்கில்
கரிக்கணா வெண்கருங் காலிசா திக்காயுங்
கருங்காலி யவச்சாரமும்
மண்டுகற் கடசிங்கி தேவதா ரமுள்ளி
மாஞ்சில்தா ளிசேலமும்
வள்ளைவெந் தயங்கொள்ளு வெட்பாலை
சர்க்கரை வனமுருக் கொடுபண்ணையும்
வாலுளுவை நாகேச மிலவங்கப் பத்திரியும்
மஞ்சள்தேள் சடையாயிலும்
மயிலிறகு சாம்பலும் ஆம்பல்சிற் றாமுட்டி
மருதணி யிலந்தை வித்துங்
கொண்டதிப் பிலிமூலந் தான்றிகடு நெல்லியுங்
கொன்றையொ டரத்தை யகிலுங்
கோஷ்டமொடு சீதளை தும்பைகீழ் வாய்நெல்லி
கொடிவேலியுந் திராயுங்
கூகைநீ ராவின்பால் செம்பைமுக்கத்தாரி
கோலவித் தொடு பட்டையுங்
குப்பைமே னியுமுன்னை துளசிபொன் னாவரை
குமிழிரு நெருஞ்சில் வேருந்
துண்டமா மிலவங்கப் பட்டைசிறு கொம்மட்டி
சுக்குபெரு வாகை தேற்றான்
துய்யமுள் ளங்கியுந் தழுதாளை பெருமல்லி
சொற்பொடு தலைக்காயதுந் தொடர்
கண்டங்காலியும் வில்லைவழுதளைவேருஞ்
சொற்கனா சிறுமல்லியுந்
தூயபா திரிவேரு மிளகுதேன் செவ்வியஞ்
சுவாசவிக் கலுந்தீருமே. 6

6. சுவாசகாச நோய்களுக்கு மருந்து

கண்டுபாரங்கி	இருசங்கு
ஆடாதோடை	பெருங்காயம்
நற்சீரகம்	கருஞ்சீரகம்
கடுகு	மோதகம்
நொச்சில்	தாளகம்
மனோசிலை	கரிசாலை
பருத்திஇலை	தூதுவளை
இந்து சாரணை	விளாவிலை
விளாங்கனி	வசம்பு
குக்கில்	கரிக்கணா

வெண்கருங்காலி
யவச்சாரம்
தேவதாரம்
சடா மாஞ்சில்
ஏலம்
கொள்ளு
சர்க்கரை
பண்ணை
நாகேசம்
மஞ்சள்
ஆயிலியப்பட்டை
ஆம்பல்
மருதாணி
திப்பிலிவேர்
பெருநெல்லி
அரத்தை
கோஷ்டம்
கீழ்க்காய்நெல்லி
திராய்
பசுவின் பால்

குப்பைமேனி
துளசி
குமிழ்
இலவங்கப்பட்டை
சுக்கு
தேற்றான்கொட்டை
தழுதாளை
பொடுதலைக்காய்
வில்வம்
சிறுமல்லி
மிளகு
செவ்வியம்

சாதிக்காய்
கர்கடகசிங்கி
பூண்டு
தாளிசப்பத்திரி
வெந்தயம்
வெட்பாலை
வனமுருக்கு
வாலுளுவை
இலவங்கப்பத்திரி
தேள்சடை
மயிலிறகுச் சாம்பல்
சிற்றாமுட்டி
இலந்தைக்கொட்டை
தான்றிக்காய்
கொன்றை
அகில், சீதளை
தும்பை
கொடிவேலி
கூகைநீர்
செம்பை
முக்கத்தாரி அதன்
விதையும்பட்டையும்
முன்னை
பொன்னாவாரை
நெருஞ்சில்வேர்
சிறுகொம்மட்டி
பெருவாகை
முள்ளங்கி
பெருமல்லி
கண்டங்காலி
வழுதளைவேர்
பாதிரிவேர்
தேன்

சயரோக ஹரம்.

உற்றகரி சாலையும் வெள்ளா டதின்பாலு
மோங்குமயிர் மாணிக்கமும்

உடும்பதி னிறைச்சியும் பூசணிக் காயதும்
உயர்நிலக்குமிழ் வேரதுங்
கொத்துமலி பேரீந்து முந்திரிகை யின்கனி
கோவினெய் யொடு வெண்ணெயுங்
குலவுநீர் முட்டானு மட்டவர்க்கத்துடன்
கூறுநல் லமுக்குராவுந்
தொற்றிவளர் சீந்திலும் நாகமல் லிகைவேருந்
துய்யமுத் தக்காசதுஞ்
சொற் சடா மாஞ்சிலோ டிலுப்பையின் பூவதுந்
துதிபெற்ற செந்தேனதுஞ்
சித்தமொ டுரைத்தமுன் காசசு வாசமாந்
திரவியவர்க் கங்களெல்லாஞ்
செயரோக மானதொரு கபத்துக்க ரங்களாய்ச்
செப்பினன் கும்பமுனியே. 7

7. சயரோகங்களுக்கு மருந்து

கரிசாலை
மயிர்மாணிக்கம்
பூசணிக்காய்
கொத்துமல்லி
முந்திரிப்பழம்
வெண்ணெய்
அட்டவர்ப்ப- அமுக்கரா
நாகமல்லிகை வேர்
சடாமாஞ்சில்
செந்தேன்
வெள்ளாட்டுப்பால்
உடும்புக்கரி
நிலக்குமிழ்வேர்
பேரீச்சம்பழம்
பசுவின்நெய்
தண்ணீர்விட்டான் கிழங்கு
சீந்தில்
முத்தக்காசு
இலுப்பை பூ

சுரசாதங் குரற்கம்மல் ஹரம்.

கண்டுபா ரங்கியுந் திப்பிலியின் மூலமுங்
கருவேம்பு முள்ளங்கியுங்
கரிசாலை பண்ணையும் வசம்பிலை யுருத்திராட்
சங்கன்சிர மேலமதுவும்
மண்டுதேன் செவ்வியமு முந்திரிகை கொடிவேலி
வனமணித் தக்காளியும்
வளருமா டாதோடை மிளகு திப்பிலிசிறிய
வழுதலையின் வேரானதுந்
துண்டமா மிலவங்கப் பட்டையொடு பத்திரி
சுக்குட னரத்தை யகிலுந்

துய்யகண் டங்காலி யானையின் திப்பிலி
சுகந்தமா மிலவங்கமுங்
கண்டுமுன் சொன்னதொரு காசச்சுவாசமாங்
கபங்களி னரங்களெல்லாங்
காணுங் குறற்கம்ம லானசுர சாதமாங்
கருதிய வரங்களிதுவே. 8

8. தொண்டைக்கட்டு குரல்கம்மல் நோய்களுக்கு மருந்து

கண்டுபாரங்கி
கருவேம்பு
கரிசாலை
வசம்பிலை
ஏலம்
செவ்வியம்
கொடிவேலி
ஆடாதோடை
திப்பிலி
இலவங்கப்பட்டை
சுக்கு
அகில்
யானைத்திப்பிலி
திப்பிலிவேர்
முள்ளங்கி
பண்ணை
ருத்திராட்சம்
தேன்
முந்திரி
மணித்தக்காளி
மிளகு
கத்திரிவேர்
ஜாதிப்பத்திரி
அரத்தை
கண்டங்காலி
இலவங்கம்

அரோசிக ஹரங்கள்.

திரிகடு கிஞ்சி வெல்லஞ் சீரகந் திரிசா தீகஞ்
இருகுதா தளையிந்துப்பு சிறுமூலமாது லவங்கம்
இருகுசக் கரைதா ளீசமியல் வேப்பம் பூவுஞ் செவ்யம்
அருதிநற் றிராயி னோடு மரோசிக ஹரங்களாமே. 9

9. அரோசிக நோய்களுக்கு மருந்து

சுக்கு
திப்பிலி
வெள்ளம்
தூதுளை
சிறுமூலம்
சர்க்கரை
வேப்பம்பூ
திராய்
மிளகு
இஞ்சி
சீரகம்
இந்துப்பு
மாவிலிங்கம்
தாழிசம்
செவ்வியம்

வாந்திநோய் ஹரங்கள்.

புத்தோடு நாகமாந் துளிரும் வில்வம்
பொரிதாளி பத்திரியும் பொரிமா சுக்கும்
இத்தோடு சர்க்கரைதே னிளநீர் பாலும்
இலந்தைவிரை சீரகமும் மாதுலங்கங்
கொத்தமலி மாதளையின் பழமுமுத்தங்
கொண்டவிளாங் கனியுமிருவேலிக்கந்தம்
அத்தோடு பிலங்குறைக்கும் வாந்திக்கெல்லாம்
ஹரங்களெனவே முனிவரருளினாரே. 10

10. வாந்தி நோய்களுக்கு மருந்து

புத்தோடு	நாகந்துளிர்
வில்வத்துளிர்	தாளிசபத்திரி
பொரிமா	சுக்கு
சர்க்கரை	தேன்
இளநீர்	பால்
இலந்தைவிதை	சீரகம்
மாவிலிங்கம்	கொத்தமல்லி
மாதுளம்பழம்	முத்தம்
விளாம்பழம்	இருவேலி

உருத்திரரோக ஹரங்கள்.

தசமூலம் மூக்குரட்டை யெள்ளினெண்ணெய்
சாரணையின் வேருடனே தேவதாரம்
நிசமாகு மரமஞ்சள் கூகைநீறும்
நேர்பஞ்சலவணமுடன் நெய்யுஞ் சுக்கும்
கசமாரு மரத்தையுடன் சிற்றாமுட்டி
காயமுட னரக்கிவைகள் கருதிக்கொண்டு
வசமாகும் உருத்ரவாயு வென்னும் பேராம்
மார்பினோய் ஹரங்களென வகுத்ததாமே. 11

11. ருத்திர நோய்களுக்கு மருந்து

தசமூலம்	மூக்குரட்டை
நல்லெண்ணெய்	சாரணைவேர் தேவதாரம்
மரமஞ்சள்	கூகைநீர்
பஞ்சலவணம்	நெய்
சுக்கு	அரத்தை
சிற்றாமுட்டி	பெருங்காயம்
அரக்கு	பஞ்சலவணம்

விதாகநோய் ஹரங்கள்.

இச்சைகொள் ளதிமதுர மிருவே லிலாமிச்சு
மினியமா தளையின்பழம்
இலுப்பையின் பூவதும் நெல்லியும் பேய்ப்புட
லிளநீ ருடன் சீனியும்
பச்சைக்கற் பூரமுஞ் சீந்திலும் நெய்பொரியும்
பாலுடன் பொரி மாவதும்
பற்படக நன்னாரி பச்சைப்பயற்றுநீர்
பருநிலக் குமிழ் வேரதுங்
கொச்சைமுந் திரிகையும் பேரீந்து முத்தமுங்
கொத்துமலிகைச் சந்தனங்
குளிர்ந்ததண் ணீரதுஞ் செந்தேனு மாகவே
குறித்தநன் னில வேம்பதும்
மிச்சமாய் நீருண்ட தண்ணீர்மிட்டானதும்
மேவுநற் செங்கரும்பும்
வேகமே லதுகொண்டு தாகமாய்த் தோன்றிய
விதாகநோய் ஹரங்களாமே. 12

12. விதாக நோய்களுக்கு மருந்து

அதிமதுரம்
விலாமிச்சு
இலுப்பைப்பூ
பேய்ப்புடல்
சீனி
சீந்தில்
பொரிமா 1. பால்
நன்னாரி
நிலக்குமிழ் வேர்
பேரீச்சம்பழம்
முத்தம்
சந்தனம்
செந்தேன்
தண்ணீர்விட்டான்

இருவேலி
மாதுளம்பழம்
நெல்லிக்காய்
இளநீர்
பச்சைக்கற்பூரம்
நெற்பொரி
பற்படாகம்
பச்சைப்பயறு வேகவைத்த நீர்
முந்திரிப்பழம்
கொத்தமல்லி
குளிர்ந்தநீர்
நிலவேம்பு
செங்கரும்பு

மதமூர்ச்சை ஹரங்கள்.

முந்திரிகை பேரீந்து கதலிப் பழத்துடன்
முத்தமு மிலந்தை வித்தும்
முலைப்பா லுடன்வெட்டி வேருட னிலாமிச்சு
மோரிற் றெளிந்தநீருங்

கந்தமுறு பச்சைக்கற் பூரமும் பச்சரிசி
கழுநீருஞ் சாராயமுங்
கரிபாலை நீரதும் பாலுட னிளநீருங்
கருதுபொன் னாவாரையுந்
தந்தசிறு காஞ்சோரி குழம்புமோர் கல்லுப்பு
சம்புட னிலுப்பை மலருந்
தாமரைக் கந்தமும் நெற்பொரியும் நன்னாரி
சர்க்கரையு மதிமதுரமும்
வந்தகடு தான்றியும் நெல்லியுங் கல்மதமும்
வன்பூச ணிக்காயதும்
மாதளைக்கனியதும் நெய்யுடன் திப்பிலியு
மதமூர்ச்சை ஹரங்களாமே. 13

13. மதமூர்ச்சை நோய்களுக்கு மருந்து

முந்திரிப்பழம்
வாழைப்பழம்
இலந்தைவிதை
வெட்டிவேர்
மோரிலிருந்து தெளிந்த நீர்
பச்சரிசி கழுவிய நீர்
பாலைநீர் 1. பால்
பொன்னாவாரை
கல்லுப்பு
தாமரைக்கந்தம்
நன்னாரி
அதிமதுரம்
நெல்லிக்காய்
கல்மதம்
நெய்
பேரீச்சம்பழம்
கோரைக்கிழங்கு
தாய்ப்பால்
விலாமிச்சவேர்
பச்சைக்கற்பூரம்
சாராயம்
இளநீர்
சிறுகாஞ்சோரி கெட்டியானமோர்,
இலுப்பைமலர்
நெற்பொரி
சர்க்கரை
தான்றிக்காய்
பூசணிக்காய்
மாதுளம்பழம்
திப்பிலி

சன்னாசரோக ஹரங்கள்.

சன்னாச ரோக மென்ற பித்தந்தீரத்
தலையமுந்தச் சொரிந்திடுதல் நசியம்பண்ணல்
சொன்னார்கண் ணஞ்சனமும் புகையும்போடச்
சுட்டிகையும் நகங்கடனி லூசியேற்றல்
கன்னியரே தேனீயாற் றும்பியாலுங்
கடித்திடவுஞ் செய்திடுத லுள்ளியிந்து
சன்னதிரி கடுகுடனே மாதுலங்கஞ்
சன்னாசிரோகமறு ஹரங்களாமே. 14

14. பெண்களுக்குத் தீடீரென்று வரும் மூர்ச்சை நோய்களுக்கு மருந்து.

தலையை அழுத்திச் சொரிந்துவிடுதல்
மூக்கில் நசியம் செய்தல்
கண்ணில் மை தீட்டல்
புகை போடுதல்
நகக்கண்களில் ஊசியால் குத்துதல்
தேனீ போன்றவற்றை கடிக்கவிடுதல்
பூண்டு- உப்பு- சுக்கு - மிளகு - திப்பிலி - மாவிலிங்கம்

மூலரோக ஹரங்கள்.

சாரணை பிரண்டை குழம்புமோர் கடுக்காய்
தான்றியும் நெல்லியின் காயுந்
தாமரைவளைய முள்ளிநேர் வாளஞ்
சார்கொடு வேலியுஞ் சிவதை
காரிடுங் காட்டுக் கருணையும் வெல்லங்
கரிகரு மையும்பழு பாகல்
கார்புளி கருணை புங்குசேங் கொட்டை
கரியவேம் பெள்ளுடன் மெருகுந்
தேரிடுமருளுஞ் சுக்குடன் மிளகுஞ்
செய்யதிப் பிலியவச் சாரம்
தீதறுகொட்டைக் கரந்தைகோமயமுந்
தேன்மொழி யேயின மதுகேள்
வேரெனு மிரதம் வாங்கவுஞ் சார
வேகமே யது தனக்கீய
வெந்திடச் சாரச்சூட்டினா லறுக்க
மேவிய மூலநோய்ஹரமே. 15

15. மூலரோகங்களுக்கு மருந்து

சாரணை	பிரண்டை
கெட்டியான மோர்	கடுக்காய்
நெல்லிக்காய்	தான்றிக்காய்
தாமனவகையம்	பூண்டு
நேர்வாளம்	
கொடுவேலி	சிவதை
காட்டுக்கருணை	வெல்லம்
பழுபாகல்	புளிகருணை,
கருணைக்கிழங்கு	புங்கன் விதை
சேங்கொட்டை	கருவேம்பு

எள்ளு
மருள்
மிளகு
யவச்சாரம்
கோமயம்
மெருகு சர்க்கரை கிழங்கு
சுக்கு
திப்பிலி
கொட்டைக்கிரந்தை

இரத்தமூல ஹரம்.

பூசிடவுந் திரிபுரத்தான் துத்த நாகம்
புகட்டுபேய்ப்பீர்க் கொட்டறையுஞ்சிறு தும்மட்டி
வீசுமயி லடிமரமு மிரத்தமூலம்
வெட்பாலை பாவட்டை வெங்காரந்தான்
ஆசைமிகும் நீருள்ளி தாமரைப்பூ
அரக்கொன்றை மயிலிறகு மாவின் வெண்ணெய்
வாசபெருஞ் சிவிரியுநா யுருவியிந்து
வல்லுதிர மூலத்து ஹரங்களாமே. 16

16. இரத்த மூல நோய்களுக்கு மருந்து

திரிபுரத்தான்:
துத்தநாகம்
ஒட்டறை
மயிலடி மரம்
பாவட்டை
தாமரைப்பூ
மயிலிறகு
பெரிஞ்சிவிரி
இந்து
பேய்ப்பீர்க்கு
சிறுதும்மட்டி
வெட்பாலை - வெங்காரம்
நீருள்ளி
அரக்கொன்றைப்பூ
பசுவின் வெண்ணெய்
நாயுருவி

உதரவரதன் ஹரம்.

காக்காயின் மூங்கிலானதோர் கொருக்கை
கருஞ்சிவதையு மணிப்புங்குங்
காயமுஞ்சிவதை வெளுத்த காக்கணமுங்
கருதிய தில்லையுங் கடுக்காய்
வாக்குயர் சதுரக் கள்ளிநேர் வாளம்
வடித்தகொள் ளதின்குடிநீரும்
வளருநல் வட்டக் கிலுகிலுப் பையுமே
வல்விளக் கெண்ணெய்வெள் ளுளியும்
ஆக்குதற்குரிய வேளையின் செடியும்
யானையுங் குதிரையுங் கழுதை
ஆடுட னொட்டை யெருமையும் பசுவு
மழகிய மனிதரோ டெட்டும்

ஊக்கமாய் விடுத்த மூத்திர மதுவு
முதரமே பொருமிய பிணியாம்
ஒழுங்குட னுரைத்தாற் கும்பமா முனிவ
னுதர வரதன்ஹர மிதுவே. 17

17. மகோதர நோய்களுக்கு மருந்து

கொருக்கை
மணிப்புங்கு
சிவதை
தில்லை
சதுரக்கள்ளி
வேகவைத்த கொள்ளுக் குடிநீர்
விளக்கெண்ணெய்
தைவேளை
குதிரை
ஆடு
எருமை பசு, மனிதர் மூத்திரங்கள்
கருஞ்சிவதை
பெருங்காயம்
வெள்ளைக்காக்கணம்
கடுக்காய்
நேர்வாளம்
வட்டக்கிலுகிலுப்பை
வெள்ளைப்பூண்டு
யானை
கழுதை
ஒட்டகம்

அதிசார ஹரம்.

வட்டத் திருப்பியும் வெட்பாலை யின்வித்து
மாம்பருப் பொடு பட்டையும்
வரட்சுண்டி புளியதின் வித்துவேர் புறணியும்
வரப்பினில பூலாவதும்
மாதுளங் காயதும் வில்லையி னிளங்காயும்
வன்னிளந் தும்பியின்காய்
வாழைதென் னம்பூவு மாத்தியின் பூவதும்
வாசலவங் கப்பூவதும்
விட்டக் கொடிக்கழல் வித்துநீர்ப்பூலாவு
மேவுநீர் முள்ளி வித்தும்
வெட்டிவேர் பாலையின் பட்டைசா திக்காயும்
விடத்தேரி யானவிலையும்
வேங்கையின் பட்டையும் நெற்பொரியுமாகவே
மேவுமஞ் சிலை துளிரதும்
வெள்ளிறகு வித்துடன் சீரகம் பேரீந்து
மேவுதிப் பிலி லோத்திரந்
தொட்டக்கருங்காலி நாவலின் பட்டையுந்
துளிருடன் கடுக்காயதுந்
தோதுசிறு காஞ்சோரி பெருமரப்பட்டையுஞ்
சுக்குமில வம்பிசினதுந்

துய்யபால் நல்லெண்ணெய் முத்தமச மோதகஞ்
சொற் கடப்பன் பட்டையுந்
துலங்குகீழ் காய்நெல்லி வெட்பாலை யின்பட்டை
துய்யவெண் குங்கிலியமும்
அட்டதிக் கெங்குமிகு சித்தர்களு மெச்சிமகி
ழருஞ்சடைக் கஞ்சாவதும்
ஆவாரை யின்பட்டை நெய்யுடன் செந்தேனு
மாவிநற் றயிரானதும்
அதிவிடைய முந்தில்லை வெள்ளாட்டுத்தயிருட
னானதோர் வகையிதெல்லாம்
அரிதெனப் பொதிகையிற் கும்பமுனி யருளிய
வதிசார ஹரங்களாமே. 18

18. பேதி நோய்களுக்கு மருந்து

வட்டத்திருப்பி
மாம்பருப்பு
வரட்சுண்டி
புளியன் விதை மேற்புரணி
மாதுளங்காய்
வாழைப்பூ
ஆத்திப்பூ
கொடிக்கழல் வித்து
நீர்முள்ளி வித்து
பாலைப்பட்டை
விடத்தேரி இலை
நெற்பொறி
சீரகம்
திப்பிலி
கருங்காலி
கடுக்காய்
பெருமரப்பட்டை
இலவம்பிசின் - பால்
ஓமம் - முத்தம்
கீழ்க்காநெல்லி
வெண்குங்கிலியம்
ஆவாரைப்பட்டை
பசுவின் தயிர்
அதிவிடையம்

வெட்பாலைவித்து
மாம்பட்டை
புளியன்விதைவேர்
நிலா - பூலா
வில்வம்பிஞ்சு
தென்னம்பூ
இலவங்கப்பூ
நீர்ப்பூலா
வெட்டிவேர்
சாதிக்காய்
வேங்கைப்பட்டை
வெள்ளிறகுவித்து,
பேரீச்சம்பழம்
லோத்திரம்
நாவல்பட்டை- துளிர்
சிறுகாஞ்சோரி
சுக்கு
நல்லெண்ணெய்
கடப்பன்படடை
வெட்பாலைப்பட்டை
சடைக்கஞ்சா
பசுவின்நெய்
செந்தேன்
வெள்ளாட்டுத் தயிர்

கிராணி ஹரம்.

ஆயிலும் புங்கு பொடு தலைக்காயு
மழிஞ்சியுங் குழம்புமோ வசம்பும்
அதிநவச் சாரஞ் சத்தியின் சார
மாகிய நல்லவச் சாரந்
தீயிலும் பெரிய சித்திர மூலந்
திரிகடு சிறியமூலகமுஞ்
செவ்வியம் பற்பா டகங்கரு வேம்பு
சீரகங் காயமூக்குரட்டை
பாயிலு முட்கா வேளைகா வட்டம்
பருகிய புல்லுநல் வேளை
பகர்புளி யாரை யிந்து கல்லுப்பு
பாகுகாய்ச் சுப்புபொட்ளுப்பு
சாயினுங் கருத்த வப்புசாரணையுஞ்
சாருமா வாரைதக் கோலந்
தாவுவெங் கார மாரையினிலையுஞ்
சாற்றினர் கிராணியின் ஹரமே. 19

19. விடாத பேதிகளுக்கு மருந்து

ஆயில்புங்கு	பொடுதலைக்காய்
அழிஞ்சி	கெட்டியான மோர்
வசம்பு - நவச்சாரம்	செவ்வியம்
பற்படாகம்- சத்திச்சாரம்	கருவேம்பு
சீரகம் - யவச் சாரம்	பெருங்காயம்
மூக்குரட்டை-சித்திரமூலம்	முட்காவேளை
நல்வேளை - சுக்கு	காவட்டம்புல்
புளியாரை-மிளகு	இந்து
கல்லுப்பு- திப்பிலி	காய்ச்சியஉப்பு
பொட்டிலுப்பு- சாரணை	கருத்தஉப்பு
ஆவாரை	தக்கோலம்
வெங்காரம்	ஆரையிலை

மந்தாக்கினி ஹரம்.

சாற்றின ரதிசாரத்திற் றாவிய மருத்தி னோடு
மாற்றிய கிராணி காண வகையுள்ள திரவியங்கள்
ஏற்றமா யீதிரண்டு மியல்மந்தாக் கினிக்குமாகுந்
தோற்றமாய் முனிவன்சொன்ன துய்யநல் ஹாரங்களாமே.20

20. மந்தத்தினால் உண்டாகும் வெப்புநோய்களுக்கு மருந்து

அதிசாரம், கிராணி ஆகிய நோய்களுக்குச் சொன்ன மருந்துகளே இதற்கும் பொருந்தும்.

விசூழி ஹரம்.

முன்னமேநீரி லுப்பதைக் கரைத்து
முயல்பெறக் குடித்தபின் சத்தி
முனைந்துசெய்வித்தல் கரிசாலைச்சாறு
மூக்கிலை நசியமே பண்ணல்
சொன்னநல் லவரை யிலைதனைக்கருக்கிச்
சுக்குடன் காய்ந்தநீ ருண்ணல்
துய்யகால் குதியைக்காச்சவுங் கையான்
சுத்தசா றதனில்வெங்காரங்
கன்னியே பொரித்துக் கொடுக்கவுங் கால்கைக்
கணுவினிற் சேலையாற் சுற்றிக்
கட்டியே வைத்து நல்லிரு விழியிற்
கருது மஞ்சனமிட வகைகேள்
மன்னுநற் சுக்கு மிளகுதிப்பிலியும்
வகையுட னிவைகளாற் செய்ய
வாங்குமென் றுரைத்தார் விசூழியின்ஹரங்கள்
வகுத்திடுங் கும்பமா முனியே. 21

21. விசூழிஹரம்

நீரில் உப்பைக்கரைத்து குடிக்கச் செய்து வாந்தி உண்டாக்கச்செய்தல்
மூக்கில் கரிசாலைச் சாற்றை நசியம்பண்ணுதல்
அவரை இலையை கருக்கி சுக்குடன் போட்டு கொதிக்கவைத்து நீர் குடித்தல்
குதிகால்களை தேய்த்து சூடு உண்டாக்கல்
கரிசாலை சாற்றில் வெங்காரம் பொரித்துக் கொடுத்தல்
கால், கைகளை துணியால் சுற்றிக் கட்டி வைத்து கண்களில் அஞ்சனமிடல்

சுக்கு
மிளகு
திப்பிலி இவைகளுமாம்.

மூத்திரக்கிரிச்சர ஹரம்.

அதிமது ரஞ்சிறு நாணலுந் தெற்பையு
மரிய நெருஞ்சில் துரா
யானைநெருஞ்சில் கரும்பொடு சந்தன
மாவதின் நெய்பாலும்
மதியுறு சூரிய காந்தியும் பூசணி
வங்க மதின் பற்பம்

மகிழம் பூசிறு கீரையுநெல்லியு
மணலியுங் கவுதும்பை
விதியுறு தேற்றான் வித்தொடு முந்திரி
வெள்ளரி யிளநீரும்
வெள்ளிற குடனீர் முள்ளிபொன் னாங்கணி
மேவிய மரமஞ்சள்
முதிருறு சீந்திலு மேலமு டன்னீர்
முத்தமு நிம்பஞ் சர்க்கரை யாவும்
முட்டான் பிரமியது
மூத்திரக் கிரிச்சர ஹரமே. 22

22. மூத்திர ரோகங்களுக்கு மருந்து

அதிமதுரம்	சிறுநாணல்
தர்ம்பை	நெருஞ்சில்
யானைநெருஞ்சில்	துறா
கரும்பு	சந்தனம்
பசுவின்நெய்	பசுவின் பால்
சூரியகாந்தி	பூசணி
வங்கபற்பம்	மகிழம்பூ
சிறுகீரை	நெல்லி
மணலி	கவுதும்பை
தேற்றான்வித்து	முந்திரி
வெள்ளரி	இளநீர்
பொன்னாங்காணி	நீர்முள்ளி
மரமஞ்சள்	சீந்தில்
ஏலம்	நீர்முத்தம்
எலுமிச்சை	சர்க்கரை
தண்ணீர்விட்டான்	பிரமி

அசுமரிரோகங் கற்கட்டு ஹரம்.

கருத்தமுந் திரிகையுங் கொள்ளதின் குடிநீருங்
கனமத மெவச்சாரமுங்
கருதுகற் பூரச் சலாசத்து பாலையுங்
கந்தமா முத்த மதுவும்
வெருத்த முதிகூந்தலுஞ் சிவதை வெங்காரமும்
வெட்டிவேர் வறட்சுண்டியும்
விளக்கெண்ணெய் சாரணை தண்ணீர் மிட்டானதும்
விளாம்பிசின் விழுதினிலையும்

முரித்த சிறு பீளையும் மாவிலிங்கப்பட்டை
முருங்கையின் பட்டையதுவும்
மூக்குரட் டையின்வேரு மரியநீர்ப் பூலாவு
முந்து மதி மதுரமதுவும்
அருத்தகற் பச்சையாம் பாக்குட னிவையெலா
மருக்குநீர்க் கிரிச்சமான
அரியகற் கட்டெனுமிரோகமென்றுரை செய்யு
மசுமரி ஹரங்களாமே. 23

23. கல்லடைப்பு நோய்களுக்கு மருந்து

கருப்பு முந்திரி
கன்மதம்
கற்பூரசிலாசத்து
கோரைக்கிழங்கு
சிவதை
வெட்டிவேர்
விளக்கெண்ணெய்
தண்ணீர்விட்டான்
விழுதி இலை
மாவிலிங்கப் பட்டை
மூக்குறட்டைவேர்
அதிமதுரம்
பாக்கு
கொள்ளுக்குடிநீர்
எவச்சாரம்
பாலை
முதியார் கூந்தல்
வெங்காரம்
வறட்சுண்டி
சாரணை
விளாம்பிசின்
சிறுபீளை
முருங்கைப்பட்டை
நீர்ப்பூலா
கற்பச்சை

பிரமேகஹரம்.

கொண்டநல் லாவாரை கடலழிஞ்சிப்பட்டை
கோவைக் கிழங்கினுடனே
குழம்புமோ ரிருமஞ்சள் பருத்தியின் வித்துடன்
குன்றியின் விரைசீந்திலுங்
கோஷ்டமொடு பேயத்திபட்டை சேங்கொட்டையுங்
குக்குல் பொன்னாங் காணியுங்
கோரைக் கிழங்குடன் காந்தமண்டூரமுங்
குலவுதேற்றான் கொட்டையும்
மண்டுநாவற்பட்டை பாலை மருதம்பட்டை
வட்டத் திருப்பி வேரும்
வாசந்தரும்விளாம் பட்டைநிலை யாவாரை
வன்சிறு பயற்று நீரும்
வாகை நிம்பப்பிசின் விடத்தேரி யின்பிசின்
வன்கருங் காலி வெள்வேல்

வகையாம் விளாம்பிசின் கருவேலதன்பிசின்
வன்பலா சம்பி சினதுங்
கண்டதா மரைவித்து முகட்டையின்னிலை வித்து
கருதுநீர் முள்ளி வித்து
கரியவேப்பிலையுடன் மூங்கிலிலை யல்லிவிரை
கடுஞ்சிறு நெருஞ்சி வித்துங்
கானப்ப லாசதின் பட்டைதென் னம்பூவுங்
கடியபூ வரசு மலருங்
கருதுகற் பூரச் சலாசத்து மப்பிரகங்
கடுநாக செந்தூரமும்
அண்டர்கொள் தேனதுந் தேங்காயி னெண்ணெயு
மரியநல் லெண்ணெயதுவும்
அரிதான சீனியு முருங்கையின் பட்டையு
மருநிலப் பனைக்கந்தமும்
அழகாங் கரும்பனைக் கந்த முந்துத்தி விரை
யதுவுடன் திரிபலையதும்
ஆனபேராமுட்டி யிவையெலாம் பிரமேக
ஹரங்களாந் திரவியங்கள். 24

24. நீரிழிவு நோய்களுக்கு மருந்து

ஆவாரை
கோவைக்கிழங்கு
கிழங்கு மஞ்சள்
பருத்தி விதை
சீந்தில்
பேயத்திப்பட்டை
குங்கிலியம்
கோரைக்கிழங்கு
தேற்றான்பட்டை
மருதம்பட்டை
வட்டத்திருப்பிவேர்
நிலையாவாரை
வேப்பம்பிசின்
கருங்காலிவ் பிசின்
விளாம்பிசின்
பலாசம் பிசின்
முகட்டையின் இலையும் விதையும்
கரிவேப்பிலை
அல்லி விதை
பலாசம்பட்டை

கடலழிஞ்சிப்பட்டை
கெட்டியான மோர்
மர மஞ்சள்
குன்றிவிதை
கோஷ்டம்
சேங்கொட்டை
பொன்னாங்காணி
காந்த மண்டூரம்
நாவற்பட்டை
பாலைப்பட்டை
விளாம்பட்டை
சிறுபயற்றுநீர்
விடத்தேரி பிசின்
வெள்வேலின் பிசின்
கருவேல் பிசின்
தாமரை வித்து
நீர்முள்ளிவித்து
முங்கிலிலை
சிறுநெருஞ்சி விதை
தென்னம் பூ

பூவரசம்பூ
கற்பூர சிலாசத்து
அப்ரகம்
நாக செந்தூரம்
கொள்ளு
தேன், சீனி,
தேங்காய் எண்ணெய்
நல்லெண்ணெய்
முருங்கைப்பட்டை
நிலப்பனை கந்தம்
கரும்பனை கந்தம்
துத்திவிரை
திரிபலை
பேரா முட்டி

மேகக்கட்டி ஹரம்.

ஏலமுடன் மலை வேப்பம் பிசினுங் கோஷ்டம்
இலவங்கப் பத்திரியும் வெட்டி வேருஞ்
சாலகரும் போளமகில் குந்தி ரிக்கந்
தவுணேயம் வெள்ளியந் தேவதாரம்
பாலையதின் பட்டையிலா மிச்சவேரும்
பருங்கிரந்தி தகரமுடன் குக்கில் போளம்
வேலையதி நாகணமுஞ் சுக்கு மஞ்சள்
மேகத்தின் கட்டிகளுக் கரங்களாமே. 25

25. மேகத்தினால் உண்டாகும் கட்டிகளுக்கு மருந்து

ஏலம்
மலைவேப்பம் பிசின்
கோஷ்டம்
இளவங்கப் பத்திரி
வெள்ளியம்
தேவதாரம்
அகில்
குந்திரிக்கம்
வெட்டிவேர்
கரும்போளம்
பாலைப்பட்டை
விலாமிச்சம்வேர்
கிரந்திதகரம்
குங்கிலியம்
போளம்
அதிநாகணம்
சுக்கு
மஞ்சள்

சோமரோக ஹரங்கள்

செய்யவுளுந் ததிமதுரம் நெருஞ்சில் வேருந்
தேற்றான்வித் தேலமுடன் சீந்திற்சத்தும்
வெய்யநிலப் பனைக்கந்தம் பனையின்கந்த
மிலாமிச்சு முந்திரிகை வெட்டிவேருந்
தையலே வாழையதின் பழமுங் கந்தந்
தாமரைப்பூக் கந்தமுடன் தண்ணீர்முட்டான்
துய்யநறு சந்தனமும் நெல்லிசீனி
சோமரோ ஹரங்களெனச் சொன்னதாமே. 26

26. சோம ரோக நோய்களுக்கு மருந்து

உளுந்து
நெருஞ்சில் வேர்
ஏலம்
நிலப்பனைக்கந்தம்
விலாமிச்சு
வெட்டிவேர்
தாமரைப்பூ கந்தம்
நறுஞ்சந்தனம்
சீனி
அதிமதுரம்
தேற்றான்வித்து
சீந்தில் சத்து
பனைக்கந்தம்
முந்திரி
வாழைப்பழம்
தண்ணீர்விட்டான்
நெல்லி

விப்புருதி ஹரங்கள்.

சார்மணிப் புங்கும் விழுதியி னிலையுந்
தாணியும் நெல்லியுங் கடுக்காய்
சாரணை தவசி முருங்கையின் வேருந்
தாவுநன் முருங்கையின் வேருங்
கூர்மிகுங் கற்பூ ரச்சலா சத்துங்
கூகைநீ ராயிலும் புங்குங்
கொடியகண் டகாரி சிறுவழு தலையுங்
கூருமா விலங்கைமூக் குரட்டை
பார்மிகு நிம்ப மமுக்குரா வொதியின்
பட்டைமை சாட்சிபேய்ப்புடலும்
, பகர்கொடி வேலி வெட்டிவேர்நாவல்
பட்டையும் நல்லிலா மிச்சுஞ்
சீர்மிகு வயிற்றில் விப்புருதிக்குஞ்
சிறந்தமேல் விப்புருதிக்குந்
தின்னவும் பற்றுப்போடவும் வயிற்றிற்
சேர்ந்தவிப் புருதிஹரங்களாமே. 27

27. முளையுள்ள கட்டிகளுக்கு மருந்து

புங்கு
நெல்லிக்காய்
தான்றிக்காய்
முருங்
நன்முருங்கை வேர்
கூகைநீர்
புங்கம்பட்டை
சிறுவழுதலை
மூக்குரட்டை
விழுதிஇலை
கடுக்காய்
சாரணை
தவசி முருங்கை வேர்
கர்ப்பூர சிலாசத்து
ஆயிலியப்பட்டை
கண்டகாரி
மாவிலிங்கை
வேப்பம்பட்டை

அழுக்குராபட்டை
ஓதியம்பட்டை
மைசாட்சி
பேய்ப்புடல்
கொடிவேலி
வெட்டிவேர்
நாவல்பட்டை
விலாமிச்சு

தனவிப்புருதிகள் ஹரம்.

எள்ளுடனே மருதாணி யிலையும் பட்டை
யிருவேலி யாவாரை யிலைநன்னாரி
அள்ளியநல் லதிமதுரங் குமரிமஞ்சள்
ஆம்பலுட னரசந்தோ லாலம்பட்டை
வெள்ளைமிகு மாவின்நெய் புங்கம்வேரு
மேவியநல் லத்தியொடு வேப்பம்பட்டை
தள்ளியிதை யரைத்துடனே மேலும்பூசத்
தனத்திலெழும் விப்புருதி ஹரங்களாமே. 28

28. மார்புக் கட்டிகளுக்கு மருந்து

எள்ளு
மருதாணி இலையும்பட்டையும்
இருவேலி
ஆவாரையிலை
நன்னாரி
அதிமதுரம்
குமரிமஞ்சள்
ஆம்பல்
அரசந்தோல்
ஆலம்பட்டை
பசுவின்நெய்
புங்கம்வேர்
அத்திப்பட்டை
வேப்பம்பட்டை

கெற்பவிப்புருதி ஹரம்.

காயமுட னிந்துப்பு பற்படாகங்
கழல்விரையும் பாவட்டை கரந்தைப்பூண்டு
நாயுருவி கொடிவேலி பிரண்டையுள்ள
நல்லெண்ணெய் விளக்கெண்ணெய் முடக்கொத்தானும்
தூயநறுஞ் சீரகமும் வசம்புவீழி
துடியான சாரணையின் வேரிதெல்லாம்
மாயவரும் பிணிகளுக்கு அதிகமான
வன்கெற்ப விப்புருதி ஹரங்களாமே. 29

29. கர்ப்ப சம்பந்தமான கட்டிகளுக்கு மருந்து

பெருங்காயம்
இந்துப்பு
பற்படாகம்
கழல்விதை
பாவட்டை
கரந்தைப்பூண்டு
நாயுருவி
கொடிவேலி

பிரண்டை
விளக்கெண்ணெய்
சீரகம்
வீழி
நல்லெண்ணெய்
முடக்கொத்தான்
வசம்பு

குன்மரோக ஹரங்கள்.

கடிதான நொச்சிலு முழவுமண் குடிநறுங்
கருதுமுழ வூருநீரும்
காட்டாமணக்குடன் சிறுமல்லி பெருமல்லி
கருவேம்பு தாணிநெல்லி
கடுக்காயும் புங்குடன் பஞ்சலவணஞ்சுக்கு
கரந்தையுமெ வச்சாரமுங்
காயமுட னொட்டறையு மாயிலின் பட்டையுங்
கழல்விரையு முள்ளங்கியும்
வடிவான புளியன் புறணியின் சாம்பலும்
வன்பனைப் பூச்சாம்பலும்
வாலுளுவை சீந்தியுஞ் சிறியதும் மட்டியும்
வனமுருக் கிளநீரதும்
வசம்புகண் டங்காலி யுள்ளிசிறு வழுதலையு
மாவிலிங் கப்பட்டையும்
மாதுளம் பழநிம்பு நாரத்தை யின்பழம்
மருவுசது ரக்கள்ளியும்
திடமான சத்தியின் சாரமும் வேளையுந்
தேவதா ரமும் வில்வமுஞ்
சீரகந் தழுதாழை பாதிரியின் வேரதுந்
திப்பிலி மூலமதுவுஞ்
சித்திர மூலியு மாற்றினிற் சிவிறியுஞ்
செவ்வியந் திப்பிலியதுஞ்
சீரான புளியாரை நெருஞ்சியின் வேரதுஞ்
சேருங்கருஞ் சீரமுங்
கொடிதான சாரணை மூக்குரட்டையின் வேருங்
குலவுநல் லெண்ணெ யதுவுங்
கூகைநீ ராவின்பால் புளிகருணை யின்கந்தங்
குப்பையின் மேனியதுவுங்
கொள்ளதின் குடிநீரு மேரண்ட வெண்ணெயுங்
குமிழதின் வேரிதெல்லாங்
கொடியகுன் மங்களும் பீலிகை ஹரமென்று
குறுமுனி யுரைத்தபடியே. 30

30. குன்ம ரோகங்களுக்கு மருந்து

முழவுமண்
நொச்சில்
சிறுமல்லி
கருவேம்பு
கடுக்காய்
புங்கு
சுக்கு, காயம்,
எவச்சாரம்
ஆயில்பட்டை
முள்ளங்கி
பனம்பூ சாம்பல்
சீந்தில்
னனமுருக்கு
வசம்பு
பூண்டு
மாவிலிங்கப்பட்டை
எலுமிச்சம்பழம்
சதுரக் கள்ளி
தேவதாரம்
வில்வம்
தழுதாழை
திப்பிலி வேர்
செவ்வியம்
புளியாரை
கருஞ்சீரகம்
மூக்குரட்டை வேர்
கூகைநீர்
புளிகரணையின் கந்தம்
கொள்ளுக் குடிநீர்
குமிழ்வேர்
முழுவு நீர்
காட்டாமணக்கு
பெருமல்லி
நெல்லிக்காய்
தானிக்காய்
பஞ்சலவணம்
கரந்தை
ஒட்டறை
கழல்விதை
புளியன் புரணியின் சாம்பல்
வாலுளுவை
சிறியதும்மட்டி
இளநீர்
கண்டங்காலி
சிறுவழுதலை
மாதுளம்பழம்
நாரத்தம் பழம்
சத்திச்சாரம்
தைவேளை
சீரகம்
பாதிரிவேர்
சித்திர மூலி
திப்பிலி
நெருஞ்சி வேர்
சாரணை
நல்லெண்ணெய்
பசுவின் பால்
குப்பைமேனி
விளக்கெண்ணெய்

இரத்தகுன்ம ஹரம்.

திடமான புங்கம்வே ராயில்பட்டை
சிறியவழு தலைவேருங் கண்டங்காலி
கொடிவேலி சாரணையு மூக்குரட்டை
கொள்ளுடனே வெள்ளுள்ளி யெள்ளுகாயம்
வடிவான முள்முருக்க னிலையும் பட்டை
வனமுருக்கன் றோற்சாம்ப லெவச்சாரந்தான்

கடிதான விரத்த குன்ம மென்றும்பேராய்க்
　　கருதுவார் சத்திகுன்ம ஹரங்களாமே. 31

31. இரத்த குன்ம நோய்களுக்கு மருந்து

புங்கம்வேர்
சிறுவழுதலை வேர்
கொடிவேலி
மூக்குரட்டை
வெள்ளைப்பூண்டு
பெருங்காயம்
ஆயிலிபட்டை
கண்டங்காலி
சாரணை
கொள்ளு
எள்ளு
முள்ளு முருங்கமரத்தின் இலையும், பட்டையும்
வனமுருங்கைப்பட்டையின் சாம்பல்
எவச்சாரம்

வாதசூலை ஹரம்.

கச்சசா ரணைவேரும் மூக்குரட்டை
　　கழல்விரையுந் திரிகடுகுங் காயம்நொச்சில்
நச்சுகொடி வேலியுட னுள்ளி காயம்
　　நல்லெண்ணெய் விளக்கெண்ணெய் களறு காயும்
பச்சையா மெவச்சாரஞ் சத்திச்சாரம்
　　பஞ்சலவ ணம்புரசு வம்புவேளை
வச்சதிப் பிலிமூலஞ் செவியங் கொள்ளும்
　　வாதமிகுஞ் சூலைகுன்ம ஹரங்களாமே. 32

32. வாத சூலை நோய்களுக்கு மருந்து

சாரணைவேர்
கழல்விதை
மிளகு
பெருங்காயம்
கொடிவேலி
நல்லெண்ணெய்
எவச்சாரம்
பஞ்சலவணம்
திப்பிலி வேர்
கொள்ளு
மூக்குரட்டை
சுக்கு
திப்பிலி
நொச்சில்
பூண்டு
விளக்கெண்ணெய்
சத்திச்சாரம்
புரசு - தைவேளை
செவியம்

மகோதர ஹரம்.

நஞ்சுபோக் கினவாள முள்ளியும் பெருங்காயம்
　　நல்லெண்ணெய் விளக்கெண்ணெயும்

நாகண மெவச்சாரஞ் சத்தியின் சாரமும்
நன்மணிப் புங்குவித்தும்
பஞ்சலவ ணம்வட்டக் கிலுகிலுப் பைச்செடி
பலாசதின் சாம்பலதுவும்
பாங்கான தாணியும் நெல்லியின் காயதும்
பண்ணுதில் லஞ்செடியதுங்
கொஞ்சுதிப்பிலிசுக்கு வெள்ளையின் காக்கணா
கொடியகள் ளிப்பாலதுங்
கூறுகள் ளிக்கரிலோத்திர மகிற்கட்டை
கொடிவேலி யுஞ்சிவதையும்
வஞ்சமேயில்லாத பசுவிட்ட நீரதும்
வரிகடுக் காயிதெல்லாம்
மாதரின் மயலாசை யிடுமருந்தால்வரும்
மகோதர ஹறங்களாமே. 33

33. மகோதர நோய்களுக்கு மருந்து

நஞ்சு போக்கிய நீர் வாளம்	முள்ளி
பெருங்காயம்	நல்லெண்ணெய்
விளக்கெண்ணெய்	நாகணம்
எவச்சாரம்	சத்திச்சாரம்
புங்கன்விதை	பஞ்சலவணம்
வட்டக் கிலுகிலுப்பை செடி	பலாசத்தின் சாம்பல்
நெல்லிக்காய்	தானிக்காய்
தில்லஞ்செடி	திப்பிலி
சுக்கு	வெள்ளைக்காக்கணங்கொடி
கள்ளிப்பால்	கள்ளிக்கரி
லோத்திரம்	அகிற்கட்டை
கொடிவேலி	சிவதை
வரிக்கடுக்காய்	கோமயம்

பாண்டு ரோக ஹறம்

திரிகடு கெருமைமோருஞ் சிறந்தவெள் ளாட்டுமோருங்
குருகுமண் டூரலோகங் கொடிவேலி கோவின் நீரும்
அருகுவாய் விளங்க முத்த மாட்சிக மிருமஞ்சள்தான்
பரிகடு தான்றி நெல்லி பாண்டுவி னரங்க ளாமே. 34

34. பாண்டு ரோகங்களுக்கு மருந்து

சுக்கு	மிளகு
திப்பிலி	எருமை மோர்

வெள்ளாட்டு மோர் மண்டூரம்
கொடிவேலி கோமயம்
வாய்விளங்கம் முத்தம்
மாட்சிகம் கிழங்குமஞ்சள்
வேர் மஞ்சள் கடுக்காய்
நெல்லிக்காய் தான்றிக்காய்

காமாலை ஹரம்

சுக்குபுட லதிமதுரம் நெல்லிசிறுக் கீரை
துய்யபொன்னாங் காணிமுத்தஞ் சந்தனமுங்கடுக்காய்
மிக்ககரி சாலையுடன் கோஷ்ட மயிலடியும்
மேதியுடன் வெள்ளாட்டுக் குழம்புமோர் சீந்தில்
தக்கசிறு பயறுபால் நெய்யொடுமான் கொம்பு
தருகீழ்காய் நெல்லிசதா வரியுமிரு வேலி
கைக்குநடு மணிக்கட்டி லிரட்சையது போடக்
காமாலை ஹரங்களெனக் கருதுமுனியுரைத்தார். 35

35. காமாலை நோய்களுக்கு மருந்து

சுக்கு புடல்
அதிமதுரம் நெல்லி
சிறுகீரை பொன்னாங்காணி
முத்தம் சந்தனம்
கடுக்காய் கரிசாலை
கோஷ்டம் மயிலடி
எருமை மோர் வெள்ளாட்டு மோர்
சீந்தில் சிறுபயறு
பால் நெய்
மான்கொம்பு கீழ்க்காய்நெல்லி
சதாவரி இருவேலி

சோகை ஹரம்.

மேவுசா ரணைவேரு நாகண மரத்தையும்
வெள்ளாட்டுநீர் சாணமும்
வேளையு மெவச்சாரங் கோமயங் கொடுவேலி
வெள்ளிறகு காக்கணானுந்
தாவுநேர் வாளமும் பஞ்சகோ லமுமஞ்சள்
தருமணிப் புங்குவித்துந்
தசமூலம் பிரமியு மிஞ்சிபா வட்டையுஞ்
சார்குழம் பானமோரும்

பாவுநீர் முள்ளிவட்டக்கிலு கிலுப்பையும்
பருதேவ தாரமதுவும்
பாங்கான வெள்ளுள்ளி சிவதைசங் கன்வேரும்
பண்ணுபேய்ப் பீர்க்கினுடனே
தூவுநற் கடுக்காயும் விழுதியி னிலையதுஞ்
சுத்தலோ கப்பொடியதுந்
தோகையே யிவையெலாம் முனிவனு முரைத்தபடி
சோகையின் ஹரங்களாமே. 36

36. சோகை நோய்களுக்கு மருந்து

சாரணை வேர்
அரத்தை
தைவேளை
கோமயம்
வெள்ளிறகு
நேர்வாளம்
மஞ்சள்
தசமூலம்
இஞ்சி
கெட்டியான மோர்
வட்டக்கிலுகிலுப்பை
வெள்ளைப்பூண்டு
சங்கன்வேர்
கடுக்காய்
உலோகப் பொடிகள்.
நாகணம்
வெள்ளாட்டு மூத்திரம் சாணமும்
எவச்சாரம்
கொடுவேலி
காக்கணான்
பஞ்சகோலம்
புங்கன்விதை
பிரமி
பாவட்டை
நீர்முள்ளி
தேவதாரம்
சிவதை
பேய்ப்பீர்க்கு
விழுயிலை

விசற்பியாகிய விழற்பாக ஹரம்.

செய்யசெங் கழுநீரும்நெய்தற் கிழங்குடன்
செஞ்சந்த னங்கோஷ்டமும்
சீந்திலதி மதுரமுந் தாமரைக் கந்தமுந்
திரமான கொடி வேலியுந்
துய்யபா லைப்பட்டை வெள்ளிறகு சந்தனந்
துளசிவெம் பாவி னெய்யுஞ்
சொல்லிலாம் பிச்சமும் வெட்டிவேர் வள்ளியுஞ்
சுகந்தநன் னாரி யெள்ளும்
வையகம் புகழ்கோரைக் கந்தமுங் கத்தியிலை
வசம்புகிளி மூக்கிலையதும்
மருவுசக் கரவர்த்தி யிலையுடன் பூவரசு
மன்னுகீழ் காய்நெல்லியும்

வெய்யபெரு நன்னாரி யறுகுமா லம்விழுது
மேவுதென் னம்பூவதும்
விசற்பியென் றுரைசெயும்விழற்பாக ஹரங்களாய்
வேதமுனி கூறு மொழியே. 37

37. விசற்பி ஆகிய நோய்களுக்கு மருந்து

செங்கழுநீர்
கோஷ்டம்
சீந்தில்
தாமரைக்கந்தம்
பாலைப்பட்டை
சந்தனம்
பசுநெய்
வெட்டிவேர்
நன்னாரி வேர்
கோரைக்கந்தம்
வசம்பு
சக்கரவர்த்தி இலை
கீழ்க்காய் நெல்லி
அறுகு
தென்னம் பூ
செஞ்சந்தனம்
நெய்தல்கிழங்கு
அதிமதுரம்
கொடிவேலி
வெள்ளிறகு
துளசி
விலாமிச்சம் வேர்
வள்ளிவேர்
எள்ளு
கத்தி இலை
கிளிமூக்கிலை
பூவரசு
நன்னாரி
ஆலம் விழுது

வசூரி ஹரம்.

நல்லாடா தோடையொடு பேய்ப்பு டோலும்
நறு நெய்யும் வேப்பம்வேரிலையும் நெல்லி
சொல்லாநீர் முட்டானுங் கொள்ளுமஞ்சள்
துராயுடனே மணிப்புங் கும்விபூதிமுத்தம்
புல்லாகு மறுகுடனே பெருஞ்செங் குன்றி
பூநிம்பஞ் செருப்படைகற் பூரவல்லி
வல்லாரை யிலையதுவுங் கொடுப்பைமையான்
வசூரிகளுக்கரமாக வகுத்ததாமே. 38

38. வைசூரி நோய்களுக்கு மருந்து

ஆடாதோடை
நல்லநெய்
வேப்பிலை
தண்ணீர்விட்டான்
மஞ்சள்
மணிப்புங்கு
பேய்ப்புடல்
வேப்பம்வேர்
நெல்லி
கொள்ளு
துராய்
விபூதி

முத்தம்
அறுகு
செங்குன்றி
செருப்படை
கற்பூரவல்லி
வல்லாரை
கொடுப்பை

சீதபித்த ஹரம்.

நல்லதோர் விபூதி யிந்து
நல்லெண்ணெய் மிளகுத் தூளும்
வெல்லுநற் கடுகு மோதம்
விலாமிச்சு வேரு நெய்யுஞ்
சில்லெனுஞ் சந்தனங்கள்
சீந்தியி னிலையி தெல்லாஞ்
செல்லுடல் சீதபித்தத்
திரவிய ஹரங்களாமே. 39

39. சீத பித்த நோய்களுக்கு மருந்து

விபூதி
இந்து
நல்லெண்ணெய்
மிளகுத்தூள்
கடுகு
ஓமம்
விலாமிச்சுவேர்
நெய்
சந்தனங்கள்
சீந்திலிலை

குஷ்டனோய் ஹரம்.

முந்துசாரணைவேம்பு கெந்தி மருக்காரை
மூங்கில்விரை கார்போகி அழிஞ்சிவிரை புங்கு
முத்தமணித் தக்காளி திரிபலையும் மஞ்சள்
மோதுமணிப்புங்குவிரை கரிசலாங் கண்ணி
சந்தனமுங் கற்பூர வல்லி பெருவாகை
சடைச்சிமனோ சிலைவட்டக் கிலு கிலுப்பைவீழி
தாளகமுங் குனிநாவ லிலந்தைவிரைவேங்கை
தக்ரைவிரை பாவட்டை யெருக்கொடுகாஞ்சோரி
வந்த சிறு தும்மட்டி காக்கரட்டான் பூவு
மரமஞ்சள் சேங்கொட்டை வசம்பொடுவாலுளுவை
வாய்விளங்க மிருவேலி கள்ளிகருங்காலி
வனமல்லி புடலாடா தோடையிலாமிச்சம்
குந்துகரும்பனையனிச்சை செருப்படையொட்டறையுங்
கொடுவேலி யாவாரைகொன்றை திரிபுரத்தான்
கூறும்பேய்ப் பீர்க்கட்ட மூத்திரம்பேயத்தி
கொண்டவெட்பாலைவிரை குஷ்டத்தின் ஹரமே. 40

40. குட்ட நோய்களுக்கு மருந்து

சாரணை
கெந்தி
மூங்கில்விதை
அழிஞ்சில் விதை
மணித்தக்காளி
மஞ்சள்
கரிசலாங்கண்ணி
கற்பூரவல்லி
சடைச்சி
வட்டக்கிலுகிலுப்பை
தாளகம்
இலந்தை விதை
தகரை விதை
எருக்கு
சிறுதும்மட்டி
மரமஞ்சள்
வசம்பு
வாய்விளங்கம்
கள்ளி
வனமல்லி
ஆடாதோடை
கரும்பனை
செருப்படை
கொடுவேலி
ஆவாரை
திரிபுரத்தான்
எட்டுவகை மூத்திரம்
வெட்பாலை விதை
வேம்பு
மருக்காரை
கார்போகரிசி
புங்கம்விதை
திரிபலை
மண்ணிப்புங்கு விதை
சந்தனம்
பெருவாகை
மனோசிலை
வீழி
நாவல்விதை
வேங்கை விதை
பாவட்டை
காஞ்சோரி
காக்கரட்டான் பூ
சேங்கொட்டை
வாலுளுவை
இருவேளி
கருங்காலி
புடல்
விலாமிச்சம்
அனிச்சை
ஒட்டறை

கொன்றை
பேய்ப்பீர்க்கு
பேயத்தி

வெண்குஷ்ட ஹரம்.

நீலிவேர் கடுதாணி கண்டங்காலி
நெல்லியர சிலைகொன்றை பொன்னாவாரை
சீலநறுந் தாளிவெள்ளைக் காக்கணானும்
செவ்வகத்தி விரையுள்ளி சேராங்கொட்டை
யாலமறுங் கார்போகி மருதம்பட்டை
யரபொடியும் வெண்ணெயதி மதுரம்வேளை
மேலானகாட்டெள்ளு செம்பருத்தி
வெண்குட்ட ஹரங்களென விளம்பினாரே. 41

41. வெண்குஷ்ட நோய்களுக்கு

நீலிவேர்	கண்டங்காலி
நெல்லி	அரசிலை
கொன்றை	பொன்னாவாரை
நறுந்தாழி	வெள்ளைக்காக்கணான்
செவ்வகத்தி விதை	பூண்டு
சேராங்கொட்டை	கார்போகி
மருதம்பட்டை	அரப்பொடி
வெண்ணெய்	அதிமதுரம்
முக்காவேளை	காட்டெள்ளு
செம்பருத்தி	மருதாணி

கிருமிநோய் ஹரம்.

வனத்தினிற் புரசன் விரையொடு காயம்
வசம்புவெள் ளுள்ளியும் பரட்டை
வளர்கொடு வேலி வேம்பதின் பருப்பும்
வாய்விளங் கங்கடுக்காயுஞ்
சினத்திடுந் தென்னம் பாளையுமவுரி
செருப்படி பிரண்டைவேப் பிலையுந்
திப்பிலி சேராங் கொட்டையும் பாகல்
செய்யமூக் குரட்டைசந்தனமும்
கனத்திடுங் கோவைக் கிழங்கொடு முத்தங்
கழல்விரை தகரையின் விரையுங்
காட்டெரு மைப்பால் மூங்கிலின்குருத்துங்
கடுமெவச் சாரமானதுவும்
அனத்திடு நொச்சில் கசப்பது கொடுக்கும்
அருமையாந் திராயிவையெல்லாம்
ஆனதோர் வயிற்றிற் பூச்சிகள் புழுக்க
ளாகிய கிருமிநோய் ஹரமே. 42

42. கிருமி நோய்களுக்கு

வசம்பு	பெருங்காயம்
புரசன் விதை	வெள்ளைப்பூண்டு
பரட்டை	கொடுவேலி
வேப்பம்பருப்பு	வாய்விளங்கம்
கடுக்காய்	தென்னம்பாளை
அவுரி	செருப்படி
பிரண்டை	வேப்பிலை

திப்பிலி
பாகல்
சந்தனம்
முத்தக்காசு
தகரை விதை
மூங்கில் குருத்து
நொச்சில்
சேராங்கொட்டை
மூக்குரட்டை
கோவைக்கிழங்கு
கழல்விதை
காட்டெருமைப்பால்
எவச்சாரம்
திராய்

வாதநோய் ஹரம்.

அரத்தையோ டிருமஞ்சள் கோஷ்டமிந்தும்
அகில்தேவ தாரமுட னாம்ப லிண்டும்
ஆயிலுடன் புங்கெருக்கு முதியார் கூந்தல்
அறுகன்வே ரட்டவர்க்கஞ் சதுரக்கள்ளி
உரத்த சிறு முட்டியுடன் பேராமுட்டி
யுளுந்துடனே கொள்ளதுவின் குடிநீர்நொச்சில்
ஓங்குமா விலங்கைதச மூலங்கள்ளி
யுயர்குப்பை மேனிகரும் போளங்காயம்
பருத்திவிரை நல்லெண்ணெய் வேம்பினெண்ணெய்
பகர்சிற்றா மணக்கெண்ணெய் விளக்கினெண்ணெய்
பாரிலுறுந் தழுதாழை கழறுழாயும்
பருங்கிரந்தி தகரமுடன் சரளங்குக்கில்
வருத்தமறு சதகுப்பை யிலந்தைவித்தும்
மருதணியுஞ் சாரணைகுங் கிலியம் வீழி
வாசமுறும் பூங்குழலாய் சொல்லக்கேளாய்
வாதத்தின் ஹரங்களென வகுத்ததாமே. 43

43. வாத நோய்களுக்கு மருந்து

அரத்தை
கிழங்கு மஞ்சள்
இந்து
தேவதாரம்
இண்டு
புங்கு
முதியார் கூந்தல்
அட்டவர்க்கம்
சிற்றாமுட்டி
உளுந்துக் குடிநீர்
நொச்சில்
தசமூலம்
மரமஞ்சள்
கோஷ்டம்
அகில்
ஆம்பல்
ஆயில்
எருக்கு
அறுகன் வேர்
சதுரக் கள்ளி
பேராமுட்டி
கொள்ளுக் குடிநீர்
மாவிலிங்கை
கள்ளி

குப்பைமேனி
பெருங்காயம்
நல்லெண்ணெய்
ஆமணக்கெண்ணெய்
கழற்சிக்காய்
சரளம்
சதகுப்பை
மருதாணி
குக்கில்
கரும்போளம்
பருத்திவிதை
வேப்பெண்ணெய்
தழுதாழை
கிரந்திதகரம்
குங்கிலியம்
இலந்தைக்கொட்டை
சாரணை
வீழி

பித்தநோய் ஹரம்

சீதையே சிறுநாணற் காவட்டம்புல்
தெற்பையொடு பெருநாணல் சீந்தில் சந்தந்
தேங்காய்ப்பா லறுகிளநீர் முத்தம் பாலை
சிறுகீரை யிலுப்பைப்பூ சிவந்தநெய்தல்
தாதுமா துளங்கனியு மதுரம்வேம்பு
சர்க்கரையு முந்திரிகை பிச்சிப்பூவுஞ்
சம்புடனே கல்லாலு மரசோடத்தி
தாமரையுங் கோவைவரிக் கந்தத்தோடு
போதவே யிருவேலி யிலாமிச்சம்வேர்
புகழ்தோடை நன்னாரி யாலும் நெல்லி
பூமிச்சர்க் கரைக்கிழங்கும் பாலுங்கன்னல்
பூசணிவெள் ளரியரம்பைக் கனிபேரீந்து
பேதையெனுங் குமரிதுராய் முருங்கைப்பூவும்
பின்முசுக்கை பசும்பயறுந் தகரநெய்யும்
பேய்ப்புடலும் புங்குநிலக் குமிழ்கற்பூரம்
பித்தத்தின் ஹரங்களெனப் பேசினாரே. 44

44. பித்த நோய்களுக்கு மருந்து

சீதைப்புல்
காவட்டம்புல்
பெருநாணல்
தேங்காய்ப்பால்
இளநீர்
பாலை
இலுப்பைப்பூ
மாதுளம்பழம்
வேம்பு
முந்திரி
கல்லாலம்
சிறுநாணல்
தர்ப்பை
சீந்தில்- சந்தனம்
அறுகு
முத்தம்
சிறுகீரை
நெய்தற்பூ
அதிமதுரம்
சர்க்கரை
பிச்சிப்பூ
அரசு

அத்தி
கோவை
இருவேலி
ஆடாதோடை
ஆல்
பூமிசர்க்கரைகிழங்கு
பூசணி
பேரீச்சை
துறாய்
முசுமுசுக்கை
எருமைநெய்
புங்கு
கற்பூரம்
தாமரை
வரிக்கந்தம்
விலாமிச்சம்வேர்
நன்னாரி
நெல்லி
பால்- கருப்பு
வெள்ளரி - வாழைப்பழம்
சோற்றுக்கற்றாழை
முருங்கைப்பூ
பகும்பயறு
பேய்புடல்
நிலக்குமிழ்

சேத்துமரோக ஹரம்.

மாதுகேள் சுவாசகாச வகையதின் திரவியங்கள்
வாதசேத் துமத்துக்கான மருவுநற் றிரவியங்கள்
போதவே யிவைகளாலே பொருதுசேத்துமரோகங்கள்
ஆதியாய்க் கொடுக்கத்தீரும் ஹரங்களென் றறிந்திடாயே.45

45. கப நோய்களுக்கு மருந்து

சுவாச காச நோய்களுக்கு கூறப்பட்ட மருந்துகளும் வாத சேத்துமரோகங்களுக்கு கூறப்பட்ட மருந்துகளும் பொருந்தும்.

வாதசுரோணித ஹரங்கள்

அரத்தையும் விழுதி மஞ்சளும் நாண
லதிமது ரத்தசமூலம்
ஆமணக்குடனே கோஷ்டமா தண்டை
யகிலொடு சிவந்தநன்னெருஞ்சில்
உரத்தவா காசத் தாமரை கடுக்காய்
ஓங்கிய மூங்கிலின் குருத்தும்
உயர்ந்திடுந் தாழை விழுதினிற்சாறு
முரத்திடுங் கழறுழாய்சீந்தில்
விரைத்திடுஞ் சிற்றா முட்டிகல்பூவும்
வெள்ளரி காடிநீர்முள்ளி
மேவிய நிலத்தின் குமிழ்சிலா சத்து
மென்சிறு வழுதலை யெள்ளும்
வருத்தமாந்தேவ தாரியின் சக்கை
வரப்பினின் முள்ளியீ தெல்லாம்

மருவியவாத சுரோணித ஹரங்கள்
வகுத்திடுங் கும்பமாமுனியே. 46

46. வாத சுரோணித நோய்களுக்கு மருந்து

அரத்தை
மஞ்சள்
அதிமதுரம்
ஆமணக்கு
ஆதண்டை
சிவப்பு நெரிஞ்சில்
கடுக்காய் - துளசி
தாழைவிழுதின் சாறு
சிற்றாமுட்டி
வெள்ளரி
நீர்முள்ளி
சிலாசத்து
எள்ளு
முள்ளி
விழுதி
நாணல்
தசமூலம்
கோஷ்டம்
அகில்
ஆகாசத்தாமரை
மூங்கில் குருத்து கழற்சிக்காய்
சீந்தில்
கல்பூ
காடி
நிலக்குமிழ்
வழுதலை
தேவதாரியின் சக்கை

ஆவரணபயித்தி யஹரங்கள்

விரவிய பாலைசீந்தில் வெள்ளுள்ளி முசுமுசுக்கை
மருவுதிப் பிலியுஞ் சுக்கு மதுரமு மரத்தை செவ்யம்
வருமகில் சிறிய மூலம் மகாபலங் கொடுவேலி யாவும்
பரவுமா வரண மென்ற பயித்திய ஹரங்களாமே. 47

47. பயித்திய நோய்களுக்கு மருந்து

பாலை
வெள்ளைப்பூண்டு
திப்பிலி
அதிமதுரம்
செவ்வியம்
மகாபலம்
சீந்தில்
முசுமுசுக்கை
சுக்கு
அரத்தை
அகில்- சிறுமூலம்
கொடுவேலி

அதிஸ்தூல ஹரங்கள்.

கொண்டவாய் விளங்கங் கொள்ளுங்
கோதும்பை சக்களத்தி
விண்டநல் லெண்ணெய் குக்கில்
வேங்கையுங் கொடியவேலி

கண்டிடுங் கடுக்காய் லோகங்
கற்பூரச் சிலையுந் தேனும்
அண்டியே யெவச்சா ரந்தா
னதிஸ்தூல ஹரங்க ளாமே. 48

48. பருமன் குறைவதற்கான மருந்து

வாய் விளங்கும்
கோதுமைச்சக்களத்தி
குக்கில்
கொடிவேலி
கற்பூர சிலை
எவச்சாரம்
கொள்ளு
நல்லெண்ணெய்
வேங்கை
கடுக்காய்
தேன்

அதிக்குரு ஹரங்கள்.

நிலக்குமிழ் பூசணிக்காய்
நெய்யும்பா லமுக்குராவும்
இலைக்குநீர் முட்டான் பாலை
யெருமையின் றயிர்கற் றாழை
உலுக்குநல் லுளுந்து நீரு
முடலிளைத்தவர்க ளுக்கும்
அலுக்கியே பிலனுண் டாக்கு
மதிக்குரு ஹரங்களாமே. 49

49. பருமனாவதற்கு மருந்து

நிலக்குமிழ்
நெய்
அமுக்குரா
பாலை
கற்றாழை
பூசணிக்காய்
பால்
நீர்விட்டான்
எருமைத்தயிர்
உளுந்து

வந்தியரோக ஹரங்கள்.

புளித்திடுமாரை கழற்பருப் பதுவும்
புகழ்சிறு மூலமுந்தாழி
பொருந்துமா தளையு முளுந்ததின் வேரும்
புளிக்குமா தளையும் வெட்பூலா
களித்திடு மாலு மத்தியின் பாலுங்
கானக மல்லிசா ரணையுங்
கருதுநா கணமுந் தண்ணீர்முட்டானுங்
கனத்தநல் முக்குயப்பண்ணை

வெளுத்திடும் வசம்பு மாவதின்பாலு
மென்சிறு முட்டியின் வேரும்
மேவுபே யத்தி தன்னிலே முளைத்த
மிகுத்தபுல் லுருவியீ தெல்லாம்
வளத்துடன் மின்னாள் முழுக்கது கண்டு
வன்றலை முழுகுநாள் பாலில்
வகையுடன் குடிக்க மலடது நீங்கும்
வந்திய ரோகஹர மிதுவே. 50

50. மலட்டுத்தன்மை நீங்க மருந்து

கழற்பருப்பு — ஆரை
சிறுமூலம் — தாழி
மாதுளை — உளுந்தின்வேர்
புளிப்பு மாதுளை — வெட்பூலா
ஆலம்பால் — அத்திப்பால்
காட்டுமல்லி நாகணம் — சாரணை
தண்ணீர்விட்டான் — வசம்பு
பசுவின் பால் — சிற்றாமுட்டி வேர்
பேயத்தி மரத்தில் முளைத்த புல்லுருவி

கெற்பிணி சுரஹறரங்கள்

வெண்ணெயுட னாவின்பால் நெய்யினோடு
மேவியநற் பட்சிகளின் மாங்கிஷங்கள்
பண்ணவே சுகபோக மதுரமான
பண்டமுட னாகாரம் பண்ணப் பின்னுந்
தின்னுஞ்சாங் களதேசத் தஷ்டவர்க்கத்
தித்திப்புத் திரவியமுங் குளிர்ந்த நீரும்
வண்ணமாஞ் சூலான மாதருக்கு
மருவுசுக ஹரங்களென வகுத்த தாமே. 51

51.கர்ப்பம் தளத்தபெண்களுக்கு

வெண்ணெய் — பசுவின்பால்
புசுநெய் — மாமிசவகை
இனிப்புப் பண்டங்கள் — அட்டவர்க்கம்
குளிர்ந்த நீர்
மாதவிலக்கு நீங்கித் தலை முழுகும் நாள் பாலுடன் அருந்த மலடுநீங்கும்...

சுகப்பிரசூதி ஹரங்கள்

கோட்டமுங் கடுகும் பாம்பதின் றோலுங்
கொடுஞ்சிவ னார்கிழங் கதுவுங்
குய்யமா மிடத்திற் பூசவுந் தூபங்
கொடுத்தபின் மயிரதைப் பந்தாய்
வாட்டமாய்ச் சுருட்டி யிரண்டுகன்னத்தில்
வளம்பெறு தொண்டையிற் றேய்த்து
வகைமயிர் கழுத்திற் கட்டிகள்ளிப்பால்
வன்றலை யுச்சியிற் றடவிக்
காட்டமாந் தாளி பத்திரிகோஷ்டங்
கரகமா யரைத்துச் சாராயில்
கள்ளியின் றெளிவி லுழவுமண் குடிநீர்
கருதிமுன் றோன்றினிற் குடிக்கச்
சூட்டியே கல்லுப் பரைத்துள்ளங் கால்கை
தோன்றவே பூசிக்கால்கையிற்
சூரிய காந்தச் செடியதைக்கட்டச்
சுகப்பிர சூதியமிதுவே. 52

52. சுகப்பிரசவத்திற்கு மருந்து

கோஷ்டம்
கடுகு
பாம்பின் தோல்
சிவனார் கிழங்கு இவற்றை அரைத்து அடிவயிற்றில் பூசி ஒத்தடம் கொடுக்கவும். தலை முடியை இரண்டு பந்தாய் சுருட்டி கன்னத்திலும் தொண்டையிலும் தேய்த்து பின்புறமாக கட்டி விடவும், உச்சியில் கள்ளிப்பால் தேய்க்கவும். தாளிசபத்திரி, கோஷ்டம் இரண்டையும் அரைத்து ஊராயம்கள் அல்லது உழவுமண் குடிநீர் செய்து கொடுக்கவும். கல்லுப்பை அரைத்து உள்ளங்கையிலும், உள்ளங்காலிலும் பூசி, சூரிய காந்தி இலை வைத்து கட்டவும்.

பாலநோய் ஹரங்கள்.

அடுத்திடும் பால ருக்கே
யந்தந்த ரோகந் தன்னிற்
கொடுத்திடுஞ் சம மருந்துங்
கொடூரமா மருந்து தானுந்
திடத்தில்மாத் திரைகள் செய்தே
தெளிந்துபார்த் தேகொடுத்தால்
படித்தகண் மொழியி னாளே
பாலநோய் ஹரங்களாமே. 53

53. குழந்தைகளுக்கு வரும் நோய்களுக்கு மருந்து

அந்தந்த நோய்களுக்கு கூறப்பட்டுள்ள மருந்துகளை குழந்தையின் வயதிற்குத்தக்கபடி மாத்திரை செய்து கொடுக்கவும்.

பாலகிரக ஹரங்கள்.

ஆடரவத்தோல் கோட்டமும் வசம்பும்
ஆவதின் கொம்புவால் மயிரும்
அரியநெய் சிவதை பருத்தியின் வித்தும்
அழகிய மஞ்சள்வேப் பிலையுந்
தேடுநற் கடுகு வெளுத்தகுங்கிலியந்
தேவதா ரம்புசபத்ரம்
திரமுடன் றூபங் காட்டியபின்பு
சீருள முழுக்கதின் வகைகேள்
நாடுறும்பாலை விளாவொடு நாவல்
நற்சிறு முட்டியும் புரசும்
நலந்தரும்பட்டை நீரதிற் காய்ச்சி
நங்கையார் பிள்ளைமேற் சொரியக்
கூடுமந்தந்த மாதமேயறிந்து
குணமுடன் பலிகளுஞ் செய்தால்
குழந்தையின் பால கிரகமேயகலுங்
கூறுநற் றிரவிய மிதுவே. 54

54. பால கிரக தோஷங்களுக்கு மருந்து

நாகப்பாம்பின் தோல்
கோஷ்டம்
வசம்பு
மாட்டுக்கொம்பு
மாட்டுவால் - மயிர்
சிவதை
பருத்தி விதை
மஞ்சள்
வேப்பிலை
கடுகு
வெள்ளைக்குங்கிலியம்
தேவதாரம்
புசபத்ரம் இவற்றைப் போட்டுகும் புகைபிடித்து

பாலை
விளா
நாவல்
சிற்றாமுட்டி
புரசு இவற்றின் பட்டைகளை தண்ணீரில் போட்டுக் காயவைத்து அந்த நீரால் தாயையும், சேயையும் குளிப்பாட்டி பூசைசெய்ய பாலகிரக தோஷங்கள் நீங்கும்.

பூதகிரக ஹரங்கள்.

புகையது காட்டக் காயமோ டுள்ளி
புகழ்சிறு வழுதலம்பழமுழ்
பொருந்துவேப்பிலையும் நெய்யொடு கடுகும்
பொங்குநல் வசம்பொடு மஞ்சள்
சிகையதின் மயிரும் யானையின் கொம்புஞ்
*சிவனிரு மாலிய மதுவுந்
தேடியமயிலி னிறகுடன் குக்கில்
சேரவே புகைத்திடப் பின்னும்
வகைநிலக் கடம்புஞ் செருப்படி கோஷ்டம்
வன்கரு நொச்சிபூ நிம்பம்
மணந்தரு லவங்கப் பட்டைபேய் மிரட்டி
வகையறிந் திவைகளைக் குடிக்க
மகவெனும் பால ராவலாய்க் கேட்ட
வஸ்துவா லவர்தமைச்சுற்றி
வன்பலிகொடுக்கப் பூதமாங் கிரகம்
வாங்குமென்று ரைத்தனர் முனியே. 55

(*சிவபூசை பண்ணிக்கழித்த
புஷ்பத்திற்குச் சிவனிரு
மாலியமென்று பெயர்.)

55. பூத தோஷங்கள் நீங்க மருந்து

காயம்	பூண்டு
சிறுவழுதலை - நெய்	வேப்பிலை
கடுகு	வசம்பு
மஞ்சள்	தலைமுடி
யானைக் கொம்பு	சிவனுக்கு பூசை செய்து நீக்கிய மலர்கள்
மயிலிறகு	குக்கில் இவைகளைக் கொண்டு

புகைபோட்டு நிலக்கடம்பு, செருப்படி கோஷ்டம், கருநொச்சி, வேப்பம்பூ, இலவங்கப்பட்டை, பேய்மிரட்டி.

உன்மாத ஹரங்கள்.

முந்திரிக்கனியுங் கரும்பதின் சாறும்
மிளகுபச் சரிசியின் கழுநீர்
முத்தமுங் கடுக்காய் தான்றியும் நெல்லி
முத்துகோ ரோசன மதுரஞ்

சந்தனம் முலைப்பால் பூசணிக்காயுந்
தண்ணிமுட் டான்சிறு கீரை
தாவியே பிடிக்கும் புலிச்சதையுடனே
தனித்தநீ ருள்ளியின் சாறும்
அந்தமாமுசிறு முட்டைவல்லாரை
யரியநன் மருந்திவை யெல்லாம்
அஞ்சனமிடவும் நசியஞ்செய்திடவு
மதட்டியே பயமது படுத்தல்
வந்திடுஞ் சரத்தை யடக்கிடப் பண்ணல்
வலுமையா யடித்திடல் பலவும்
வருசமா தானம் பேசவுன்மாத
மாறுமென் றுரைத்தனர் முனியே. 56

56. பயித்திய ரோகங்களுக்கு மருந்து

முந்திரிப்பழம் — கரும்புச்சாறு
மிளகு — பச்சரிசி கழுவிய நீர்
முத்தம் — கடுக்காய்
நெல்லிக்காய் — தான்றிக்காய்
கோரோசனம் — அதிமதுரம்
சந்தனம் — முலைப்பால்
பூசணிக்காய் — தண்ணீர்விட்டான் கிழங்கு
சிறுகீரை — புளிச்சதை
நீருள்ளியின் சாறு — முசுறுமுட்டை
வல்லாரை இவையெல்லாம் சேர்த்தரைத்து கண்ணுக்கு அஞ்சனமிடவும், மூக்கில் நசியம் செய்யவும் கொடுத்தால் பயித்திய வெறி தணியும்.

அபஸ்மார ஹரங்கள்.

ஆவொடு பூனை யுடும்பொடு பாம்பு
மானையுங் கீரியும் நரியும்
அசுவமோ டிந்தப் பிச்சுக ளாலே
யறிந்திட நசியமும் பண்ணல்
பூவினி லுள்ளி திரிபலை யுடனே
புங்குவித் தொடுதிரி கடுகும்
பொருந்துமிவ் வகையால் நசியமும்பண்ணல்
போதவுந் தலைமுழுகிடுதல்
தாவிய வெள்ளைக் காக்கணாம்பூவின்
சாறுடன் பஞ்சகவ் வியநெய்
தண்ணீர்முட் டானும் பிரமிபூ சணிக்காய்
சார்ந்தநன் னாரிவல் லாரை

பாவுமிவ்வகையால் மருந்தினை யருந்தப்
பட்சிக ளிறகினாற் புகைக்கப்
பார்மிகு மபஸ் மாரங்க ளென்னும்
பயித்திய ஹரங்களாம்பாரே. 57

57. மூர்ச்சை நோய்களுக்கு மருந்து

மாடு பூனை
உடும்பு பாம்பு
மான் கீரி
நரி குதிரை இந்தப் பிராணிகளின் பிச்சுகளால் நசியம் பண்ணவும். பூண்டு, திரிபலை, புங்கன்விதை, திரிகடுகம் இவற்றால் நசியம் பண்ணுதல். தலைமுழுகுதல், வெள்ளைக் காக்கணன் பூச்சாற்றுடன் பஞ்சகவியம், நெய், தண்ணீர் விட்டான்; பிரமி, பூசணி, நன்னாரி, வல்லாரை இவற்றைக் கொண்டுசெய்த மருந்தை உண்ணக் கொடுப்பதுடன் பறவைகளின் இறகை கொண்டு புகை போட்டு பிடிக்கவும் செய்யவும்.

நேத்திரரோக ஹரம்.

மன்னுசெவ் வீராஞ் சனந்துருசு துத்தமும்
வருமனோ சிலைதாரமும்
வாலுமுவை யப்பிரகஞ் சூதமுங் கெந்தகம்
மருக்காரை யின்காயதும்
வலம்புரிக் காய்நெய்தல் பச்சைக்கற் பூரமும்
வசம்புவெண் காரமிந்தும்
வாசமிகுகோஷ்டமும் மஞ்சளிருசந்தனம்
மரமஞ்சள் கருவேலதும்
பொன்னுமிர தாஞ்சனந் துத்தநா கஞ்சீனம்
புஷ்பாஞ்சனஞ் செம்பதும்
புத்தரசு விரைசங்கு நாகணங் கடல்நுரையும்
புங்குவிரை சிறுமுட்டியும்
பொருந்துபித் தளைவெள்ளி வெண்கலமு மிருவங்கம்
புளியமலரின் சாறதும்
போற்றுநவ ரத்தினம் பலகறையு மிருலோகம்
பூலா வுடன் பளிங்கும்
சின்னமா னுங்கலையு மெருமைகாண் டாமிருகஞ்
செய்யகாட் டெருமை யதுவுந்
தேடுங் கடம்பையும் யானையும் பன்றியுந்
திரமான பசுவாடதுந்
திடமான கொம்புகள் பல்லுடன் கஞ்சாவுந்
தேனுடன் முலைப்பாலதுஞ்

சீராங்குளத்துக் கிளிஞ்சிநீர் பனைமட்டை
திரிகடுகு சிறுகீரையும்
அன்னமே யிளநீரு முருங்கைவெண் சாரணையு
மமுக்குரா விலவம்பிசின்
ஆனபே ராமுட்டி சுட்டபற் பங்கொள்ளு
மரசன் பழுப்பு சீனி
அதிமது ரம்பாலை திரிபலை வரட்பூலா
வரியதேற் றான்கொட்டையும்
ஆகும் பழம்புளி வெண்ணெய்நெய் லோத்திரமு
மானபொன் னாங்காணியுங்
கன்னியே குங்குமங்குளிவேர்பிரமியுங்
கானகத் தின்கொள்ளதுங்
காதுக்கு றும்பியுஞ் சுரோதாஞ் சனம்வெள்ளைக்
காக்கணாந் தலையோடதுங்
கருதுஞ் செருப்படை பேயத்தியின்பாலுங்
கனபீத ரோகணியதுங்.
காவிக்கல் சிறுமூலம் நந்தியாவட்டமுங்
கருதுநா கேசுரமதும்
இன்னமெள்ளுப்பூ லவங்கமுஞ் சாதிக்கா
யெலுமிச்சை யின்பழமதும்
ஏற்றநசி யம்பத்து வேதும்பிடிக்குத
லிதமாங் கலிக்க மதுவும்
இனிய கெண் டவிழ்தமும் முன்னமேசொல்லிய
விலைகளாற் றயிலமதுவும்
எழிலான கண்களின் நோய்களின் ஹரமென்று
மியல்பா யுரைத்தபடியே. 58

58. கண்நோய்களுக்கு மருந்து

சவ்வீரம் - அஞ்சனம்	துருசு
துத்தம்	மனோசிலை
அரிதாரம்	வாலுளுவை
அப்ரகம்	சூதம்
கந்தகம்	மருக்காரைக் காய்
வலம்புரிக்காய்	நெய்தல்
பச்சைக்கற்பூரம்	வசம்பு
வெங்காரம்	இந்து
கோஷ்டம்	கிழங்கு மஞ்சள்
மர மஞ்சள்	செஞ்சந்தனம்
சந்தனம்	கருவேல்
அமிர்தாஞ்சனம்	துத்தநாகம்

சீனம்	புஷ்பாஞ்ஜனம்
செம்பு	அரசன்விதை
சங்கு	நாகணம்
கடல்நுரை	புங்குவிதை
சிற்றாமுட்டி	பித்தளை
வெள்ளி	வெண்கலம்
காரீயியம்	வெள்ளீயம்
புளியம்பூவின் சாறு	நவரத்தினம்
பலகரை	பூலா
பளிங்கு	மான்
கலைமான்	எருமை
காண்டமிருகம்	காட்டெருமை
கடம்பான்	யானை
பன்றி	பசு

ஆடு முதலான மிருகங்களின் கொம்பும், பல்லும்

கஞ்சா	தேன்
முலைப்பால்	குளத்தில் உற்பத்தியாகும் கிளிஞ்சில் நீர்
பனைமட்டை	சுக்கு
மிளகு	திப்பிலி
சிறுகீரை	இளநீர்
முருங்கை	வெண்சாரணை
அமுக்குரா	இலவம்பிசின்
பேராமுட்டி கொள்ளு	அட்ட பற்பம்
அரசன் பழுப்பு	சீனி
அதிமதுரம்	பாலை
நெல்லிக்காய்	கடுக்காய்
தான்றிக்காய்	வரட்பூலா
தேற்றான் கொட்டை	பழைய புளி
வெண்ணெய்	நெய்
லோத்திரம்	பொன்னாங்காணி
குங்குமம்	பிரமி
காட்டுக்கொள்ளு	காதுக்குறும்பி
சுரோதாஞ்சனம்	வெள்ளைக்காக்கணம்
தலை ஓடு	செருப்படை
பேயத்திப்பால்	பீதரோகணி
காவிக்கல்	சிறுமூலம்
நத்தியாவட்டம்	நாகேசுரம்

எள்ளுப்பூ
சாதிக்காய்
இலவங்கம்
எலுமிச்சம்பழம்

இவற்றைக் கொண்டு நசியம் செய்வது வேது பிடிப்பதும் கண்ணில் கலிக்கமிடுவதும் இவற்றைக் கொண்டு தயிலம் செய்து தேய்த்துக் குளிப்பதும் கண்களில் உண்டாகும் நோய்களைப் போக்கும்.

கன்னரோக ஹரங்கள்.

சுத்தநன் முருங்கை யெருக்கொடு நொச்சி
துளசிமுள் ளங்கி யாமணக்குந்
தோடையும் வேளை நல்லிருமுட்டி
சொல்லிலைக்கள்ளி கஞ்சாவும்
பத்துமிவ்விலைகள் தேசியின் சாறும்
பலகறைப் பற்பமுங் குக்கில்
பருத்தியி னிளங்காய் மருளொடு லவங்கம்
பகர்சத குப்பையோ டுள்ளி
மத்தநல்லிஞ்சி திரிகடு கிந்து
வசம்பொடு கொன்றையின் பழமும்
மஞ்சளுஞ் சதுரக் கள்ளிநீ ருள்ளி
வனமருக் காரைகொள் ளுக்காய்
கத்துவெள்ளாட்டு நீரொடுதாரம்
கடுகெண்ணெய் வேம்பு நல்லெண்ணெய்
காய்ச்சியே வார்க்கக் காதினிற் பிறந்த
கன்னநோய் ஹரங்களென்றறியே. 59

59. கன்னத்தில் உண்டாகும் நோய்களுக்கு மருந்து

முருங்கை
நொச்சி
முள்ளங்கி
ஆடாதோடை
சிற்றாமுட்டி
இலைக்கள்ளி
எலுமிச்சம் பழச்சாறு
குக்கில்
மருள்
சதகுப்பை
இஞ்சி
மிளகு
இந்து
கொன்றைப்பழம்
சதுரக்கள்ளி
எருக்கு
துளசி
ஆமணக்கு
முக்காவேளை
பேராமுட்டி
கஞ்சா இவ்விலைகளிச் சாறும்
பலகரைப்பற்பமும்
பருத்திப் பிஞ்சு
இலவங்கம்
பூண்டு
சுக்கு
திப்பிலி
வசம்பு
மஞ்சள்
நீருள்ளி

வனமருக்காரை	கொள்ளுக்காய்
வெள்ளாட்டு மூத்திரம்	தாரம்
கடுகெண்ணெய்	வேப்பெண்ணெய்

நல்லெண்ணெய் காய்ச்சி வார்க்க காது, கன்ன நோய்கள் தீரும்.

நாசிரோக ஹரம்.

சொன்னதா ளீசப் பத்திரி யுடனே
துளசியுங் கொள்ளொடு செவியந்
துய்யவல் லாரை யகத்தியும் நொச்சில்
சொற்றமு தாழைமுள் ளங்கி
மன்னுசீரகமும் புங்கதின் வித்தும்
வனகரி சாலைவாய் விளங்கம்
வருகொடி வேலி திப்பிலி மூலம்
மஞ்சளுங் குக்கிலுங் கடுகும்
உன்னியதேவ தாரமோ டுள்ளி
யோங்கிய மிளகொடு லவங்கம்
உற்றநாயுருவி கரியசீரகமு
முரைத்திடுஞ் சுக்கு திப்பிலியும்
நன்னயதான்றி நெல்லியுங் கடுக்காய்
நற்கரி திப்பிலியெல்லாம்
நாசியின் நோய்க்குத் திரவிய மெனவே
நவின்றனர் கும்பமாமுனியே. 60

60. மூக்கில் வரும் நோய்களுக்கு மருந்து

தாளிச பத்திரி	துளசி
கொள்ளு	செவியம்
வல்லாரை	அகத்தி
நொச்சில்	தழுதாழை
முள்ளங்கி	சீரகம்
புங்கன்விதை	கரிசாலை
வாய்விளங்கம்	கொடிவேலி
திப்பிலி வேர்	மஞ்சள்
குக்கில்	கடுகு
தேவதாரம்	பூண்டு
மிளகு	இலவங்கம்
நாயுருவி	கருஞ்சீரகம்
சுக்கு	திப்பிலி
நெல்லிக்காய்	கடுக்காய்
தான்றிக்காய்	அரிசித்திப்பிலி

அதரநோய் ஹரங்கள்.

வெள்ளைக்குங் கிலியந் தன்னில் மேவிய தயில மஞ்சள்
பள்ளத்தின் கீழ்காய்நெல்லி பருகடு தான்றி நெல்லி
விள்ளும்வேப்பிலையும் நொச்சில் மெழுக்கொடு தேவதாரம்
அள்ளுந்தேன்மதுரங்குக்கில் அதரநோய்ஹரங்களாமே. 61

61. உதட்டு நோய்களுக்கு மருந்து

வெள்ளைக் குங்கிலியத்திலிருந்துஇறக்கிய தைலம்		மஞ்சள்
கீழ்க்காய் நெல்லி		நெல்லிக்காய்
கடுக்காய்		தான்றிக்காய்
வேப்பிலை - மெழுகு	நொச்சில்	
தேவதாரம்	தேன்	
அதிமதுரம்	குக்கில்	

கண்டாலச்சியவிரண ஹரம்.

கண்டா லச்சி முத்து முன்னே
கடிய சோகை மருந்ததனைக்
கொண்டே யாட்டுப் பாலுடனே
கூறுஞ் செம்மறி யாட்டுப்பால்
பண்டே சத்ரங் கத்தியினாற்
பகருஞ் செருப்படை கடலையிலை
கண்டந் தன்னில் மாலையதாங்
கண்டா லச்சி ஹரமாமே. 62

62. கழுத்து நோய்களுக்கு மருந்து

முன்பு சோகைக்கு கூறப்பட்ட மருந்துகளை ஆட்டுப்பால் அல்லது செம்மறி ஆட்டுப்பாலுடன் கொடுக்கவும். செருப்படைஇலை, கடலை இலைகளை கழுத்தில் கட்டவும்.

தந்தரோக ஹரங்கள்.

அரத்தையுடன் கொள்ளுக்கா வேளைகாயம்
ஆவாரை சாரணையு மகிழம் வித்தும்
உரத்தகரு வேலெருக்கு மருதம்பட்டை
உயர்குப்பை மேனியிந்து காட்டாத்திப்பூ
பருவிளநீர் துவரையிலை யெள்ளினெண்ணெய்
பரிமளிக்குங் கற்பூரத்தயிலஞ் சுக்கும்
தரித்திருக்குங் கருங்காலி யோமமஞ்சள்
தந்தத்தின் மூலநோய் ஹரங்களாமே. 63

63. பல் நோய்களுக்கு மருந்து

அரத்தை
வேளை
ஆவாரை
மகிழம்வித்து
எருக்கு
குப்பைமேனி
காட்டாத்திப்பூ
துவரை இலை
கற்பூரதைலம்
கருங்காலி
மஞ்சள்
கொள்ளுக்காய்
பெருங்காயம்
சாரணை
கருவேல்
மருதம்பட்டை
இந்து
இளநீர்
நல்லெண்ணெய்
சுக்கு
ஓமம்

சிம்மரோக ஹரங்கள்.

மரமிகு மஞ்சள் சீரகமுடனே
மஞ்சளிந் துப்பொடு துளசி
வருமனோ சிலையுந் தேனரி தாரம்
வன்பொடு தலையுடனேலம்
வரமிகு வேம்பு நொச்சிலுங் கருவேல்
வன்கருங் காலியுங் கோஷ்டம்
மணியின்றக்காளி பாலையின்பட்டை
வருசிறு முட்டி வெள்வேலுந்
தருசிலாசத்துந் தோடைபேய்ப்புடலுந்
தாவிய மால்கிராந்தியதுஞ்
சாருநற் கடுக்கா யாவின்னெய்யுடனே
தங்கிய மிளகுதிப்பிலியுந்
திருவெனுஞ் சுக்கு நல்லெவச்சாரஞ்
சேரவே வாயினுட் டாளிற்
செய்யநாக்கதனிற் பிறந்திடும் பிணியாஞ்
சிம்மநோய் ஹரங்களென் றறியே. 64

64. நாவில் வரும் நோய்களுக்கு மருந்து

மரமஞ்சள்
இந்துப்பு
மஞ்சள்
தேன்
பொடுதலை
வேம்பு
சீரகம்
துளசி
மனோசிலை
அரிதாரம்
ஏலம்
நொச்சில்

கருவேல்
கோஷ்டம்
பாலைப்பட்டை
வெள்வேல்
ஆடாதோடை
கடுக்காய்
மிளகு
சுக்கு
கருங்காலி
மணித்தக்காளி
சிற்றாமுட்டி
சிலாசத்து
பேய்ப்புடல்
பசும்பால் நெய்
திப்பிலி
எவச்சாரம்

சருவாசியரோக ஹரம்.

அருந்துநற் சா்திப் பத்திரிகாயும்
அதிமது ரங்கருங்காலி
யருஞ்சிறு சாதி யிலைதிரிபலையு
மரியவேல் நாவல் சந்தனமும்
பரிந்தநற் கோஷ்டந் திரிகடு கதுவும்
பாலையும் வேம்புட னேலம்
பகா்மரமஞ்சள் கிராம்பு சீரகமும்
பண்ணுநா கேசுர முத்தம்
வருந்திய லவங்கப் பட்டையு மிலையும்
மருவிய துளசிகோ மயமும்
வருமெவச்சாரம் பச்சைக்கற்பூரம்
மாவதின் காயுட கீற்றுஞ்
சரிந்தகாட்டாத்திப் பூவுடன் றேனுஞ்
சாருதக் கோலமுந் துருசு
தயவுடன் முகத்தில் வினையெனச்சேருஞ்
சருவாசியநோய் ஹரமிதுவே. 65

65. முக ரோகங்களுக்கு மருந்து

ஜாதிப்பத்திரி
அதிமதுரம்
நெல்லிக்காய்
தான்றிக்காய்
சந்தனம்
சுக்கு
திப்பிலி
வேம்பு
மரமஞ்சள்
சீரகம்
முத்தம்
ஜாதிக்காய்
கருங்காலி
கடுக்காய்
நாவல்
கோஷ்டம்
மிளகு
பாலை
ஏலம்
கிராம்பு
நாகேசுரம்
இலவங்கப்பட்டை-இலை

துளசி
எவச்சாரம்
மாங்காய்த் துண்டு
தேன்
துருசு
கோமயம்
பச்சைக்கற்பூரம்
காட்டாத்திப்பூ
தக்கோலம்

கண்டரோக ஹரம்.

சிவந்தசந்தனமும் வேங்கையின் மரமுந்
தேவதா ரங்கொடுவேலி
செவ்விய முடனே வெட்டிவேர் சுக்குஞ்
செய்யநற் கோஷ்டமொட்டறையும்
தவந்தரு லோத்ரந் திப்பிலியுடனே
தாளிசப் பத்திரி யேலம்
தருமெவச்சாரம் மஞ்சளுங் கடுக்காய்
தாவிய நற்சிறுகீரை
நவமிகும்வாச கெந்தகமுடனே
நன்மர மஞ்சள்வெட்பாலை
நாடுமிந்துப்பு திப்பிலி மூலம்
நலந்தருங் கோசல மதுவுங்
கவமறுந்தேனு மிளகுவாலுழுவை
கசப்புள நற்றிராயிவையுங்
காரெனுங் கூந்தல் மயிலெனும் பெண்ணே
கண்டநோய் ஹரங்ளென் றறியே. 66

66. கழுத்து நோய்களுக்கு மருந்து

செஞ்சந்தனம்
தேவதாரம்
செவ்வியம்
சுக்கு
ஒட்டரை
திப்பிலி
ஏலம்
மஞ்சள்
சிறுகீரை
மரமஞ்சள்
இந்துப்பு
கோமயம்
மிளகு
திராய்
வேங்கை
கொடுவேலி
வெட்டிவேர்
கோஷ்டம்
லோத்திரம்
தாளிசபத்திரி
எவச்சாரம்
கடுக்காய்
கந்தகம்
வெட்பாலை
திப்பிலிவேர்
தேன்
வாலுளுவை

சிரோரோக ஹரம்.

அதிமதுரஞ் சர்க்கரையுங் குங்குமப்பூகோஷ்டம்
அரியவிலா மிச்சின்வே ரேலமுடனிந்தும்
அகிலுடனே வாய்விளங்கஞ் சீந்திமருக்காரை
யருங்கிரந்தி தகரமுடன் சந்தனமுங்காயம்
மதிவளரு மிலவங்கம் மஞ்சள் மரமஞ்சள்
மஞ்சட்டி திரிகடுகு திரிபலைகஸ்தூரி
வாசமுள்ளகச்சோலம் பெருங்கோரைக்கந்தம்
மங்கையர்பால் நல்லெண்ணெய் வருலவங்கப்பத்ரி
துதிபெருகு நன்னாரி தாமரைப்பூக்கந்தந்
துய்யபசுங் கற்பூரஞ் சொற்கரியசாலை
குட்டியவெண் ணெய்தலுடன் கிழங்குமிருமுட்டி
சொற்கொடுவேல் முத்தமுடன் றுய்யசதகுப்பை
கொதிய மருங் கற்றாழை சாதிக்காயுடனே
கூகைநீர் நாகப்பூ குருவேருந் தாரம்
கொஞ்சியநற்றலையதிலும் மூளையிலும்பிறந்த
கொடியசிரநோய் ஹரங்கள் கூறுமொழிப்படியே. 67

67. தலை நோய்களுக்கு மருந்து

அதிமதுரம்	சர்க்கரை
குங்குமப்பூ	கோஷ்டம்
விலாமிச்சின் வேர்	ஏலம்
இந்து	அகில்
வாய்விளங்கம்	சீந்தில்
மருக்காரை	கிரந்திதகரம்
சந்தனம்	காயம்
இலவங்கம்	மஞ்சள்
மரமஞ்சள்	மஞ்சட்டி
திரிகடுகு	திரிபலை
கஸ்தூரி	கச்சோலம்
பெருங்கோரைகந்தம்	தாய்ப்பால்
நல்லெண்ணெய்	இலவங்கப்பத்திரி
நன்னாரி	தாமரைப்பூக்கந்தம்
பசுங்கற்பூரம்	கரிசாலை
வெண்ணெய்	நெய்தற் கிழங்கு
சிற்றாமுட்டி	பேராமுட்டி
கொடுவேலி	முத்தம்
சதகுப்பை	கற்றாழை

சாதிக்காய் — சூகைநீர்
நாகப்பூ — தாரம்
குருவேர்

விரண ஹரங்கள்.

கஞ்சியுங் காடியும் அன்னமும் நெய்யதுங்
கற்றாழை யும்புங்கதும்
காட்டுமல் லிகைமிளகு மஞ்சள்மர மஞ்சளுங்
கடுக்காயுடன்தா ணியும்
கடுகுரோகணிநெல்லி சிறுகீரை வேருடன்
கருதுபாலைப் பட்டையும்
கண்டுரவி முன்னே திரும்புகு ரியகாந்தி
கடியமஞ் சட்டியதுவும்
மிஞ்சுவேப்பம்பட்டை துருசியறுகன்வேரு
மெழுக்குடன் நொய்யரிசியும்
வெண்கலம் பழங்காசுக் கட்டியும் பழவெல்ல
மிகுநிலக் குமிழ்வேரதும்
மேவுசதுரக்கள்ளிப் பாலுநல்லெண்ணெயும்
மிகுத்தபுளி யாரையதுவும்
வீசுங் குளிர்ந்தநீ ரிலந்தையின் கொட்டையும்
வேம்பாட லதிமதுரமும்
துஞ்சுபுளி கருணைக் கிழங்குநன்னாரியுஞ்
சுத்ததேன் குக்கி லெள்ளுஞ்
சூழ்ந்ததாழம்முளையு மரியசிறு சாதியின்
றுளிருமிரு வாட்சியிலையுந்
துகையாம் பருத்தியிலை யரசுபுளியிலை கொன்றை
துய்யபாவட்டை யிலையுஞ்
சுத்தகோடகசாலை யிலையுடன் முன்னமே
சொன்னதோ ரிலைகளெல்லாம்
வஞ்சியே தண்ணீரிற் காய்ச்சிவிரணத்து
வருந்தி மிகவே கழுகவும்
வகையான சுண்ணப் பழங்காரை நீரினால்
மைப்போலரைத்து நன்றாய்
வசமாம் விளக்கெண்ணெய் விட்டுக்குழைத்ததை
வாங்கி விரணம் பூசவும்
மாயாத விரணங்கள் காயவே ஹரமென்று
வளமாயுரைத்த/ படியே. 68

68. ரணங்களுக்கு மருந்து

கஞ்சி	காடி
அன்னம்	நெய்
கற்றாழை	புங்கு
காட்டு மல்லிகை	மிளகு
மஞ்சள்	மரமஞ்சள்
கடுக்காய்	தான்றிக்காய்
கடுகுரோகணி	நெல்லி
சிறுகீரைவேர்	பாலைப்பட்டை
சூரியகாந்தி	மஞ்சட்டி
வேப்பம்பட்டை	துருசி
அருகன்வேர்	மெழுகு
நெய்யரிசி	வெண்கலம்
காசிக்கட்டி	பழைய வெல்லம்
நிலக்குமிழ்வேர்	சதுரக்கள்ளி
பால்	நல்லெண்ணெய்
புளியாரை	குளிர்ந்தநீர்
இலந்தைக்கொட்டை	வேம்பாடம்பட்டை
அதிமதுரம்	புளிகருணைக்கிழங்கு
நன்னாரி	சுத்தமான தேன்
குக்கில்	எள்ளு
தாழம்முளை	சிறுசாதியின் துளிர்
இருவாச்சி இலை	பருத்தி இலை
அரசிலை	புளிஇலை
கொன்றை	பாவட்டைஇலை

கோடகசாலை இலை இவைகளை தண்ணீரில் போட்டு காயவைத்து, ரணங்களைக்கழுவி சுண்ணப்பழங்காரை இறுத்த நீரினால் மை போல அரைத்து, விளக்கெண்ணெய் விட்டு குழைத்து ரணங்களின் மேல் பூச வேண்டும்.

சத்தியாவிரண ஹரங்கள்.

மிஞ்சியநல்லதிமது ரமிலவம்பட்டை
மேவுநந்தி யாவட்டத் தோலுந்தேனும்
அஞ்சனமும் மயிலிறகும் இச்சிப்பூவும்
அரியவெண் குங்கிலிய மரக்கும் பாலும்
கொஞ்சுநில வேம்புடனே நீரினுள்ளி
கூகைநீர் செந்நெருஞ்சில் கொல்லங்கோவை
தஞ்சமாம் நெய்கடுக்காய் சிறுகாஞ்சோரி
சத்தியாய் விரணங்கள் ஹரங்களாமே. 69

69. சத்தியாரணங்களுக்கு மருந்து

அதிமதுரம்
நத்தியாவட்டத் தோல்
அஞ்சனம்
இச்சிப்பூ
அரக்கு
நிலவேம்பு
கூகைநீர்
கொல்லங்கோவை
கடுக்காய்
இலவம்பட்டை
தேன்
மயிலிறகு
வெண்குங்கிலியம்
பால்
நீர்ப்பூண்டு
செந்நெருஞ்சில்
நெய்
சிறுகாஞ்சோரி

அனற்பட்டவிரண ஹரம்.

வெந்நீரா லதைக்கழுவி மெழுக்கும்பாலும்
வெட்பாலை கற்பூரம் வழுவைக்கீரை
பண்ணியசெம் பருத்திப்பூ பொன்னாங்காணி
பாலையதின் பட்டையிலை யறுகூமத்தை
விண்ணியநீ ருள்ளியதி மதுரஞ்சந்தம்
வெட்டிவேர் கடுக்காயு மயிரும்நெய்யும்
அண்ணியநாயுருவியர சிலைநெய்ச்சட்டி
யனற்பட்ட விரங்கள் ஹரங்களாமே. 70

70. தீப்பட்ட காயங்களுக்கு மருந்து

வென்னீரால் காயத்தை கழுவி
பால்
கற்பூரம்
செம்பருத்தி பூ
பாலைப்பட்டை இலை
ஊமத்தை
அதிமதுரம்
வெட்டிவேர்
நெய்
அரசிலை
மெழுகு
வெட்பாலை
வழுவைக்கீரை
பொன்னாங்காணி
அருகு
நீருள்ளி
சந்தனம்
கடுக்காய்
நாயுருவி
நெய்ச்சட்டி

பங்கநோய் ஹரங்கள்.

வெளுத்தநற் கடுகும் ஆவதின் நெய்யும்
மெத்தெனப் பூசியே கட்டல்
மேவியகடுக்காயெண்ணெயில் வறுத்தே
விதமுடன் கட்டியசீலை

தளத்தில் மண்பூசிக் கட்டவும் வேளை
சார்புளி விரையதின் றோலுந்
தாவு மெள்ளெண்ணெய் மூங்கிலின் புறணி
தனித்தவால ரசதின்பட்டை
வளத்துடனண்டம் பாண்டப்புற்றோடு
மருதொடு நெல்லி குங்கிலியம்
வாமுமுந்திரிகை யத்தியின்நீரும்
வறுத்தநல் லுப்பொடு மிளகும்
பளித்திவை யல்லால் போளமுமாக்கும்
பாலுடன் குளித்திட மெய்யிற்
பருத்தகைகாலி லெலும்புகளொடிந்த
பங்கநோய் ஹரங்களென் றறியே. 71

71. எலும்பு ஒடிந்த நோய்களுக்கு மருந்து

கடுகு — பசுவின்நெய்
(கடுகை பசுவின் நெய்யில் அரைத்து பூசி கட்ட வேண்டும்)
கடுக்காயை எண்ணெயில் வருத்து தடவிய சீலையில் சுற்றி அதன்மே‹
மண்பூசி கட்டலாம்.

தைவேளைச்சார்	புளியன்விதை தோல்
நல்லெண்ணெய்	மூங்கிற்புரணி
ஆலம்பட்டை	அரசம்பட்டை
முட்டைஓடு	சமையல் செய்த பழைய பானையின் ஒடு
மருது	நெல்லி
குங்கிலியம்	முந்திரி
அத்தியின் நீர்	நல்ல உப்பு
மிளகு	போளம்
பால்	

பவுந்தரவிரண ஹரம்.

திரிபலையுங் கொடுவேலி வாய்விளங்கம்
திப்பிலியும் பாவட்டை விரையாவாரை
வெரியரவத் தோல்பூனை யெலும்பு மேலம்
மேவியசாரணைவேரும் லவங்கப்பட்டை
மரியாலம் பழுப்புடனே யிதுவல்லாமல்
வகையான காரத்தாற் கருமஞ்செய்து
பரிவாக வாதிக்க வாசனத்திற்
பவுந்திரமாய் விரணங்கள் ஹரங்களாமே. 72

72. பவுந்தர ரணங்களுக்கு மருந்து

நெல்லிக்காய்	கடுக்காய்
தான்றிக்காய்	கொடுவேலி
வாய்விளங்கம்	திப்பிலி
பாவட்டை விதை	ஆவாரை
நல்ல பாம்புத் தோல்	பூனை எலும்பு
ஏலம்	இலவங்கப்பட்டை
சாரணை வேர்	ஆலம் பழுப்பு

மூளையிரண ஹரம்.

சொல்லிய வசம்பும் முள்முருக் கதுவுந்
துய்யவெண் காக்கணான் சீந்தில்
துஞ்சுபேயத்தி யுத்தமதாளி
சொற்சிறு தந்தியின் செடியும்
வெல்லமும் புங்கும் ஆமணக்கெண்ணெய்
மேவுமூ மத்தையுங் கோஷ்டம்
வேகமாங்கள்ளிக் கொழுந்துசேங்கொட்டை
மிகுத்தநன் முருங்கையின்வேரும்
வல்லசாரணையுங் கத்திரிவேரும்
வன்சிவ னார்கிழங்கலரி
வாழையின் கிழங்கும் பாலொடுதுருசு
வருகொடு வேலியும் நாகம்
முல்லையின் நகையாய் சங்கதின்பற்பம்
முயல்பெறு மன்னபேதியதும்
முத்தினிற் சிப்பி யிவையெலாந்தலையில்
மூளையி லிரணநோய் ஹரமே. 73

73. மூளை ரணங்களுக்கு மருந்து

வசம்பு	முள்ளுமுருங்கை
வெள்ளைக் காக்கணான்	சீந்தில்
பேயத்தி	உத்தமதாளி
சிறுதந்திச்செடி	வெல்லம்
புங்கு	ஆமணக்கெண்ணெய்
ஊமத்தை	கோஷ்டம்
கள்ளிக் கொழுந்து	சேங்கொட்டை
முருங்கைவேர்	சாரணைவேர்
கத்திரிவேர்	சிவனார் கிழங்கு
வாழைக்கிழங்கு இவற்றின் பால்	துருசு
கொடுவேலி	நாகம்

சங்கு பற்பம் அன்னபேதி
முத்துச்சிப்பி

அற்புதவிரண ஹரம்.

கோவின்நீர் கடுக்காயும் முருங்கைவேருங்
கொன்றையொடு சேங்கொட்டை சிவனார் மூலம்
பாவியநற் புங்குடனே ஆயிற்பட்டை
பஞ்சலவணத்துடனே யெருக்குமஞ்சள்
தாவியநற் றிரிகடுகு வசம்புங்கள்ளி
சாரணையு மொட்டறையுங் கொடியவேலி
ஆவியெனு மெய்யதிலே சகலமான
அற்புதமாம் விரணங்கள் ஹரங்களாமே. 74

74. அதிக வீக்கமான பல முளைகளுள்ள அற்புத ரணங்களுக்கு மருந்து

கோமயம் கடுக்காய்
முருங்கைவேர் கொன்றை
சேங்கொட்டை சிவனார் வேம்பின் வேர்
புங்கம்பட்டை ஆயில்பட்டை
பஞ்சலவணம் எருக்கு
மஞ்சள் சுக்கு
மிளகு திப்பிலி
வசம்பு கள்ளி
சாரணை ஒட்டறை
கொடிவேலி

சிலிபதவிரண ஹரம்.

கொண்டவெட்பாலை விரையொடு கடுக்காய்
கோசலஞ் சிவதையுங் கடுகுங்
கொத்தமல்லிகையுஞ் சீந்தியினிலையுங்
கொடியநன் முருங்கையின்வேரும்
மண்டுமாமணக்கின் வேரொடு காயம்
வழுதலை வேர்மரமஞ்சள்
மருவுமே ரண்டத் தெண்ணெயுஞ் சுக்கும்
வாழ்மரு தாரையு மெருக்கும்
பண்டுநல் லயமுந் தேவதாரத்தின்
பலவகை மருந்திவை யல்லால்
பாவையே சிவனார் கிழங்கொடு வசம்பும்
பழத்தின்சா ரதனிலே யரைத்துச்

செண்டெனு முலையாய் கூட்டியேபூசத்
திரமுடன் பிடிக்குதல் பலவுஞ்
செப்பிய முழங்கால் பொருமியேவீங்குஞ்
சிலிபத விரணமா ஹரமே. 75

75. முழங்கால் ரணங்களுக்கு மருந்து

வெட்பாலை விதை
கோமயம்
கடுகு
சீந்திலிலை
ஆமணக்கு வேர்
கத்திரிவேர்
விளக்கெண்ணெய்
மருதாரை
தேவதாரம் இவையல்லாமல்
சிவனார் கிழங்கு
கடுக்காய்
சிவதை
கொத்தமல்லி
முருங்கைவேர்
பெருங்காயம்
மரமஞ்சள்
சுக்கு
எருக்கு
வசம்பு இரண்டையும்
எலுமிச்சம்பழச்சாற்றில் அரைத்து மேலே பூசலாம்.

உபசிம்மகவிரண ஹரம்.

முருங்கையும்புங்கும் பேயதின் பீர்க்கும்
முந்துகார் போகிமுள்ளங்கி
மொழிந்தன வைந்தும் வித்துகளாகும்
முயல்சிவ னார்கிழங்கரத்தை
வரங்கொளுஞ் சதுரக் கள்ளியு மெருக்கும்
மருவுபால் நொச்சிலும் மாஞ்சில்
வருமிருவேலி சிறிய தும்மட்டி
வன்னியுத் தாமணிக்கொழுந்தும்
பரங்கொளுந் தேவ தாரமுஞ் சுக்கும்
பசுமுதற் கொம்பொடு குளம்பும்
பாங்குடன் சுட்ட கரியுடனிந்தும்
பரவிய சாரணைவேரும்
உரங்கொளுங்குமரி வரப்பினில் முள்ளி
யுயர்புளி கருணை பாவட்டை
உன்னிய வாயுண் ணாக்கினில் விரண
முபசிம்ம ஹரங்களாமே. 76

76. உள்நாக்கு ரணங்களுக்கு மருந்து

முருங்கை
கார்போகஅரிசி
புங்கு பேய்ப்பீர்க்கு
முள்ளங்கி இந்த
விதைகளும்

சிவனார் கிழங்கு
சதுரக்கள்ளி
பால்நொச்சில்
இருவேலி
உத்தாமணிக்கொழுந்து
சுக்கு - பசுவின் கொம்பும்
சுட்டகரி
சாரணைவேர்
புளிகருணை
சோற்றுக் கற்றாழை
அரத்தை
எருக்கு
சடாமாஞ்சில்
சிறுதும்மட்டி
தேவதாரம்
குளம்பும்
இந்து
முள்ளி
பாவட்டை

நாடிவிரண ஹரம்.

எள்ளுடனே யிருமஞ்சள் காட்டுவாகை
யெருக்கம்பால் வச்சிரப்பால் காஞ்சோரிக்காய்
கள்ளமருக் காரையுட னாயிற்பத்ரி
காய்ச்சுப்பு மஞ்சட்டி கல்லினுப்புந்
துள்ளியவேம் பொட்டறையும் புனலிமாக்கல்
சொற்பரட்டை நாயுருவி கமுகிந்துப்பும்
உள்ளநரம் பதிலிருக்கும் வினைகளான
வுயர்நாடி விரணங்கள் ஹரங்களாமே. 77

77. நரம்புப் புண்களுக்கு மருந்து

எள்ளு
மரமஞ்சள்
எருக்கம்பால்
காஞ்சோரிக்காய்
ஆயில்பட்டை
காய்ச்சியஉப்பு
கல்லுப்பு
ஓட்டரை
மாக்கல்
நாயுருவி
இந்துப்பு
மஞ்சள்
காட்டுவாகை
வச்சிரப்பால்
மருக்காரை
சாதிப்பத்திரி
மஞ்சட்டி
வேம்பு
புனலி
சொற்பரட்டை
கமுகு

அசக்கள்ளியாதிரண ஹரம்.

துட்டவசக் கள்ளியா திரணத்துக்குஞ்
சொற்கசப மென்னுமொரு விரணத்துக்கும்
பட்டபா ஷாணத்தின்விரண மென்னும்
பருகியமு விரணத்தின் மருந்துகேளுங்

கட்டமெனு மணிப்புங்குந் தேவதாரம்
கொடியமனோ சிலையிந்துப் பிவைகளெல்லா
அட்டமிகும் பருவத்தே பூசத்தீரு
மசக்கள்ளி யாதிரண ஹரங்களாமே. 78

78. சதுரக்கள்ளியாதிரணங்களுக்க மருந்து

பாஷாணத்தினால் ஏற்பட்ட ரணங்களுக்கு மணிப்புங்கு, தேவதாரம், மனோசிலை.இந்துப்பு

முக தூஷகவிரண ஹரம்.

உரைத்த நல்வசம் பெருக்குட னுரியநா கணமுந்
திருத்தும் வெள்ளிற காலிலை சிரட்டையி னோடும்
அரைத்துப் பூசமு கத்தினில் நாற்றமா னதுவும்
விருத்த மாமுக தூஷக விரணமா ஹரமே. 79

79. முகரணங்களுக்கு மருந்து

வசம்பு
நாகணம்
ஆலிலை
எருக்கு
வெள்ளிறகு
சிரட்டை ஓடு
இவற்றை அரைத்து பூச வேண்டும்.

பதுமகண்டகவிரண ஹரம்.

கொன்றையின் பட்டை நெய்தேன்
கோதிலா வேம்பின் பட்டை
நன்றதா யரைத்துப் பூச
நாடுமிப் பிணியைக் கேளாய்
இன்றுதா மரைநா ளத்தி
லிருந்திடுங் கருக்குப்போலக்
கன்றமெற் றொன்றும் பத்ம
கண்டக ஹரங்க ளாமே. 80

80. பத்மகண்ட ரணங்களுக்கு மருந்து

கொன்றைப்பட்டை
தேன்
நெய்
வேப்பம்பட்டை
இவற்றை அரைத்து பூசலாம்.

பொட்டகவிரண ஹரம்.

திரண்டுமுகங் கொண்டிருக்கும் விரணத்துக்குஞ்
சேர்ந்துருண்டு மின்னல்தரும் விரணத்துக்கும்

செப்புநடு மார்புதனிலக்குள் தன்னிற்
றிரமாகப் பருத்திருக்கும் விரணத்துக்கும்
மருண்டவுடல் தனிலெரிவாய் வசூரிபோலும்
வருவிரண மல்லாமல் வசூரிகட்கும்
வந்தெழும்பி மூன்றுமுகமாயுருண்ட
வல்லிரணம் பித்தத்தின் விசற்பியாலும்
அருண்டகடு கதுபோலு மநேகங்கண்கொண்
டக்கினிரோ கணிநான்காம் விரணத்துக்கும்
ஆகியநற் சில்லதுபோல் விரணத்துக்கும்
அநேகரணங் கணக்கில்லா விரணத்துக்கும்
வரண்டிடச் சுக்கிலம்வாங்க லுதிரம்வாங்கல்
மருவியலங்கணம் போடல்குளிர்ச்சிசெய்தல்
மருந்துகளாற் பலவகையாற் காங்கையேற்றல்
மருவியபொட் டகவிரண ஹரங்களாமே. 81

81. கட்டியால் முகம்திரண்ட ரணங்களுக்கு மருந்து

மார்பு, அக்குள், இடுப்புச்சந்து முதலான இடங்களில் பருத்து திரண்டு வரும் கட்டிகளுக்கு, இவை அனேக முளைகள் உடையவையாகவும் இருக்கலாம்.

பட்டினி போட்டும், கெட்டரத்தத்தை எடுத்தும், எரிச்சல்தீரும் படியாக குளுமையான பொருள்களை பூசியும், நிதானமாக பரிகாரம் தேடவேண்டும்.

சக்காரற்புதவிரண ஹரம்.

சிவந்திருக்குஞ் சிறியவமு தலையின்வேருஞ்
செய்யநிலப் பூசணியின் கிழங்குமாகுந்
வந்தசேத் துமகிரந்தி மருந்துசெய்யல்
தலைமூளை விரணத்தின் மருந்துசெய்யல்
அவன்றலையிற் பிறந்தரண மூளைபற்றி
யக்கினிநெய் போலுருகி வரம்புகட்டுஞ்
சவுந்தபர கிதமாக நிதானஞ்சொன்னார்
சக்காரற்புத் விரண ஹரங்களாமே. 82

82. சக்காரற்புத ரணங்களுக்கு மருந்து

சிவப்பு கத்திரியின்வேர் நிலப்பூசணிக் கிழங்கு இவைகளைக் கொண்டு மருந்து செய்து உபயோகிக்கலாம். மற்றும் சேத்தும கிரந்தி தலை மூளை இரணங்களுக்குச் சொன்ன மருந்துகளும்

வல்மீகருத்தகுத ஹரங்கள்.

புற்றுப்போ லெழுந்துடனே தினவுண்டாகும்
பொருந்தியவன் குத்தலுமா யெரிவுண்டாகும்
புகலுமிது வல்மீக விரணமாகும்
பூண்டதலை முளையதின் சிகிட்சைசெய்யல்
சத்தியெனும் புற்றுடைய மண்ணுஞ்சேர்த்து
தந்திசெடி யிந்துப்பு நாணல்சீந்தில்
சாருமிது வல்லாம லிரத்தம்வாங்கல்
தாவுகின்ற ரவுத்திர மாம்விரணங்கேளும்
பெத்தவனலகிலம்போல் கொதுறல்செய்யும்
பெருகுநரம் பதிலேசத்திரமும்பண்ணல்
பேசியகதாக்கிரந்தி குணமுஞ்சொல்வேன்
பின்னுங்கால் விரல்கீழும் விரணமாகும்
வத்தையதை யறுக்குதலு மிரட்சைகர்மம்
வகையான மணிவிதியுஞ் செய்யத்தீரும்
வல்மீக ருத்தகுத ஹரங்களென்று
மருவுகுறு முனியுகந்து வகுத்திட்டாரே. 83

83. வல்மீகருத்தகுத (புற்றுநோய் புண்கள், ரணங்களுக்கு மருந்து)

புற்றுப்போல் எழுந்தவையும், அதிகமான தினமும் எரிச்சலும், உண்டாக்கக்கூடிய ரணங்களுக்கு புற்று மண்ணும், தந்திச்செடி, இந்துப்பு, நாணல், சீந்தில், தலைமுளை இவற்றைக்கொண்டு மருந்து செய்து உபயோகிக்கலாம். தவிர கெட்டரத்தத்தை அறுத்து வடியச்செய்தலும், ரணமான பகுதியை அறுத்து வெளியேற்றி பிறகு மருந்தை வைத்து கட்டுவதும் ஆகும்.

குணக்கநோய் ஹரம்.

சத்திரமாம் விதிபண்ணல் தெங்கின்கந்தம்
சம்பழம்வெண் குங்கிலியத் தயிலம்பூசல்
சித்திரமூ லத்துடனே அரக்கோடெள்ளின்
செடியதனைச் சாரமதாய்ச் செய்துபூசல்
பத்திவரும் பிணியதனைச் சொல்லக்கேளாய்
பழுப்பாகும் நகமெல்லாம் கருப்புமாகுங்
குற்றமுடன் விரணமதாய் நகத்திற்றோன்றுங்
குணக்கநோய் ஹரங்களெனக் கூறினாரே. 84

84. நகச்சுற்று நோய்களுக்கு மருந்து

தென்னைக் கந்தம் எலுமிச்சம்பழம்
வெண்குங்கிலிய தைலம் சித்திர மூலம்
அரக்கு எள்ளுச்செடி இவற்றை
அரைத்து பூசுதல் நகத்தில் வரும் ரணங்களை குணப்படுத்தும்.

கரதமவிரண ஹரம்.

எள்ளுடைய பொடியுடனே வேம்பின்வேரு
மிய்யமுடன் சுட்டபுளி பேய்ப்புடோலுந்
தெள்ளியநற் கொத்துமல்லி கழுநீரோடுந்
தேங்காயி னெண்ணெயுடன் காய்ந்தசுண்ணங்
கொள்ளுதற்கு நெல்லியுடன் பழையகாடி
கொடுமைய்யுட னக்கினியின் கர்மஞ்செய்யக்
கள்ளனெனுங் கால்தனிலே சேற்றுப்புண்ணாங்
கரதமாம் விரணங்கள் ஹரங்களாமே. 85

85. சேற்றுப்புண்களுக்கு மருந்து

எள்ளுப்பொடி வேம்பின்வேர்
சுட்டபுளி பேய்ப்புடல்
கொத்துமல்லி கழுநீர்
தேங்காய் எண்ணெயுடன் காய்ந்த சுண்ணாம்பு, நெல்லியுடன் பழைய காடி.

வெங்கலாஞ்சியவிரண ஹரம்.

தேனொடுபாலைப் பட்டையுந் துளிருஞ்
சீரகம் நாணலின்பட்டை
செய்யதிப்பிலியும் நெல்லிசந்தனமுஞ்
சிறந்திடு மஞ்சளுமறுகுங்
கானொடுமுசலி னிரத்தமுங் கோட்டங்
காட்டெரு மைக்கடாய்க் குளம்புங்
கருதுபத்திரிகாய் நிம்பமும் பிச்சி
கடியபூ வெள்ளி லோத்திரமும்
ஈனமாம் பங்கம் பாளையின் சாம்ப
லிலந்தைவித் தெள்ளுடன்பாலும்
எழில்மனோ சிலையும் வன்னிமஞ்சட்டி
யிலவதின் பிசினொடு வெல்லம்
வேனெனும் லவங்கப்பட்டை வெள்ளாட்டின்
மேவுபால் வடித்திடுஞ்சாதம்

மிகுமருந் ததன்றோல் மங்குகளான
வெங்கலாஞ்சிய விரண ஹரமே. 86

86. வெங்களாஞ்சிய ரணங்களுக்கு மருந்து

தேன்
பாலைத்துளிர்
நாணல்பட்டை
நெல்லி
மஞ்சள்
முயல்ரத்தம்
காட்டெருமைக்குளம்பு
எலுமிச்சம்பழம்
வெள்ளிலோத்திரம்
இலந்தைக்கொட்டை
பால்
வன்னி
இலவம்பிசின்
வெல்லம்
பாலைப்பட்டை
சீரகம்
திப்பிலி
சந்தனம்
அருகு
கோட்டம்
சாதிப்பத்திரிக்காய்
பிச்சிப்பூ
பங்கம்பாளை சாம்பல்
எள்ளு
மனோசிலை
மஞ்சட்டி
இளவம்பட்டை
வெள்ளாட்டுப்பாலில்
வேகவைத்த சாதம்.

கோட்டவிரண ஹரம்.

எரிவினாற்புடைத்தலுண்டா மெழும்பித்த சேத்துமத்துக்
குரியக ரகுரொட் டார்வா முத்தநல் ஹரணத்துக்குப்
பரியுநற் சிகிட்சைபோலப் பண்ணுத லிவைகளெல்லாம்
விரிவிலா நீண்டகோட்ட விரணத்து ஹரங்களாமே. 87

87. கோட்ட ரணங்களுக்கு மருந்து

பருத்த எரிச்சலோடு கூடிய ரணங்களுக்கு சொல்லப்பட்ட மருந்துகளே உபயோகிக்கலாம்.

காமியவிரண ஹரங்கள்.

இண்டிலையுடனே துத்தமுந் துருசும்
ஏலமும் பாண்டப்புத்தோடும்
எள்ளொடுதேனும் நெய்யதிமதுர
மிந்துடன் நெல்லியின்காயும்
நண்டுடைவளைமண் தான்றியின் காயும்
நன்மனோ சிலையொடு வீரம்
நாட்டினிற் கொடிதாம் வெளுத்தபாஷாணம்
நயந்தரு மாலதின்செடியுஞ்

சுண்டுநற் கடுக்காய் காவியின்கல்லுஞ்
சொற்கருங் காலியின் பிசினுந்
தொடர்ந்த முந்திரிகைக் கனிரசாஞ்சனமுந்
தோகையே பூசுநீறதுவும்
கண்டுமுன் சொன்ன சோகையின்மருந்துங்
கருத்துட னிவ்வகையதனாற்
காணவேகோச விரணத்தின்ஹரமாய்க்
கருத்துட னுரைத்தனர் முனியே. 8ε

88. காமிய ரணங்களுக்கு

இண்டிலை	துத்தம்
துரிசு	ஏலம்
பழைய பானை ஓடு	எள்ளு
தேன்	நெய்
அதிமதுரம்	இந்து
நெல்லிக்காய்	தான்றிக்காய்
நண்டு வளை மண்	மனோசிலை
வீரம்	வெள்ளைப்பாஷாணம்
துளசி	கடுக்காய்
காவிக்கல்	கருங்காலிப்பிசின்
முந்திரி	அஞ்சனம்

விபூதி இவற்றோடு முன்சொன்ன சோகை நோய்க்கான மருந்துகளையும் கொடுக்கலாம்.

யோனிரோக ஹரம்.

அரத்தை யிந்துப்பு பஞ்சகோலத்தோ டழகிய
மிளகுதேள் கடையும்
ஆவதின் நெய்பால் வசம்பொடு காய
மசமதா கழுமிருசீரம்
உரத்தமா விலங்கை யிலைமரமஞ்ச
ளோங்கிய சீதளம்பழமும்
உயர்ந்திடுந் தேங்கா யெண்ணெயே ரண்ட
முற்றநல் லெண்ணெயிம் மூன்றுந்
தரித்தநல் முத்தங் கோவையின் கந்தஞ்
சர்க்கரை வேளைவேர் கொன்றை
சார்குருந்தக்கல் கூகையின் நீருந்
தாழ்ந்தநன் னெருஞ்சியின் காயும்
வருத்தமாம் வட்டத் திருப்பியுந்தாரம்
மஞ்சளும் நல்லெவச்சாரம்

மானனை யார்கள் குய்யமாம் ரோக
வகையதின் ஹரங்களாம் பாரே. 89

89. யோனி ரோகங்களுக்கு மருந்து

அரத்தை
மிளகு
பசுவின்நெய்
வசம்பு
ஓமம்
நல்லசீரகம்
மரமஞ்சள்
தேங்காய் எண்ணெய்
நல்லெண்ணெய்
கேவையின் கந்தம்
வேளைவேர்
குருந்தக்கல்
நெருஞ்சிக்காய்
தாரம்
எவச்சாரம்
இந்துப்பு
தேள்சடை
பசுவின் பால்
பெருங்காயம்
கருஞ்சீரகம்
மாவிலிங்க இலை
சீதளம்பழம்
விளக்கெண்ணெய்
முத்தக்காசு
சர்க்கரை
கொன்றை
கூகைநீர்
வட்டத்திருப்பி
மஞ்சள்

தாபரவிஷங்கள் ஹரம்.

முத்துநல் வட்டத்திருப்பி சந்தனமும்
மிளகொடு சுக்குதிப் பிலியும்,
முத்தமுங் கடுக்காய்ப் பேய்ப்புடல் சீந்தில்
முந்திரி கையுங்கொடுவேலி
வத்துநற் கோஷ்டம் நெய்யிரு மஞ்சள்
மருளொடு கிரந்தியின் றகரம்
வசம்பு மூக்குரட்டை யாம்பலும் வங்கம்
மருவிய வெள்ளியும் பொன்னுஞ்
சுத்தபேய்ப் பீர்க்குஞ் செம்பையின்பட்டை
துய்யவெண் சாரணை லோத்ரஞ்
சொற்சிறுகீரை செவியமுந் தேனுஞ்
சூழ்பெரு வாகையு மிலையுந்
தத்துகாவிக்கல் சாரணை விளங்கந்
தாவுமாட் டாங்கொடி யுடனே
தையலே செடிகள் தன்னிலே பிறக்குந்
தாபர விஷயங்களின் ஹரமே. 90

90. செடி கொடிகளின் விஷத்தினால் உண்டாகும் நோய்களுக்கு மருந்து

முத்து
சந்தனம்
சுக்கு
முத்தம்
பேய்ப்புடல்
முந்திரி
கோஷ்டம்
மஞ்சள்
மருள்
வசம்பு
வெங்கலம்
பொன்
செம்பட்டை
லோத்திரம்
செவ்வியம்
பெருவாகை
காவிக்கல்
வாய்விளங்கம்
வட்டத்திருப்பி
மிளகு
திப்பிலி
கடுக்காய்
சீந்தில்
கொடுவேலி
நெய்
மரமஞ்சள்
கிரந்திதாரம்
மூக்குரட்டை சாம்பல்
வெள்ளி
பேய்ப்பீர்க்கு
வெண்சாரணை
சிறுகீரை
தேன்
வாகைஇலை
சாரணை

சருவவிஷ ஹரம்.

கண்டங்கத் திரிமருளும் வெண்காக்க ணான் சீந்தில்
கருதிளங் கண்சாணமும்
கார்போகி யொட்டறை குன்றிசிறு நொச்சிலுங்
கனமழையு நீருள்ளியும்
கருதுகாட் டுக்கருணை பெருவாகை பஞ்சகங்
கரிசாலை பண்ணைகோஷ்டங்
காதுக்கு றும்பியும் வச்சிரம் பாலைவிரை
காயமொடு தூதுவளையும்
மண்டெருக் கல்விரியும் புங்குபா கல்சாறும்
வசம்புதிரி கடுகுநாணல்
வட்டத் திருப்பி சிறு கொம்மட்டி பேய்ச்சுரையு
மஞ்சளிலை பழுபாகலும்
மருக்காரை யிருமஞ்சள் வெள்ளிறகு வெங்காரம்
மயூரசிகியும் பாலையும்
மகிழம்விரை புத்தரசு வித்துமீ சுரமூலி
வாழ்மணித் தக்காளியும்

அண்டர்தேன் திரிபலையு மரத்தையதி மதுரமும்
ஆம்பிலிப் பைக்கட்டியும்
ஆமணக் கூமத்தை துளசிபுளி யந்துளிரு
மாட்டுப் புழுக்கைவெல்லம்
அருலவங்கப்பட்டை பிரண்டையும் பேய்ப்பீர்க்கு
மன்னிலப் பனை தாரமும்
ஆகாச கெருடனுந் தாயைக்கொன் றார்பூண்டு
மரியதா ளிப்பணங்காய்
தண்டுநற் றிருமேனி தும்பிலி சிறுக்கீரை
சாரணைய்யு மூக்குரட்டை
தாவுசெய் னொிஞ்சிலும் விளாங்கமுத்
தாமணியுந் தருசிவர் நிருமாலியந்
தருகிரந் தித்தகர மாவின்நெய்பூசவுந்
தாவிக் குடிக்கநிதமுந்
தயவுடன் புகைபோட நசியமுஞ் செய்திடச்
சருவவிஷ ஹரமாகுமே.

91. எல்லா விஷங்களுக்கும் மருந்து

கண்டங்கத்திரி
வெள்ளைக்காக்கணான்
கார்போகி
குன்றி
நீருள்ளி
பெருவாகை
வன்னை
காதுக்குரும்பி
பாளைவிதை
தூதுவளை
பாகல்சாறு
திரிகடுகு
வட்டத்திருப்பி
பேய்ச்சுரை
பழுபாகல்
மஞ்சள்
வெள்ளிறகு
மயூரசிகை
மகிழம்விதை
மணித்தக்காளி
கடுக்காய்
மருள்
சீந்தில்
ஓட்டரை
சிறுநொச்சில்
காட்டுக்கருணை
கரிசாலை
கோஷ்டம்
வச்சிரம்
காயம்
புங்கு
வசம்பு
நாணல்
சிறுகொம்மட்டி
மஞ்சளிலை
மருக்காரை
மரமஞ்சள்
வெங்காரம்
பாளை
அரகுவிதை
நெல்லிக்காய்
தான்றிக்காய்

தேன்
அரத்தை
ஆமணக்கு
துளசி
ஆட்டுப்புழுக்கை
இலவங்கப்பட்டை
பேய்ப்பீர்க்கு
தாரம்
தாயைக்கொன்றான் பூண்டு
திருமேனி
சிறுகீரை
மூக்குரட்டை
வாய்விளங்கம்
சிவனுக்கு அர்சித்த பூக்கள்
அதிமதுரம்
இலுப்பைக்கட்டி
ஊமத்தை
புளியந்துளிர்
வெல்லம்
பிரண்டை
நிலப்பனை
ஆகாசக்கருடன்
தாளிப்பனங்காய்
திப்பிலி
சாரணை
நெருஞ்சில்
உத்தாமணி
கிரந்தி தகரம்

பசுவின் நெய் மேல்பூச்சு, உள்ளுக்கு மருந்து, புகை, நசியம் ஆகிய நான்கு விதங்களிலும் வைத்தியம் செய்ய வேண்டும்.

கீட்டகவிஷ ஹரம்.

சீரகங் காயம் நற்சிறுகீரை சிவதையிந்
துப்போடு கோஷ்டந்
திரிகடுகேலம் நெய்யெவச்சாரஞ்
சீர்பெறுங் குன்றியும் வசம்புங்
காருறுந்துளசி கிரந்தியின் றகரங்
காட்டினில் வாகை முள்ளங்கி
காவியின் கல்லுஞ் சந்தனமதுரங்
கருதுமஞ் சட்டிநாகேசம்
பேருறுவட்டத் திருப்பி நன்னாரி
பெரியநற் றுளசிவாய்விளங்கம்
பின்னிரு மஞ்சள் தகரையின்வித்தும்
பெருகிய கோரையின்கந்தம்
போருறுஞ்சீனி பாலையின்பட்டை
பூச்சிகள் புழுக்களின் விஷமாம்
பூசவுங் குடிக்கக் கீட்டகவிஷங்கள்
போகுமென்றுரைத்தனர் முனியே. 92

92. கிருமிகளால் உண்டாகும் விஷயங்களுக்கு மருந்து

சீரகம்
சிறுகீரை
இந்துப்பூ
காயம்
சிவதை
கோஷ்டம்

கருக்குள நொச்சில் பூனையினெலும்புங்
காட்டினில் வாகையின் விரையுங்
கன்னியர் முலைப்பால் சீந்திலொட்டறையுங்
கருதுபாவட்டைசா ரணையும்
மருக்கொழுந்தேவ தாரமஞ்சட்டி
வன்சிறுக் கீரைசெங்குன்றி
மருவுநல் லழிஞ்சில் விரைநறுந்தாளி
வரப்பினில் முள்ளியும்வேரும்
எருக்கொடு நிலத்திற் படர்முடக்கொத்தா
னிவையெலா மெலியது கடித்தால்
இனியநன் மருந்தா யுரைத்தனன்
முனிவனினியமூ ஷிகவிஷ ஹரமே. 95

95. எலிக்கடி விஷத்திற்கு மருந்து

எருக்கம்
மஞ்சள்
ஈசுரமூலி
பேய்ப்பீர்க்கு
மரமஞ்சள்
நொச்சில்
காட்டுவாகைவிதை
சீந்தில்
பாவட்டை
மறிக்கொழுந்து
மஞ்சட்டி
செங்குன்றி
நறுந்தாளி
முடக்கொத்தான்
தூதுளை
இந்துப்பு
பீர்க்கு
விளாம்பிசின்
புங்கு
பூனையின் எலும்பு
முலைப்பால்
ஒட்டறை
சாரணை
தேவதாரம்
சிறுக்கீரை
அழிஞ்சில் விதை
முள்ளிவேர்.

அளாகவிஷ ஹரங்கள்.

கடிபடு மிடத்தை யறிந்துநன்றாகக்
கண்டுதோல் செருப்பினா லடித்தல்
காட்டினில் வாகை யிலையுமொட்டறையுங்
கருதுநல் லழிஞ்சியின் விரையும்
வடிவுளமயிலுங் கோழியினெச்சம்
வாயினிற் றம்பலமதுவும்
வகையுடன் பங்கம் பாளையினிலையு
மருவுமூ மத்தையி னிலையுந்

துடியுளமின்னார் குளித்திடு மஞ்சள்
சொற்பெரு மெருக்கதின்பாலுந்
துய்யகற் சுட்ட புதிய சுண்ணாம்புஞ்
சொல்லுநல் லமுக்குராய் கொள்ளும்
அடியுளநோயால் வெறியது மிகுந்து
வழலுறக் கடித்திடு மெலிகள்
அரியதாம் விஷமா மிரைப்புடன் மிகுத்த
வளாகமாம் விஷங்களின் ஹரமே.. *96*

96. வெறிபிடித்த எலிக்கடிக்கு மருந்து

கட்ட இடத்தில் செருப்பைச் சுட்டு போடலாம்.

காட்டுவாகைஇலை
அழிஞ்சில் விதை
கோழி எச்சம்
பங்கம்பாளை இலை
மஞ்சள்
கற்சுண்ணாம்பு
கொள்ளு
ஒட்டரை
மயில் எச்சம்
வாயில் மென்ற தம்பலம்
ஊமத்தை இலை
எருக்கின் பால்
அமுக்கரா

நக தந்த விஷ ஹரங்கள்.

ஆலம்பாலொடு தெற்பையும் நாணலும்
அரிய வன்னியின்பட்டை செருப்படை
கோலநல்லிரு மஞ்சளும் வெட்டிவேர்
கூடுநிம்பிலை காக்கட்டான் பட்டையுஞ்
சீலமாம்பெரு வாகையும் பஞ்சகஞ்
செய்யுமா கனப் பிராயதின் பட்டையும்
மாலங்கொள்நக தந்த விஷங்களின்
ஹரமதாக வகுத்தனர் மாமுனி. *97*

97. நகம், பல் பட்ட விஷங்களுக்கு மருந்து

ஆலம்பால்
நாணல்
செருப்படை
மரமஞ்சள்
வேப்பிலை
பெருவாகை
தர்ப்பை
வன்னிப்பட்டை
மஞ்சள்
வெட்டிவேர்
காக்கரட்டான் பட்டை
பிராயன்பட்டை

நரைதிரைமுதுமை ஹரங்கள்.

மருவுபொன் னப்பிரகந் தாந்தமுங் கெந்தகம்
மஞ்சள்திரி பலையுள்ளியும்

வல்லாரை பிரமியுங் கொட்டைக்கரந்தையும்
வசம்புகற் றாழையதுவும்
வாய்விளங்கம்பாலை நிலப்பூசணிக்கந்தம்
வாழைசேங் கொட்டை குக்கில்
மருதணி யிலந்தைவிரை முள்முருக்கவுரியும்
வாலுமுவை நொச்சிமுத்தங்
கருவுசங்கன்குப்பி ய[illegible]வர்க்கஞ்சீந்தில்
காரெள்ளி னிச்சைசந்[illegible]
காரையுஞ் சிறுகீரை கூத்தன் குதம்பையுங்
கழல்விரை யழிஞ்சி வித்துங்
கருங்காலி யாகாச கெருடனூ மத்தைவிரை
காட்டாமணக்கு மருளுங்
கார்போகி சாரணையும் வேம்புவெண் காக்கணான்
கரிசாலை கொடிவேலியும்
அரிவையே சிறுமூல மரசுபங்கம்பாளை
யமுக்குரா வதிவிடையமும்
ஆவாரை தகரையின் வித்துமுக் காவேளை
யமுகண்ணி மாவிலிங்கை
யரியகற்பூரச் சலாசத்து சிறுமல்லி
யம்மான்பச் சரிசிபூலா
ஆகுமிரு திப்பிலியுஞ் சிறுபூளை குளிநாவ
லருமணித் தக்காளியுந்
திருவுநீர் முட்டானும் நெருஞ்சிலு மனோசிலை
செருப்படை நிலக்குராவுந்
தேவதாரஞ் சுக்கு புரசொடு நிலப்பனை
சிவனார் கிழங்கு நெய்பால்
தேனுடன் முடக்கொத்தான் சீனிவெண்
குங்கிலியஞ் சேத்திடு ரசாயனமாதாய்த்
தின்னவே முதுமையும் நரைதிரைகள்
ஹரமென்று செப்பிய மொழிப்படியிதே. *98*

98. நரை திரை மூப்புக்கு மருந்து

பொன்னப்பிரகம்	தந்தம்
கெந்தகம்	மஞ்சள்
நெல்லிக்காய்	கடுக்காய்
தான்றிக்காய்	பூண்டு
வல்லாரை	கொட்டைக்கரந்தை
வசம்பு	கற்றாழை
வாய்விளங்கம்	பாளை
நிலப்பூசணிக்கந்தம்	வாலை

சேங்கொட்டை
மருதாணி
முள்ளுமுருங்கை
வாலுவை
முத்தம்
பஞ்சவர்க்கம்
காரெள்ளு
கூத்தங்குதம்பை
பால்- வாந்திநோய் விதாகரோய், மதமூர்ச்சை, காமாலை, பித்தநோய், அதிக்குருசரம், விரணம், சத்தியவிரணம், அன்றபட்டவிரணம், வெங்கலாஞ்சிய விரணம், மூளையிரணம், நரை, திரை, முதுணம, நஷ்டவீரியம், அதிசாரம், மந்தாக்கிணிதீரும்.

பாவட்டை-- இரத்தமூலம், கெற்பவிப்புகுதி, சோககுஷ்டம், உபசிம்மக விரணம், பவுந்தர விரணம், மூஷிகவிஷம் நீங்கும்.

பாவட்டையிலை-- விரணந் தீரும்.

பி.

பிச்சிப்பூ-- பித்தநோய், வெங்கலாஞ்சிய விரணம் நீங்கும்.

*பித்தளை-- நேத்திரரோகம் நீங்கும். (*இதன் முறைகள் நமது அநுபோகவைத்திய நவநீதத்திற் சொல்லப்பட்டிருக்கிறது.)

பிரண்டை-- மூலம், கெற்பவிப்புருதி, சர்வவிஷம் நீங்கும்.

பிரண்டைவேர்-- கிருமிநோய் நீங்கும்.

பிரமி-- சோகை, அபஸ்மாரம், நேத்திரரோகம், நரை, திரை, முதுமை தீரும்.

பிராய்-- நஷ்டவீரியம் நீங்கும்.

பிராயன்பட்டை-- நகதந்தவிஷம் நீங்கும்.

பீ.

பீதரோகணி-- நேத்திரரோகம் நீங்கும்.

பீர்க்கு-- மூஷிகவிஷந் தீரும்.

பு.

புகைகாட்டல்-- பூதகிரகம் நீங்கும்.

புகைப்போடுதல்-- சன்னாசரோகந் தீரும்.

புங்கஞ்சாறு-- சர்வவிஷம் நீங்கும்.

புங்கம்வேர்-- தனவிப்புருதி, இரத்தகுன்மம் நீங்கும்.

புங்கு-- கிராணி, மந்தாக்கினி, மூலம், விப்புருதி, குன்மம், குஷ்டம், வாதம், பித்தநோய், விரணம், மூளையிரணம், அற்புதவிரணம், தேள்விஷம், மூஷிகவிஷம் நீங்கும்.

புங்குவித்து-- அபஸ்மாரம், நேத்திரரோகம், நாசிரோகம் தீரும்.
புஜபத்திரம்-- பாலக்கிரகம் தீரும்.
புடல்-- காமாலை, குஷ்டம் தீரும்.
புஷ்பாஞ்சனம்-- நேத்திரரோகந் தீரும்.
புதுப்பாண்டத்தினோடு-- பங்கநோய் நீங்கும். வாந்தி தீரும்.
புத்தரசுவிதை-- நேத்திரரோகம், சர்வவிஷம் தீரும்.
புரசம்பிசின்-- கிருமிநோய் தீரும்.
புரசு-- வாதசூலை, தேள்விஷம், நரை, திரை, முதுமை தீரும்.
புரசம்பட்டை-- பாலகிரகந் தீரும்.
புளிச்சதை-- உன்மாதம் நீங்கும்.
புளி-- குன்மம், மகோதரம், விரணம், உபசிம்மகவிரணம் தீரும்.
புளிப்பு மாதளை-- வந்தியரோகந் தீரும்.
புளியந் துளிர்-- சர்வவிஷம் நீங்கும்.
புளியம்புறணி-- அதிசாரம், மந்தாக்கினி தீரும்.
புளியம்புறணிச்சாம்பால்-- குன்மம், மகோதரம் நீங்கும்.
புளியம்பூச்சாறு-- நேத்திரரோகந் தீரும்.
புளியம்வேர்-- அதிசாரம், மந்தாக்கினி தீரும்.
புளியாரை-- கிராணி, குன்மம், மகோதரம், வந்தியரோகம், விரணந் தீரும்.
புளியிலை-- விரணந் தீரும்.
புளிவிதைத்தோல்-- பங்கநோய் தீரும்.
புளிவித்து-- அதிசாரந் தீரும்.
புறாவெச்சம்-- தேள்விஷந் தீரும்.
புற்றுமண்-- வன்மீகருத்தகுதம் தீரும்.
புனலி-- நாடிவிரணந் தீரும்.

பூ.

பூசணி-- மூத்திரக்கிரிச்சாரம், பித்தநோய் தீரும்.
பூசணிக்காய்-- க்ஷயரோகம், மூர்ச்சை, அதிக்குருசரம், உன்மாதம், அபஸ்மாரந் தீரும்.
பூசும்நீறு (விபூதி)-- காமியவிரணந் தீரும்.
பூமிசர்க்கரைக்கிழங்கு-- பித்தநோய் தீரும்.
பூலா-- அதிசாரம், மந்தாக்கினி, நேத்திரரோகம், நரை, திரை, முதுமை தீரும்.
பூவரசம்பூ-- பிரமேகந் தீரும்.
பூவரசு-- விசற்பி நீங்கும்.
பூனைப்பித்து-- அபஸ்மாரந் தீரும்.
பூனையெலும்பு-- பவுந்தரவிரணம், மூஷிகவிஷம் தீரும்.

பெ.

பெருங்காயம்-- கிராணி, மந்தாக்கினி, உருத்திரரோகம், உதரவரதன், கெற்பவிப்புருதி, குன்மம், மகோதரம், இரத்தகுன்மம், வாதசூலை, கிருமிநோய், வாதம், பூதகிரகம், தந்தரோகம், சிரோரோகம், சிலிபதவிரணம், சர்வவிஷம், ரிட்டகவிஷம், யோனிரோகம், தேள்விஷம், வாதசூலை தீரும்.

பெருங்கிரந்தி-- மேகக்கட்டி தீரும்.

பெருங்கோரைக்கந்தம் (பெருங்கோரைக்கிழங்கு)- சிரோரோகம் தீரும்.

பெருஞ்சிவிரி-- இரத்தமூலந் தீரும்.

பெருஞ்செங்குன்றி-- வசூரி தீரும்.

பெருநன்னாரி-- விசற்பி தீரும்.

பெருநாணல்-- பித்தநோய் தீரும்.

பெருந்துளசி-- கீட்டகவிஷம் தீரும்.

பெருமரப்பட்டை(ஈசுரமூலி)-- அதிசாரம், மந்தாக்கினி தீரும்.

பெருமல்லி-- குன்மந் தீரும்.

பெருவாகை-- குஷ்டம், சர்வவிஷம், தேள்விஷம், நகதந்தவிஷம் தீரும்.

பெருவாகையிலை-- தாபரவிஷங்கள் தீரும்.

பே.

பேயத்தி-- குஷ்டம், மூளையிரணந் தீரும்.

பேயத்திப்பட்டை-- பிரமேகந் தீரும்.

பேயத்திப்பால்-- நேத்திரரோகம் தீரும்.

பேயத்திப்புல்லுருவி-- வந்தியரோகந் தீரும்.

பேய்ச்சுரை-- சர்வவிஷந் தீரும்.

பேய்ப்பீர்க்கு-- இரத்தமூலம், சோகை, குஷ்டம், தாபரவிஷங்கள், சர்வவிஷம், மூஷிகவிஷந் தீரும்.

பேய்ப்பீர்க்கு வித்து-- உபசிம்மகவிரணந் தீரும்.

பேய்ப்புடல்-- விதாகநோய், விப்புருதி, வசூரி, பித்தநோய், சிம்மரோகம், சரதமவிரணம், தாபரவிஷங்க்ள் தீரும்.

பேய்மிரட்டி-- பூதகிரகந் தீரும்.

பேராமுட்டி-- பிரமேகம், வாதம் நீங்கும்.

பேராமுட்டி சுட்டபற்பம்-- நேத்திரரோகந் தீரும்.

பேரீஞ்சு-- க்ஷயரோகம், விதாகநோய், மதமூர்ச்சை, அதிசாரம், மந்தாக்கினி, பித்தநோய் தீரும்.

பேரீந்துப்பழம்-- நஷ்டவீரியந் தீரும்.

பொ.

பொடுதலை-- சிம்மரோகந் தீரும்.

பொடுதலைக்காய்-- கிராணி, மந்தாக்கினி தீரும்.

பொட்லுப்பு-- கிராணி தீரும்.
பொரி-- வாந்திநோய் தீரும்.
பொரிமா-- வாந்திநோய், விதாகநோய் தீரும்.
பொன்-- நேத்திரரோகம், தாபரவிஷங்கள், நரை, திரை, முதுமை, நஷ்டவீரியந் தீரும்.
பொன்முசுட்டை-- சிலந்திப்பூச்சி விரணந் தீரும்.
பொன்னாங்காணி-- மூத்திரக் கிரிச்சரம், பிரமேகம், மகோதரம், நேத்திரரோகம், அனற்பட்டவிரணந் தீரும்.
பொன்னாவாரை-- மதமூர்ச்சை, வெண்குஷ்டந் தீரும்.

போ.

போளம்-- மேகக்கட்டி, பங்கநோய் தீரும்.

ம.

மகிழம்பழம்-- நஷ்டவீரியம், நீங்கும்.
மகிழம்பூ-- மூத்திரக்கிரிச்சரம் நீங்கும்.
மகிழம்வித்து-- தந்தரோகம், சர்வவிஷம் நீங்கும்.
மஞ்சட்டி-- சிரோரோகம், விரணம், நாடி விரணம், வெங்கலாஞ்சிய விரணம், கீட்டகவிஷம், மூஷிகவிஷம் நீங்கும்.
மஞ்சளிலை-- சர்வவிஷம் தீரும்.
மஞ்சள்-- மேகக்கட்டி, சோகை, வகூரி, குஷ்டம், வாத சுரோணிதம், பாலக்கிரம், பூதகிரகம், நேத்திரரோகம், கன்னரோகம், நாசி ரோகம், அதரரோகம், தந்தரோகம், சிம்மரோகம், கண்டரோகம், சிரோரோகம், விரணம், அற்புத விரணம், வெங்கலாஞ்சியவிரணம், யோனிரோகம், தேள்விஷம், மூஷிகவிஷம், அளாகவிஷம், நரை, திரை, முதுமை நீங்கும்.
மணலி-- மூத்திரக்கிரிச்சரம் நீங்கும்.
மணித்தக்காளி-- சுரசாதங் குரற்கம்மல், குஷ்டம், சிம்மரோகம், சர்வவிஷம், நரை, திரை, முதுமை நீங்கும்.
மணிப்புங்கு-- உதரவரதன், விப்புருதி, வகூரி, அசக்கள்ளியாதிரணம் நீங்கும்.
மணிப்புங்குவித்து-- மகோதரம், சோகை, குஷ்டந் தீரும்.
*மண்டூரம்-- பிரமேகம், பாண்டு தீரும். (*இதன் முறைகள் நமது அனுபோக வைத்திய நவநீதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.)
மதுரம்-- (அதிமதுரம்)
மத்தம்-- (ஊமத்தை)
மயிர்-- அனற்பட்டவிரணந் தீரும்.
மயிர்மாணிக்கம்-- சயரோகந் தீரும்.
மயிலடி-- காமாலை தீரும்.
மயிலடிமரம்-- இரத்தமூலந் தீரும்.

மயிலிறகு-- இரத்தமூலம், பூதகிரகம், சத்தியாவிரணந் தீரும்.
மயிலெச்சம்-- அளாகவிஷந் தீரும்.
மயூரசிகி-- சர்வவிஷந் தீரும்.
மரமஞ்சள்-- உருத்திரரோகம், மூத்திரக்கிரிச்சரம், குஷ்டம், நேத்திரரோகம், சிம்மரோகம், சருவாசியரோகம், கண்டரோகம், சிரோரோகம், விரணம், சிலிபதவிரணம், யோனிரோகம், மூஷிகவிஷம், நஷ்டவீரியந் தீரும்.
மரல்-- மூலரோகம் தீரும்.
மருக்காரை-- குஷ்டம், கன்னரோகம், கண்டரோகம், நாடிவிரணம், சர்வவிஷம் நீங்கும்.
மருக்காரைக்காய்-- நேத்திரரோகம் தீரும்.
மருக்கொழுந்து-- மூஷிகவிஷம் தீரும்.
மருதணி(மருதோன்றி)-- நரை, திரை, முதுமை தீரும்.
மருதம்பட்டை-- பிரமேகம், வெண்குஷ்டம், வெங்கலாஞ்சிய விரணம், தந்தரோகம் தீரும்.
மருதாணிப்பட்டை. (மருதோன்றிப்பட்டை)-- தனவிப்புருதி நீங்கும்.
மருதாணியிலை (மருதோன்றியிலை)-- தன விப்புருதி நீங்கும்.
மருதாரை-- சிலிபத விரணம் தீரும்.
மருது-- பங்கநோய் தீரும்.
மருதோன்றி-- வாதம் தீரும்.
மருள்-- கன்னரோகம், தாபரவிஷங்கள், சர்வவிஷம், நரை, திரை, முதுமை தீரும்.
மலைவேப்பம்பிசின்-- மேகக்கட்டி தீரும்.
மனிதர்மூத்திரம்-- உதரவரதன் தீரும்.
*மனோசிலை-- குஷ்டம், நேத்திரரோகம், சிம்மரோகம் அசக்கள்ளியாதிரணம், வெங்கலாஞ்சிய விரணம், காமியவிரணம், சிலந்திப்பூச்சி, விரணம், நரை, திரை, முதுமை தீரும். (*இதன் முறைகள் நமது அனுபோக வைத்திய நவநீதத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.)

மா.

மாக்கல்-- நாடிவிரணம் தீரும்.
மாங்காய்-- சருவாசியரோகம் தீரும்.
மாஞ்சில்-- (சடாமாஞ்சில்)
மாட்சிகம்-- (தேன்)
மாதளை-- வந்தியரோகம் தீரும்.
மாதுலங்கம் (துருஞ்சி நாரத்தை)-- அரோசிகம், வாந்தி, சன்னாசரோகம் நீங்கும்.
மாதுளங்காய்-- அதிசாரம், மந்தாக்கினி நீங்கும்.

மாதுளம்பழம்-- வாந்தி, விதாகநோய், மதமூர்ச்சை, குன்மம், பித்தநோய், நீங்கும்.
மாலதின்செடி (விஷ்ணுகிரந்தி)-- காமிய விரணம் நீங்கும்.
மால்கிராந்தி(விஷ்ணுகிரந்தி)-- சிம்மரோகம் தீரும்.
மாவிலிங்கப்பட்டை-- அசுமரி, குன்மம் தீரும்.
மாவிலிங்கை-- விப்புருதி, வாதம், நரை, திரை, முதுமை தீரும்.
மாவிலிங்கையிலை-- யோனிரோகம் தீரும்.
மான்கொம்பு-- காமாலை, நேத்திரரோகம் தீரும்.
மான்பல்-- நேத்திரரோகம் தீரும்.

மி.

மிளகு-- சுரசாதங் குரற்கம்மல், மூலம், உன்மாதம், சிம்மரோகம், கண்டரோகம், விரணம், பங்கநோய், யோனிரோகம், தாபர விஷங்கள் தீரும்.
மிளகுத்தூள்-- சீதபித்தம் தீரும்.

மு.

முக்காவேளை-- கிராணி, மந்தாக்கினி, நரை, திரை, முதுமை தீரும்.
முசுட்டையிலைவித்து-- பிரமேகம் நஷ்டவீரியம் தீரும்.
முசுமுசுக்கை-- பித்தநோய், ஆவரணபைத்தியம் தீரும்.
முசுறுமுட்டை-- உன்மாதம் தீரும்.
முடக்கொத்தான்-- கெற்பவிப்புருதி, மூஷிகவிஷம், நரை, திரை, முதுமை தீரும்.
முடக்கொத்தான்வித்து-- நஷ்டவீரியம் தீரும்.
முதியார் கூந்தல்-- அசுமரி, வாதம் தீரும்.
முத்தக்காசு-- (கோரைக்கிழங்கு)
முத்தம்(முத்து)-- வாந்திநோய், விதாகநோய், மதமூர்ச்சை, அதிசாரம், மந்தாக்கினி, பாண்டு, காமாலை, வசூரி, குஷ்டம், கிருமிநோய், பித்தநோய், உன்மாதம், சருவாசியரோகம், சிரோரோகம், தாபரவிஷங்கள். நரை, திரை, முதுமை தீரும்.
முத்துச்சிப்பி-- மூளையிரணம் தீரும்.
முந்திரி-- மூத்திரக்கிரிச்சரம் தீரும்.
முந்திரிகைக்கனி-- (திராக்ஷைப்பழம்) சுரசாதங்குரற்கம்மல், மதமூர்ச்சை, சோமரோகம், பித்தரோகம், பங்கநோய், தாபர விஷங்கள், சயரோகம், உன்மாதம், காமியவிரணம், நஷ்டவீரியம் தீரும்.
முயலிரத்தம்-- வெங்கலாஞ்சிய விரணம் தீரும்.
முருங்கை-- நேத்திரரோகம், கன்னரோகம் தீரும்.
முருங்கைப்பட்டை-- பிரமேகம், அசுமரி தீரும்.
முருங்கைப்பிஞ்சு-- நஷ்டவீரியம் தீரும்.
முருங்கைப்பூ-- பித்தநோய், நஷ்டவீரியம் தீரும்.

முருங்கைவித்து-- உபசிம்மக விரணம் தீரும்.
முருங்கைவேர்-- விப்புருதி, மூளையிரணம், அற்புதவிரணம், சிலிபதவிரணம் தீரும்.
முலைப்பால்-- மதமூர்ச்சை, உன்மாதம், நேத்திரரோகம், சிரோரோகம், மூஷிகவிஷம் தீரும்.
முள்முருக்கிலை-- இரத்தகுன்மம் தீரும்.
முள்முருக்குப்பட்டை-- இரத்த குன்மம், நரை, திரை, முதுமை தீரும்.
முள்முருக்கு-- மூளையிரணம் தீரும்.
முள்ளங்கிவித்து-- உபசிம்மக விரணம் தீரும்.
முள்ளாங்கி (முள்ளங்கி)-- சுரசாதங் குரற்கம்மல், குன்மம், கன்னரோகம், நாசிரோகம், கீட்டகவிஷம் தீரும்.
முள்ளி-- மூலரோகம் தீரும்.

மூ.

மூக்குரட்டை-- உருத்திரரோகம், கிராணி, மந்தாக்கினி, விப்புருதி, இரத்தகுன்மம், வாதசூலை, கிருமிநோய், தாபரவிஷங்கள், சர்வவிஷம் தீரும்.
மூக்குரட்டைவேர்-- அசுமரி, குன்மம் நீங்கும்.
மூங்கிலிலை-- பிரமேகம் தீரும்.
மூங்கில்விரை-- குஷ்டம் தீரும்.
மூங்கிற்குருத்து-- கிருமிநோய், வாதசுரோணிதம், தீரும்.
மூங்கிற்புறணி-- பங்கநோய் தீரும்.

மெ.

மெருகு-- மூலரோகம் தீரும்.
மெழுக்கு-- அதரரோகம், விரணம், அனற்பட்ட விரணம் தீரும்.

மே.

மேனி-- (குப்பை மேனியைப் பார்க்க)

மை.

மைசாட்சி-- (குக்கிலைப் பார்க்க)

மோ.

மோதம்-- (ஓமம்)
மோர்த்தெளிநீர்-- மதமூர்ச்சை தீரும்.

ய.

யவச்சாரம்-- மூலரோகம், கிராணி, மந்தாக்கினி, அசுமரி, குன்மம், இரத்தகுன்மம், வாதசூலை, மகோதரம், சோகை, கிருமிநோய்,

அதிஸ்தூலம், சிம்மரோகம், சருவாசியரோகம், கண்டரோகம், கீட்டகவிஷம் தீரும்.

யா.

யானைக்கொம்பு-- பூதகிரகம், நேத்திரரோகம் தீரும்.
யானைத்திப்பிலி-- சுரசாதங் குரற்கம்மல், நாசிரோகம் தீரும்.
யானைநெருஞ்சி-- மூத்திரக்கிரிச்சரம் தீரும்.
யானைப்பல்-- நேத்திரரோகம் தீரும்.
யானைப்பித்து-- அபஸ்மாரம் தீரும்.
யானைமூத்திரம்-- உதரவரதன் தீரும்.

வ.

*வங்கபற்பம்-- மூத்திரக்கிரிச்சரம் தீரும். (*இதன் முறைகள் நமது அநுபோக வைத்திய நவநீதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.)
*வங்கம்-- தாபர விஷங்கள், நஷ்டவீரியம், கரதமவிரணம் தீரும்.
வசம்பிலை--சுரசாதங் குரற்கம்மல் தீரும்.
வசம்பு-- கிராணி, மந்தாக்கினி-- கெற்பவிப்புருதி, குன்மம், விசற்பி, குஷ்டம், கிருமிநோய், பாலக்கிரகம், பூதகிரகம், நேத்திரரோகம், கன்னரோகம், மூளையிரணம், அற்புதவிரணம், சிலிபதவிரணம், முகதூஷகவிரணம், யோனிரோகம், தாபரவிஷங்கள், சர்வவிஷம், கீட்டகவிஷம், நரை, திரை, முதுமை தீரும்.
வச்சிரப்பாலைவிதை-- சர்வவிஷம் தீரும்.
வச்சிரப்பால் (வச்சிரப்பாலைப்பால்)-- நாடிவிரணம், தேள்விஷம் தீரும்.
வடித்தசாதம்-- வெங்கலாஞ்சிய விரணம் தீரும்.
வட்டக்கிலுகிலுப்பை-- உதரவரதன், சோகை, குஷ்டம் தீரும்.
வட்டக்கிலுகிலுப்பை செடி-- மகோதரம் தீரும்.
வட்டத்திருப்பி-- அதிசாரம், மந்தாக்கினி, யோனிரோகம், தாபர விஷங்கள், சர்வவிஷம் கீட்டக விஷம் தீரும்.
வட்டத்திருப்பிவேர்-- பிரமேகம் நீங்கும்.
வரப்பின்முள்ளி-- வாதசுரோணிதம், உபசிம்மக விரணம் தீரும்.
வரிக்கடுக்காய்-- மகோதரம் தீரும்.
வலம் புரிக்காய்-- நேத்திரரோகம் தீரும்.
வல்லாரை-- உன்மாதம், அபஸ்மாரம், நாசிரோகம், நரை, திரை, முதுமை தீரும்.
வல்லாரையிலை-- வசூரி தீரும்.
வசூதலம் பழம்-- பூதக்கிரகம் தீரும்.
வழுதலை-- வாத சுரோணிதம், விப்புருதி தீரும்.
வழுதலைவேர்-- சுரசாதங் குரற்கம்மல், சிலிபத விரணம் தீரும்.
வழுனவக்கீரை-- அனற்பட்ட விரணம் தீரும்.

வள்ளி-- விசற்பி தீரும்.
வள்ளிக்கிழங்கு-- நஷ்டவீரியம் தீரும்.
வறட்சுண்டி-- அதிசாரம், மந்தாக்கினி, அசுமரி தீரும்.
வறட்பூலா-- நேத்திரரோகம் தீரும்.
வறுத்தஉப்பு-- பங்கநோய் தீரும்.
வனமல்லி-- குஷ்டம் தீரும்.
வனமுருக்கு-- குன்மம் தீரும்.
வனமுருக்கின்றோற் சாம்பல்-- இரத்த குன்மம்தீரும்.
வன்னி-- உபசிம்மக விரணம், வெங்கலாஞ்சிய விரணம் தீரும்.
வன்னிப்பட்டை-- நகதந்தவிஷம் தீரும்.
வன்னிளந்தும்பியின்காய்-- அதிசாரம், மந்தாக்கினி தீரும்.

வா.

வாகைப்பிசின்-- பிரமேகந் தீரும்.
வாந்தி செய்வித்தல்-- விசூழி தீரும்.
வாய்த்தம்பலம்-- அரைகடிவிஷம் தீரும்.
வாய்விளங்கம்-- பாண்டு, குஷ்டம், கிருமிநோய், அதிஸ்தூலம், நாசிரோகம், சிரோரோகம், பவுந்தரவிரணம், கீட்டகவிஷம், நரை, திரை, முதுமை, தாபர விஷங்கள், சர்வவிஷம் தீரும்.
வாலுளுவை-- குன்மம், குஷ்டம், நேத்திரரோகம், கண்டரோகம், நரை, திரை, முதுமை தீரும்.
வாழை-- அதிசாரம், மந்தாக்கினி, நரை, திரை, முதுமை தீரும்.
வாழைக்கிழங்கு-- சோமரோகம், மூளையிரணம் தீரும்.
வாழைப்பழம்-- நஷ்டவீரியம், சோமரோகம் தீரும்.

வி.

விடத்தேரிலை-- அதிசாரம், மந்தாக்கினி தீரும்.
விடத்தேரின் பிசின்-- பிரமேகம் தீரும்.
விபூதி-- வுசூரி, சீதபித்தம் தீரும்.
விரையாவரை-- பவுந்தர விரணம் தீரும்.
விலாமிச்சைவேர்-- விதாகநோய், சோமரோகம், விப்புருதி, விசற்பி, குஷ்டம், மதமூர்ச்சை, மேகக்கட்டி, சீதபித்தம், பித்தநோய், சிரோரோகம், தீரும்.
வில்வ இளங்காய்-- அதிசாரம், மந்தாக்கினி தீரும்.
வில்வம்-- வாதசுரோணிதம் நீங்கும்.
விழுதியிலை-- அசுமரி, விப்புருதி, சோகை நீங்கும்.
விளக்கெண்ணெய்-- உதரவரதன், அசுமரி, கெற்பவிப்புருதி, வாதசூலை, மகோதரம், வாதம், விரணம், மூளையிரணம், சிலிபதவிரணம், குன்மம் தீரும்.

விளங்கம்-- (வாய்விளங்கம்)
விளா-- பாலக்கிரகம் தீரும்.
விளாங்கனி-- வாந்தி தீரும்.
விளாம்பட்டை-- பிரமேகம் தீரும்.
விளாம்பிசின்-- அசுமரி, பிரமேகம், மூஷிகவிரணம், தீரும்.

வீ.

*வீரம்-- காமியவிரணந் தீரும். (*இது விஷதருமமுள்ளது. இதன் முறைகள் நமது அனுபோக வைத்திய நவநீதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.
வீழி-- கெற்பவிப்புருதி, குஷ்டம், வாதம் தீரும்.

வெ.

வெங்காரம்-- இரத்தமூலம், கிராணி, மந்தாக்கினி, அசுமரி, சர்வவிஷந் தீரும்.
வெட்டிவேர்-- மதமூர்ச்சை, அதிசாரம், மந்தாக்கினி, அசுமரி, மேகக்கட்டி, சோமரோகம், விப்புருதி, விசற்பி, கண்டரோகம், அனற்பட்டவிரணம், நகதந்தவிஷந் தீரும்.
வெட்பாலை-- இரத்தமூலம், கண்டரோகம், அனற்பட்டவிரணந் தீரும்.
வெட்பாலைப்பட்டை-- அதிசாரம், மந்தாக்கினி தீரும்.
வெட்பாலைப்பருப்பு-- அதிசாரம், மந்தாக்கினி, சீதபித்தம், சிலிபதவிரணந் தீரும்.
வெட்பூலா-- வந்தியரோகந் தீரும்.
வெண்கருப்பஞ்சாறு-- நஷ்டவீரியந் தீரும்.
+வெண்கலம்-- நேத்திரரோகம், விரணந் தீரும். (+இதன் முறைகளும் நமது அனுபோக வைத்தியத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.
+வெண்காரம்-- நேத்திரரோகந்தீரும். (+இதன் முறைகளும் நமது அனுபோக வைத்திய நவநீதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.)
வெண்குங்கிலியத்தைலம் பூசல்-- குணக்கநோய்தீரும்.
வெண்குங்கிலியம்-- அதிசாரம், மந்தாக்கினி; நரை, திரை, முதுமை தீரும்.
வெண்ணெய்-- வெண்குஷ்டம், நேத்திரரோகம், நஷ்டவீரியம் தீரும்; கெற்பினி சுகமாம்.
வெண்ணெய்தற்கிழங்கு-- சிரோரோகந் தீரும்.
வெந்நீர்-- அனற்பட்டவிரணந் தீரும்.
வெல்லம்-- அரோசிகம், மூலரோகம், மூளையிரணம், வெங்கலாஞ்சியவிரணம், சர்வவிஷந் தீரும்.
வெள்வேல்-- சிம்மரோகந் தீரும்.

வெள்வேற்பிசின்-- பிரமேகந் தீரும்.
வெள்ளரி-- மூத்திரக்கிரிச்சரம், பித்தநோய், வாதசுரோணிதம் தீரும்.
வெள்ளறுகு-- மூத்திரக்கிரிச்சரம், சோகை, விசற்பி, முக்தூஷகவிரணம், சர்வவிஷம், நஷ்டவீரியந் தீரும்.
வெள்ளறுகுவித்து-- அதிசாரம், மந்தாக்கினி தீரும்.
வெள்ளாட்டுக்குழம்புமோர்-- காமாலை தீரும்.
வெள்ளாட்டுச்சாணம்-- சோகை தீரும்.
வெள்ளாட்டுத்தளிர்-- அதிசாரம், மந்தாக்கினி தீரும்.
வெள்ளாட்டுநீர்-- சோகை, கன்னரோகந் தீரும்.
வெள்ளாட்டுப்பால்-- க்ஷயரோகம், வெங்கலாஞ்சிய விரணந் தீரும்.
வெள்ளாட்டுமோர்-- பாண்டு தீரும்.
*வெள்ளி-- நேத்திரரோகம், தாபரவிஷங்கள் தீரும். (*இதன் முறைகளும் நமது அனுபோக வைத்திய நவநீதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.)
வெள்ளிலோத்திரம்-- வெங்கலாஞ்சிய விரணந் தீரும்.
$ வெள்ளீயம்-- மேகக்கட்டி தீரும். ($ இதன் முறைகளும் நமது அனுபோக வைத்திய நவநீதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.)
வெள்ளுள்ளி-- உதரவரதன், இரத்தகுன்மம், சோகை, கிருமிநோய், ஆவரண பைத்தியந் தீரும்.
வெள்ளைக்காக்கணான்-- மகோதரம், தேள்விஷம், வெண்குஷ்டம், மூளையிரணம், சர்வவிஷம், நஷ்டவீரியம், உதரவரதன், நேத்திரரோகம், நரை, திரை, முதுமை தீரும்.
வெள்ளைக்காக்கணாம்பூ-- அபஸ்மாரந் தீரும்.
வெள்ளைக்குங்கிலியம்-- பாலக்கிரகம், அதரநோய், சத்தியாவிரணந் தீரும்.
வெள்ளைச்சாரணை-- தாபரவிஷங்கள், நேத்திரரோகந் தீரும்.
+வெள்ளைப்பாஷாணம்-- காமியவிரணந் தீரும். (+விஷ தருமமுள்ளது, இதன் முறைகள் நமது அனுபோக வைத்திய நவநீதத்திற் சொல்லப்பட்டிருக்கின்றன.)
வெள்ளைவசம்பு-- வந்தியரோகந் தீரும்.

வே.

வேங்கை-- குஷ்டம், கண்டரோகம், அதிஸ்தூலந்தீரும்.
வேங்கைப்பட்டை-- அதிசாரம், மந்தாக்கினி, தீரும்.
வேப்பம்பட்டை-- தனவிப்புருதி, விரணம், பதுமகண்டக விரணம் தீரும்.
வேப்பம்பருப்பு-- கிருமிநோய் தீரும்.
வேப்பம்பிசின்-- பிரமேகந் தீரும்.
வேப்பம்பூ-- அரோசிகம் தீரும்.
வேப்பம்வேர்-- வசூரி, கரதாமவிரணம் தீரும்.

வேப்பிலை-- வசூ..ி, கிருமிநோய், நகதந்தவிஷம், பாலக்கிரகம், பூதகி.;கம், அதரநோய் தீரும்.
வேப்பெண்ணெய்-- வாதம், கன்னரோகம். தீரும்.
வேம்பாடம்-- விரணம் தீரும்.
வேம்பு-- மூத்திரக்கிரிச்சரம், விப்புருதி, குன்மம், வெங்கலாஞ்சிய விரணம், வசூரி, குஷ்டம், பித்தநோய், பூதகிரகம், சிம்மரோகம், சருவாசியரோகம், நரை, திரை, முதுமை தீரும்.
வேம் பொட்டறை-- நாடிவிரணம் தீரும்.
வேல்-- சருவாசிய ரோகம் தீரும்.
வேளை-- கிராணி, மந்தாக்கினி, குன்மம், வாதசூலை, மகோதரம், சோகை, வெண் குஷ்டம், நேத்திரரோகம், உதரவரதன், தந்தரோகம் தீரும்.
வேளைவேர்-- யோனிரோகம் தீரும்.

பெருட்பண்பு அகராதி

முற்றுப் பெற்றது.

சதசுலோக மென்னும் வைத்திய சதகத்தின் அநுபந்தம்.

நாம்முன் முகவுரையிற் சொல்லியிருப்பதுபோல் மேற்கண்ட நூலில் இன்னின்ன வியாதிக்கு இன்னின்ன சரக்கெனச் சொல்லப் பட்டிருக்கிறதே தவிர அவற்றை உபயோகிக்கும் முறைகள் விவரமாகச் சொல்லப்படவில்லை; வைத்திய சாஸ்திரத்தில் நிபுணர்களாகிய பண்டிதர்களுக்கு இவைகளை உபயோகிக்கும் முறை விவரங்கள் தெரிந்திருக்கும். ஆனால், சாதாரணமானவர்களுக்கும், மற்றவர்களுக்கும் உபயோகப்படும் படியாக, இந்நூலின் ஈற்றிலிருக்கிற பாட்டிற் கண்ட சில முறைகளின் பொது விதிகளையும் வேறு பல பொது விதிகளையும், சொல்லுவாம்; புத்திமான்கள் இவற்றை ஆழ்ந்த கருத்துடன் பலமுறை வாசித்துச் சமயோசிதம்போல் உபயோகித்துச் சுகமடைவார்களென நம்புகின்றோம்.

பொது விதிகள்.

தனிச்சரக்காயிருந்தாலும், பல சரக்குகளாயிருந்தாலும் வியாதிகளுக்காக அவற்றை முக்கியமாய்க் கீழ்க்காணும் சிலவகைகளாக அனுபவமுடையோர் உபயோகித்து வந்திருக்கின்றார்கள் அவையாவன:-

1. சுரசம்.

இதன் அருத்தம்:- சு-- நல்ல, இரசம்--சாறு; சுரசம்-- மதுரச்சாறு. அச்சாறுகளாவன:- கரும்புச்சாறு, தித்திப்புக் கனிவர்க்கங்களின் சாறு, அதிமதுரச்சாறு இவைபோன்றவைகளாம். ஆனால் வைத்திய பரிபாஷையில் வேர், இலை முதலியவைகளைப் பச்சையாகக் கொண்டுவந்து அந்தந்த இனத்திற்குத் தக்கபடி கசக்கியும், நசுக்கியும், இடித்தும், வதக்கியும், ஆலை முதலிய கருவிகளில் ஆட்டியும் அந்தந்த பதார்த்தத்திற்குத் தகுந்தபடியும் அந்தந்தப் பதார்த்தத்தின் அளவிற்குத் தகுந்தபடியும் எடுத்த தனிரசத்துக்குச் சுரசமென்றும் சுயரசக் கஷாயமென்றும் பெயர். வேர், இலை முதலியவைகளை நையச்சிதைத்து அதற்கிரண்டுபங்கு ஜலத்தில் ஒருநாள் ஊறவைத்து எடுத்து வடிகட்டிக் கொள்வதற்கும் சுரசமென்று பெயர்; இது உத்தமமாம்; இப்படிச் செய்யக்கூடாத காலங்களில். 12-மணிநேரம் ஊறவைத்துப் பிழிந்தெடுத்துக் கொள்ளலாம்; உலர்ந்தபட்டை, வேர் முதலியவைகளை நையச்சிதைத்து

அதற்கு நான்குபங்கெடை தண்ணீரில் அல்லது எட்டுப்பங்கு தண்ணீரில் ஒருநாள் ஊறவைத்து வடிகட்டிப் பிழிந்தெடுத்துக் கொள்வதும் சுரசமாம்; இதற்கு சீதோதக ஊறற்கஷாயமென்றும் பெயர்.

இதன் பிரமாணம்:- வாலிபருக்குச் சாதாரண மூலிகைகள், சரக்குகளானால் அரைப்பலமுதல் முக்கால் பலம் வரையிலாம். பாலர்களுக்கு மேற்கண்ட அளவில் பதினாறில் ஒருபாகமாம்.

ஆனால் ஊமத்தை, கொடிவேலி முதலியவை போன்ற விஷதர்மமுள்ளவைகளும் தீக்ஷணிய முள்ளவைகளுமானால் மேற்கண்ட அளவு கொடுக்கலாகாது. அந்தந்தச் சரக்கின்வேகத்திற்குத் தக்கபடி அளவைக்குறைத்து உபயோகிக்கவேண்டும். அவரவர்களின் தேக சுபாவத்தையும் கவனித்துச்செய்ய வேண்டியது.

இந்தச் சுரசத்துடன் அந்தந்த வியாதிக்குத் தகுந்தபடி, தேன், சர்க்கரை, வெல்லம், க்ஷாரங்கள், சீரகம், லவணம், நெய், எண்ணெய், சூரணங்கள் முதலியவைகளைச் சேர்த்துக் கொடுக்கவேண்டிய திருந்தால் ஒரு வராகனெடை சேர்த்து உபயோகிக்கலாம். அந்தந்த வியாதிகளில் பல சரக்குகள் சொல்லப்பட்டிருப்பதால் வியாதிக்குத் தகுந்தபடியும் சமயோசிதம் போலவும் இஷ்டமான சரக்கை மேன்பொடியாகவும் அனுபானமாகவும் உபயோகித்துக் கொள்ளலாம். பலசரக்குகளைச் சேர்த்துச் சூரணஞ் செய்தால் அந்தச் சூரணத்தின் பிரமாணம் அரை விராகனெடையாம்.

குறிப்பு.

ஒரு பாத்திரத்தை அடுப்பில் வைத்துச் சுடவைத்து அதில் பிழிந்தசாற்றை ஊற்றிமுரித்துக்கொள்வதற்குச் சுரசமெனச் சிலவிடங்களில் சிலரால் வழங்கப்படுகிறது. உஷ்ணசம்பந்த வியாதிகளில் மேற்கண்டபடி முரிக்காமலும், சீதளசம்பந்த வியாதிகளில் மேற்கண்டபடி முரித்துமும் உபயோகிப்பது யூநானி சாஸ்திரக் கிரமம்.

ஆயினும், சீந்தில் கொடி முதலியவை போன்றவைகளை எந்த வகையிலும் காய்ச்சலாகாது. ஆனால் அவற்றைக் குளிர்ந்த ஜலத்தில் 30. நாழிகை ஊறவைத்து வடிகட்டிக்கொள்ளலாம்.

2. ஹிமம்.

ஒரு பங்கு திரவியத்தை நையச்சிதைத்து ஆறுபங்கு ஜலத்திற் போட்டு ஒருநாள் ஊறவைத்து மறுநாள் வடிகட்டிக்கொள்வதற்கு ஹிமம் என்று பெயர். இதுவும் சுரசத்திற் சேர்ந்த ஒருவகையேயாம். இதற்கு இன்னும் சீதள கஷாயம் என்றும், தண்ணீர் ஊறற்கஷாய மென்றும் பெயருண்டு.

பிரமாணம்:-- மேற்கூறிய சுரசத்தினளவே இதற்குமாம்; தேன், நெய், முதலியவைகளையும், மேன்பொடிகளையும், சேர்க்கவேண்டியிருந்தால் மேற் சுரசத்தில் சொன்னபடியே சேர்த்துக் கொள்ளவேண்டியது.

3. கல்கம்.

ஈரமான சரக்கை அரைத்து உருண்டை செய்து கொள்வதற்குக் கல்கம் என்று பெயர்.

உலர்ந்த சரக்காயிருந்தால் ஜலம் விட்டரைத்து உருண்டை செய்து கொள்ளவேண்டியது.

பிரமாணம்:-- விராகனெடை-1 முதல் 2½ . வரையில் தேக பலம் வியாதிபலம் ஆகியவைகளுக்குத் தகுந்தபடி கொடுக்கவேண்டியது.

தேன், நெய், எண்ணெய் இவைகளை இதனுடன் சேர்க்கவேண்டியிருந்தால் இதற்கிரண்டுபங்கும், வெல்லம், சர்க்கரை இவற்றைச் சேர்க்கவேண்டியிருந்தால் சமனளவும் சேர்க்கவேண்டியது.

திப்பிலியைக் கல்கமாகச்செய்து சாப்பிடவேண்டிருந்தால் முதல் நாள் 5. திப்பிலியைப்பொடித்துத் தண்ணீர் வார்த்தரைத்து உருட்டிபொடித்து வியாதிக்குத் தக்கவாறு மேற்கண்டபடி தேன், நெய், முதலியவைகளிற் கலந்து சாப்பிடவேண்டியது; மறுநாள் ஒரு திப்பிலியை அதிகப்படுத்தி முதல் நாள் சித்தம்செய்தபடி செய்து சாப்பிடவேண்டியது. இவ்விதமே பிரதிதினமும் ஒவ்வொரு திப்பிலியை அதிகப்படுத்திச்சாப்பிட்டு வரவேண்டியது. இப்படியே பதினாறு நாள் இருபது திப்பிலி ஆகும் வரையில் சாப்பிடவேண்டியது. பதினேழாம் நாள் முதல் பிரதிதினமும் ஒவ்வொரு திப்பிலியாக குறைத்துக் கொண்டு வந்து ஐந்து திப்பிலிக்குவந்தவுடன் நிறுத்திவிடவேண்டியது. எந்த வியாதிக்காக நாம் கல்கம் சாப்பிட்டோமோ அந்த வியாதி தீர்ந்துபோகும். அப்படித் தீராதிருந்தால் இடையில் இரண்டொருவாரம்விட்டு மறுமுறை சாப்பிடவேண்டியது. இவ்விதம் மூன்றுமுறை செய்யின் எவ்வித கடினவியாதியும் தீர்ந்துபோகும்; எனினும், இதனால் பிரதானமாக இரைப்புரோகம், சுவாசரோகம், மந்தாரகாசம், முதலிய காசரோகங்கள், க்ஷயம், ஈழை, இருமல் முதலிய கபசம்பந்தரோகங்கள் ஆகியவை தீரும்.

குறிப்பு.

மிளகு, இலவங்கம், சீரகம், முதலிய எந்தச் சரக்கையும் மேற்கண்டவிதமாக உபயோகிக்கலாம்; இவ்விதம் உபயோகிப்பதற்குக் கற்பமுறையென்று பெயர். இந்தச் சதகத்தில் அந்தந்த வியாதிக்குப் பலசரக்குகள் சொல்லப்பட்டிருப்பதால் தேக சுபாவம் முதலியவைகளுக்கேற்றபடி ஒன்றைத் தெரிந்தெடுத்து மேற்கண்ட

கற்பமுறைப்படி உபயோகித்தால் கடினமான வியாதிகளெல்லாம் தீர்ந்து பூரண சவுக்கியமுடைய ஏதுவாகும். இதற்கு விடாமுயற்சியும் நன்னம்பிக்கையும், பூரணவிசுவாசமுமே பிரதானம், இவ்விதமே மேலே சொல்லியிருக்கப்பட்ட சுரசங்களையும், இனிச்சொல்லப்படும் கஷாயம் முதலியவைகளையும் மேற்கண்ட முறைப்படியே தொடர்ச்சியாக உபயோகித்துவந்தால் பலவகை நன்மைகளுண்டாமென்பது திண்ணம். சந்தேகமுள்ளவர்கள் இந்த விஷயத்தை அவரவர்கள் தம் தம் அனுபவசித்தமாகப் பரீட்சித்துக்கொள்ளலாம்.

4. கஷாயம்.

மரம், வேர் முதலியவற்றின் சக்கைகளையாவது பட்டைகளையாவது நையச்சிதைத்து ஜலத்தைவிட்டுச் சுண்டக்காய்ச்சி வடிகட்டிக் கொள்வதற்குக் கஷாயமென்றுபெயர்; இது சிலவகைப்படும்.

1. வேர்ப்பட்டை சக்கை முதலியவைகளை நையச்சிதைத்து அதற்கு நான்குபங்கெடை ஜலத்திற்போட்டுக் காய்ச்சி நான்கிலொரு பாகமாகச் சுண்டினபின்வடிகட்டிக் கொள்வதற்குச் சிரிதகஷாயமென்று பெயர்.

2. மேற்படி சரக்குகளை நையச்சிதைத்து எட்டுப்பங்கெடை ஜலத்திற்போட்டுக்காய்ச்சி எட்டிலொரு பாகமாகச் சுண்டவைத்து வடிகட்டிக் கொள்வதற்கும், பதினாறுபங்கு ஜலத்தைவிட்டு எட்டிலொன்றாகக் காய்ச்சிக் கொள்வதற்கும் அஷ்டபாகக் கஷாயமென்று பெயர்.

3. மேற்கண்டவைகளை மேற்கண்டபடி பதினாறுபங்கு ஜலத்திற்போட்டுக் காய்ச்சிப் பதினாறிலொன்றாகச் சுண்டவைத்துக் கொள்வதற்குச் சோடசபாகக்கஷாயமென்று பெயர்.

திரவியங்களின் வயிரம், கடினம், மிருது, இலேசுத்துவம் முதலியவைகளுக்குத் தகுந்தபடி மேற்கண்டிருக்கிற வகைகளுள் ஒன்றாகத் தனித்தனி கஷாயம் செய்து கொள்ளவேண்டியது. கடினமான சரக்குகளையும் இலேசான சரக்குகளையும் சேர்த்துக் கஷாயம் செய்யவேண்டியிருந்தால் நேரப்படவெந்து சத்திறங்குகிற கடினமான சரக்குகளை ஜலத்தில் முதலில் தனியே போட்டுக்காய்ச்சிப் பிறகு சீக்கிரத்தில் வெந்து சத்திறங்குகிற இலேசான சரக்குகளைச் சேர்த்துக் காய்ச்சவேண்டியது. நுண்மையான சரக்குகளைப்பத்து நிமிஷம் முதல் முப்பது நிமிஷம் வரையில் காய்ச்சினால் போதும்.

கஷாயங்களைக் கொஞ்சம் சூடாயிருக்கும்போதே வடிகட்டிக் கொள்ளவேண்டியது. குளிர்ந்துவிட்டால் கஷாயத்திலிருக்கும் சத்து அடியிற்படிந்துவிடும்; கஷாயத்தைச் சாப்பிடும்போது கலக்கிச் சாப்பிடவேண்டியது.

இந்தக் கஷாயத்தின் பிரயாணம்:-- பெரியவர்களுக்கு 1.8- ஆழாக்கு முதல் - கால் ஆழாக்குவரை. சிறுவர்களுக்குப் பலம் ½ -முதல் 1 ½ - வரையில்

இந்தக் கஷாயத்தில் சர்க்கரை சேர்த்துச் சாப்பிடவேண்டியிருந்தால் வாதரோகத்திற்கு கஷாயத்தினெடைக்கு நான்கிலொன்றும், பித்தரோகத்திக்கு எட்டிலொன்றும், கபரோகத்திற்குப் பதினாறிலொன்றும் சேர்த்துச் சாப்பிட வேண்டியது.

தேன்சேர்த்துச் சர்ப்பிடவேண்டுமானால் வாதரோகத்திற்குப் பதினாறில் ஒன்றும், பித்தரோகத்திற்கு எட்டிலொன்றும், கபரோகத்திற்கு நான்கிலொன்றும் சேர்த்துச் சாப்பிடவேண்டியது.

சீரகம், மைசாட்சி, க்ஷாரம், இலவணம், சிலாசத்து, பெருங்காயம், சுக்கு, மிளகு, திப்பிலிமுதலியவற்றின் தனித்தனிச் சூரணங்களைச்சேர்த்துச் சாப்பிட வேண்டியிருந்தால் ½- விராகனெடை சேர்த்துச் சாப்பிடவேண்டியது.

ஏதேனுமொருசரக்கைப் பால், நெய், வெல்லம், எண்ணெய், மூத்திரம், அன்னியதிரவங்கள் ஆகியவைகளுள் ஒன்றுடன் சேர்த்தரைத்து அதைக் கஷாயத்தில் கலக்கிக் கொடுக்கவேண்டியிருந்தால் அப்படியரைத்தெடுத்து மருந்தில் ¾ விராகனெடை முதல் 1-விராகனெடைவரையில் கலக்கிக்கொடுக்கலாம்.

இன்னும், இந்தச் சதகத்தில் அந்தந்த வியாதிகளுக்குச் சொல்லப்பட்டிருக்கும் பல திரவியங்களில் தேகசுபாவத்திற்கேற்ற சிலவற்றைச் சேர்த்துக் கொடுக்கவேண்டியிருந்தால் அவ்விதம் சிலவற்றை யோகமுறையாகச் சேர்த்துச்செய்த சூரணத்தில் விராகனெடை¼. முதல் ½ -வரையில் மேற்படி கஷாயத்துடன் மேன்பொடியாகச் சேர்த்து உபயோகிக்கலாம்.

வெந்நீர் ஊறற் கஷாயம்.

இன்னும் இந்தக் கஷாயத்தில் வெந்நீர் ஊறற்கஷாயம் என ஒருவகையுமுண்டு.

வேர், இலை, பூமுதலிய நுண்மையான சரக்குகளையும், இலேசாகச் சத்து புறப்படக்கூடிய சரக்குகளையும் வெந்நீரில் ஊறவைத்து எடுத்துக்கொள்வதற்கு வெந்நீர் ஊறற்கஷாயமென்று பெயர்.

ரேவல்சீனி, நிலஆவாரை, ரோஜாப்பூ, இலவங்கம், சாமந்திப்பூ, சீரகம், ஓமம், சோம்பு முதலிய சரக்குகளில் காற்றினால் நீங்கிப்போகிற சத்திருப்பதால் அவைகளைக் கஷாயம் செய்யலாகாது.

இந்த வெந்நீர் ஊறற்கஷாயத்தில் இறங்கியிருக்கும் சத்தானது சீக்கிரத்தில் அழுகிக்கெட்டுப்போகுமாகையால் இதனைப் புதிதாகச் செய்துகொள்ளவேண்டியது. காய்ச்சும் கஷாயங்களிலும் சிலவற்றிற்கு இந்த விதியை அனுசரிப்பது உத்தமம்.

இந்த வெந்நீர் ஊறற்கஷாயத்திற்கு 1-மணிநேரம் முதல் 6 மணி நேரம்வரை சரக்குகள் வெந்நீரில் ஊறினால் போதும்.

பிரமாணம்:-- பெரியவர்களுக்கு 1.8-ஆழாக்கு முதல் ¼-ஆழாக்குவரை. சிறுவர்களுக்குப் பலம் ½ - முதல், 1 ½ - வரை.

இதில் தேன் முதலிய சரக்குகளைச் சேர்க்கவேண்டியிருந்தால் முன் காய்ச்சுக்கஷாயத்தில் சொல்லியிருக்கிற கிரமப்படியே சேர்த்துக் கொள்ளவேண்டியது.

5. பாண்டம்.

அந்தந்தச் சரக்கின் பிரமாணப்படி ஏதேனும் ஒருசரக்கைச் சூரணஞ்செய்து அதில் ஒரு ஆழாக்கு கொதிக்கிற வெந்நீரைவிட்டு இளஞ்சூடாயிருக்கும் போது வடிகட்டி யெடுத்துக்கொள்வதற்குப் பாண்டகஷாயமென்று பெயர். இதுவும் ஒருவகை வெந்நீர் ஊறற்கஷாயமாம்.

இலுப்பைப்பூ, அதிமதுரம், சந்தனம், சிற்றீச்சம்வேர், தாமலை வளையம், தாமரைப்புஷ்பம், லூதபட்டாணி, குமிழ்வேர்ப்பட்டை, சிறுநாகப்பூ, மஞ்சட்கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, நன்னாரி, திராக்ஷை, நெற்பொரி ஆகியவைகளை மேற்சொல்லியிருக்கிறபடி பாண்ட கஷாயமாகச்செய்து கொள்வது உத்தமம்.

முன் கஷாயத்திற் சொல்லியிருக்கிற மேன்பொடி முதலியவைகளை இப்பாண்ட கஷாயத்திலும் சேர்த்துக் கொடுக்கலாம்

பிரமாணம்:-- ஆழாக்கு -1.

இன்னும், அநேக சரக்குகளை நீரிலிட்டு 1 முதல் 7-நாள்வரை காய்ச்சி வடிகட்டி யெடுப்பதற்கும் பாண்டகஷாயமென்று பெயர் இதற்கு அடைகஷாயமென்று மறுபெயருமுண்டு. அநேக சரக்குகளைத் தண்ணீரிலிட்டு ஒன்றுமுதல் மூன்றுநாள்வரை காய்ச்சிக் கஷாயத்தைத் தனியே யிறுத்துவைத்துக்கொண்டு வேளையொன்றுக்கு அரை அல்லது கால் ஆழாக்கு வீதம் அப்போதைக்கப்போது இளஞ்சூடுகாட்டிக் கொடுப்பது சிலருடைய வழக்கம். அநேகம் சரக்குகளைத் தண்ணீரிலிட்டு ஏழுநாள்வரையில் நெருப்பின் மீது வைத்துக்கொண்டே அதிலிருந்து அரைக்கால் முதல் கால் ஆழாக்குவீதம் இறுத்து உபயோகிப்பது சிலருடைய வழக்கம்.

மேன்பொடி முதலியவைகளை முன் கஷாயத்திற் சொல்லியிருக்கிறபடியே இதற்கும் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

6.சூரணம்.

திரவியங்களை வெயிலில் காயவைத்து அல்லது வெதுப்பி யிடித்துத் தூள்செய்து வஸ்திரகாயஞ் செய்து கொள்வதற்குச் சூரணமென்று பெயர்.

மேற்கண்டபடி சூரணஞ் செய்வதில் கடினமான வஸ்துக்களை வெண்கலம் அல்லது இரும்புரலிலும். மிருதுவான பதார்த்தங்களைக் கல்லுரல் அல்லது கல்வத்திலுமிட்டுச்சூரணஞ் செய்து வஸ்திரகாயஞ் செய்து கொள்ளவேண்டும்.

மாசக்காய், கடுக்காய், முதலிய துவர்ப்புப் பதார்த்தங்களை இருப்புரலிலிட்டுத் தூள்செய்யலாகாது; அவ்விதம் செய்யின் சூரணம் கறுத்துக் கெட்டுப்போகும்.

கடுக்காயை இடித்துச்சூரணித்து வஸ்திரகாயஞ்செய்யலாகாது; ஆனால் அதைத்தெள்ளி வாதுமை நெய்யை அல்லது பசுவினெய்யைத் தெளித்து நெய்ப்பசையுண்டாக்கிக் கொள்ளவேண்டும்.

இஸ்பகோல்விதையை அறவே இடித்துச்சூரணஞ் செய்யலாகாது; ஆனால் இடிக்காமல் முழுசாகச் சேர்த்துக்கொள்வது யூநானி வைத்தியர்களுடைய சித்தாந்தம்; இடித்தாற் இதில் விஷதரும முண்டாகிவிடுகிறது.

கற்பூரத்தைத் தூள்செய்ய வேண்டியிருந்தால் அதனுடன் கொஞ்சம் சாராயத்தைச் சேர்த்தரைத்தால் அது தூளாகிவிடும்.

சில சரக்குகள் ஒட்டிலிட்டு அடுப்பேற்றி நன்றாக வெதுப்பினால் மாத்திரந்தான் நன்றாகத் தூளாகும்.

பல சூரணங்களை ஒன்றாகச் சேர்க்கவேண்டியிருந்தால் சரக்குகளைத் தனித்தனியிடித்து யோக முறையிற் சொல்லியிருக்கிற நிறைப்படி நிறுத்தெடுத்துக் கொள்ளவேண்டும்; அப்படிச் செய்யாவிட்டால் சரக்குகள் சேதமாகி நிறை குறையும்.

பிரமாணம்:-- விராகனெடை 1 -முதல் 2 ½ -வரை.

இந்தச் சூரணங்களில் வெல்லம் சேர்க்கவேண்டியிருந்தால் சமனெடை சேர்க்கவேண்டியது: சர்க்கரை சேர்க்க வேண்டியிருந்தால் இரண்டுபங்கு சேர்க்கவேண்டியது. நெய், தேன் ஆகியவைகளைச் சேர்க்கவேண்டிருந்தால் இரண்டுபங்கு சேர்க்கவேண்டியது; மற்ற திரவங்களானால் நான்குபங்கு சேர்க்கவேண்டியது. பெருங்காயம் சேர்க்கவேண்டியிருந்தால் அதனைச்சுட்டெரித்து வாசனையில்லாமல்

சாம்பலாக்கிக் கொள்ளவேண்டியது. அப்படிச் செய்யாவிட்டால் சிலருக்கு வாந்தி, அருவருப்பு, வெகுட்டல் முதலிய துர்க்குணங்களுண்டாகும்.

7. லேகியம்.

வெல்லம், சர்க்கரை, தேன் ஆகியவைகளிலொன்றைப் பாகுசெய்து பாகுபதத்தில் சூரணத்தைச் சேர்த்து மத்தாற் கடைந்து அல்லது கிண்டிக்கிளறி இறக்கி ஆறவைத்தெடுத்துக் கொள்வதற்கு லேகியமென்று பெயர்.

சூரணம் ஒருபங்கு, வெல்லமானால் சூரணத்திற்குச் சமனெடை, சர்க்கரையானால் சூரணத்திற்கு இரண்டு பங்கெடை, தேனானால் சூரணத்திற்கு மூன்று பங்கெடை.

இவற்றுள் ஒன்றை மேற்கண்டபடி பாகுசெய்து பாகுபதத்தில் சூரணத்தைக் கொட்டி மத்தாற்கடைந்து அல்லது கிளறி இறக்கி ஆறவைத் தெடுத்துக் கொள்ளவேண்டும்.

இதில் நெய்யைச் சேர்க்க வேண்டியிருந்தால் சூரணத்தின் மொத்த எடையில் நான்கிலொருபங்கு சேர்த்துக்கொள்ளவேண்டும். தேனைச்சேர்த்துக் கொள்ளவேண்டிய திருந்தால் சூரணத்தினெடையில் ஐந்திலொரு பங்கு தேனைச்சேர்த்துக் கொள்ளவும்.

8. வடகம்.

வடகம் செய்ய வேண்டியிருந்தால் வெள்ளைச்சர்க்கரை, சுத்திசெய்த குக்கில் ஆகியவைகளில் ஒன்றைப்பாகுசெய்து வேண்டிய சரக்குகளின் சூரணங்களில் விட்டு உருண்டையாகச் செய்துகொள்வதற்கு வடகமென்று பெயர்.

இவ்வாறு வடகம் செய்யும் போது சீனிசர்க்கரை, குக்கில் ஆகியவைகளைப் பாகுசெய்யாமலும் சேர்த்துக் கொள்ளலாம்.

தண்ணீர், பால், தேன் முதலியவைகளில் ஒன்றைச்சேர்த்து வடகம் செய்யவேண்டியிருந்தால் அதனைத்தனியே சூரணத்துடன் சேர்த்துப் பிசைந்து வடகஞ் செய்து கொள்ளலாம்.

சர்க்கரையைச் சேர்த்து வடகம் செய்யவேண்டுமானால் சூரணத்திற்கு நான்குபங்கு சர்க்கரையையும், வெல்லத்தைச் சேர்த்துச் செய்யவேண்டுமானால் சூரணத்திற் கிரண்டுபங்கு வெல்லத்தையும், குக்கில், தேன் இவற்றைச் சேர்த்துச் செய்யவேண்டுமானால் சூரணத்திற்குச் சமன் தனித்தனி குக்கில் தேனையும் சேர்த்துக்கொள்ளவேண்டும்.

9. கிருதம்.

நெய்யுடன் மூலிகைச்சாற்றை அல்லது கஷாயத்தைச்சேர்த்துக்காய்ச்சி அந்தச்சாறு அல்லது கஷாயம் சுண்டினபின் நெய்யைவடித்துக் கொள்வதே கிருதமாம்.

நெய் ஒருபங்கு, மூலிகைச்சாறு அல்லது கஷாயம் இரண்டு பங்கு இந்த நெய்யுடன் மேற்படி சாற்றை அல்லது கஷாயத்தைச் சேர்த்துக்காய்ச்சிக் கொள்ளவும்.

கஸ்தூரி, கோரோசனை, முத்து, முத்துப்பற்பம், பவளம், பவளபற்பம் முதலியவைகளைச் சேர்க்க வேண்டியதிருந்தால் ஒருவீசை கிருதத்திற்கு இரண்டரை விராகனெடை சேர்க்கலாம். அதிக சக்தியுள்ளவர்கள் அதிகமாகவும் சேர்த்துக் கொள்ளலாம்.

10. ஸ்நான தைலம்.

எள்ளெண்ணெயையும், மூலிகைகளின் சாற்றை அல்லது திரவியங்களின் கஷாயத்தைச் சேர்த்துக் காய்ச்சிக் கடுகுதிரள் பதத்தில் இறக்கி இளஞ்சூட்டுடன் வடிகட்டி யெடுத்துக் கொள்வதே தைலமாம்.

எள்ளெண்ணெய் ஒருபங்கு, மூலிகைச்சாறு அல்லது கஷாயம் இரண்டுபங்கு. மேற்படி எண்ணெயுடன் மேற்படி மூலிகைச்சாறு அல்லது கஷாயத்தைச்சேர்த்துக்காய்ச்சிக் கடுகுதிரள்பதத்தில் இறக்கி இளஞ்சூட்டுடன் வடிகட்டிப் பீங்கான் ஜாடியிலடைத்து வைத்துக் கொள்ளவும். இதனைத் தானியபுடம் வைத்தெடுத்துக் கொள்வது உத்தமம்.

11. மேற்பூச்சுத் தைலம்.

மேற்கண்ட விதமாக வேப்பெண்ணெய், புங்கெண்ணெய் முதலிய எண்ணெய்களுடன் அவசியமான சரக்குகளைச் சேர்த்துக்காய்ச்சி நோயுள்ள விடத்திற் பூசுந் தைலம் மேற்பூச்சுத் தைலமாம்.

12. பற்று.

உலர்ந்த சரக்குகளை அல்லது ஈரச்சரக்குகளை ஜலத்தில் அல்லது வேறு இரசத்தில் அல்லது தனியே அரைத்து அவசியமான விடத்தில் அல்லது நோயுள்ள விடத்திற் பூசுவதற்குப் பற்று என்றுபெயர்.

13. தப்பளம்.

தலையுச்சியில் மூலிகைகளை யரைத்துத் தடவி அல்லது மூலிகை முதலியவற்றின் இரசத்தைத் தடவிக் கையால் மெதுவாகத் தட்டுவதற்குத் தப்பளமென்று பெயர். நாசியிலிருந்து இரத்தம் வடிதல் முதலியரோகங்களில் தப்பளமிடுவது வழமை.

14. ஆக்கிராணம்.

இது, நாசியில் உபயோகிக்கும் தூள்மருந்து. தேவையான சரக்கைத்தூள்செய்து அதனை, ஒருநாசியின் துவாரத்தை அழுத்திக்கொண்டு மருநாசித் துவாரத்தில் இழுக்கவேண்டும். இவ்விதமே மற்றொரு நாசியை மூடிக்கொண்டு முன்மூடியிருந்த நாசியில் இழுக்கவேண்டும். இவ்வித மின்றி மேற்படி தூளைச்சிறு குழாய்களில் வைத்தும் நாசியில் சுவாசத்தால் இழுத்துச் செலுத்தலாம்.

15. நசியம்.

திரவ ரூபமான அவுடதங்களை நாசியில் துளித்துளியாக விடுவதற்கு நசிய மென்றுபெயர், நாசியில் விடுவதற்கு நசியமென்றும், காதில் விடுவதற்குக் கன்னத்துளி யென்றும் பெயர்.

16. தூபம்.

வேண்டியசரக்குகளைச் சற்றுப்பருமனாகப் பெடித்துக் கரிநெருப்பில் போட்டுப் புகைக்கப் புகையெழும்பும். இதனை நோயாளியின் சமீபத்தில் அல்லது தூரத்தில் புகையானது அந்நோயாளியின் சுவாசத்துக்கு நேரே செல்லும்படி வைக்கவேண்டியது. இன்னும் தூபக்கலசத்திற் போட்டுப்புகைப்பது உத்தமம். இதன் விவரத்தை நமது யூநானி வைத்திய தாதுவிருத்தி போதினி இரண்டாம் பாகத்திற் பார்வையிடவும்.

17. புகைபிடித்தல்.

வேண்டிய சரக்குகளைத்தூள் செய்து சுங்கான் அல்லது உக்கா முதலியவைகளிற் போட்டு அதன் மீது நெருப்பை வைத்துப் புகையிழுப்பதாம். இவ்விதம் இழுத்த புகையிற் கொஞ்சத்தை விழுங்கி மூக்கினால் விடவேண்டியது.

18. புகைகொடுத்தல்.

அவசியமான சாரக்குகளைப்பொடித்து நெருப்பிலிடப் புகையும். இதனை ஆசனத்தில் அல்லது புண்களிற் படும்படி பக்குவம் செய்யவேண்டியது.

19. புகைத்திரி.

வேண்டியசரக்குகளைத் தூள்செய்து துணியில் அல்லது கடுதாசியில் பரப்பிச் சுற்றித்திரித்து நூலால் கட்டிக்கொழுத்தி நாசியில் அல்லது புண்களில் பிடிப்பதற்குப் புகைத்திரி யென்று பெயர்.

20. திரி.

மூலிகையை யிடித்துப் பிழிந்த சாற்றில் மெல்லிய வஸ்திரத்தை நனைத்து உலர்த்தி மெல்லிய திரியாகச் செய்து இரணங்களில் புரைகளில் வைப்பதாம். இது பலவகைப்படும்.

21. வஸ்தி.

சரக்குகளைக் கஷாயமாக அல்லது ஊறற் கஷாயமாகச்செய்து பீச்சாங்குழல்மூலமாக ஆசனத்திற்குள் அல்லது கெற்பப்பைக்குள் செலுத்துதலாம். ஆனால் இப்போது எனிமா என்னும் எந்திர முண்டாயிருப்பதால் அதன் மூலமாக மேற்கண்டவைகளை உபயோகிப்பது சிரேஷ்டமும் உத்தமமுமாம்.

22. ஒற்றிடம்.

உலர்ந்த அல்லது பச்சையான பதார்த்தங்களைத் துணியில் முடிப்பாக வைத்துக்கட்டி நெருப்பு முதலியவைகளிற் காய்ச்சி ஒற்றிடமிடுவது ஒற்றிடமாம்.

விண்ணப்பம்.

இன்னண அவுடத முறைகள் இன்னும் இநேகமுள. அவையெல்லா வற்றையும் இங்கெழுதுவது அசாத்தியமான காரியம். ஆகையால் இங்குச்சில முக்கியமானவைகளை மாத்திரம் எழுதியிருக்கிறோம்.

இன்னும் இந்தச் சதகத்திற் சொல்லியிருக்க பட்டவ்வைகளெல்லாம் அதிக முக்கியமானவைகள்; இவற்றை அதிகக் கருத்துடன் கவனித்து முறைப்படி மேற்சொல்லிய விதமாகத் தனிப்பிரயோகமாகச்செய்து கொடுப்பதால் அதிக பலனுண்டாகுமென்பது திண்ணம். ஆயினும் சில சமயத்தில் பல வகைகளைச்சேர்த்து உபயோகிக்கவேண்டுமானால் தேகசுபாவம், வியாதியின் சுபாவம் முதலியவைகளை நிதானித்துச் சரக்குகளின் இடையே ஏற்படுத்தவேண்டியது அவசியம். இதற்காகப் பலர் பல்வகைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அவை ஒன்றோடொன்று விகற்பப் பட்டவைகளாகவும், அதிகச்சுற்றானவைளாகவும், அதிக விரிவானவைகள்ாகவுமிருப்பதால் எல்லோரும் இலகுவாகத் தெரிந்துகொள்ள ஏதுவில்லை; ஆகையால் யூநானி கிரமப்படி ஏற்படுத்துவதாயிருந்தால் அதிகஇலகு; அந்த முறைப்படியே தெளிவாகவும், சுருக்கமாகவும் கடவுள்கிருபையால் மீஜானுல்அத்வியா என்னும் ஒருகிரந்தம் வெளிப்படுத்தப்படும். அதனைவாசித்தால் இலேகியமுதலிய முறைகளில் எந்தெந்த தேகத்திற்கு எந்தெந்தச்சரக்கை எவ்வளவு எவ்வளவு சேர்க்கவேண்டும் என்னும் விவரங்கள் தெரியவரும்.

சமஸ்கிருத வியாதிப் பெயர்களின் விளக்கஅட்டவணை.

இக்கிரந்தத்தில் சில வியாதிகளுக்குச் சமஸ்கிருத நாமங்களும் வைத்திய பரிபாஷை நாமங்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அவைகளையெல்லாம் சாதாரணமானவர்கள் தெரிந்துகொள்ளுதல் முடியாது. ஆகையால், இதனை வாசிக்கும் ஒவ்வொருவரும் இலகுவாகத் தெரிந்துகொள்ளும்படி அவ்வித நாமங்களை இதனடியில் அகராதி ரூபமாகஎழுதி அவற்றின் அருத்தங்களையும் எழுதியிருக்கிறோம்.

அ.

அசக்கள்ளியாதிரணம்:-- பயற்றைக் கயிற்றிற்கோத்ததுபோல நீளமாக மினுமினுப்புடன் நோவில்லாமல் ஆட்டின் கழுத்தில் தொங்கும் அதிர்போற் படரும் கொப்பளம்.

அஸ்மரி-- கல்லடைப்பு.

அதரநோய்-- உதட்டுரோகம்.

அதிக்குருஹரங்கள்-- உடல் இளைத்தலைப்போக்கும் திரவியங்கள். (அதாவது தேகத்தைப் பெருக்கச்செய்பவைகள்)

அதிஸ்தூலஹரங்கள்-- பெருத்ததேகத்தை இளைக்கச்செய்யும் பதார்த்தங்கள்.

அபஸ்மாரம்-- மூர்ச்சைரோகம்.

அளாகவிஷம்-- வெறிகொண்ட அல்லது கோபங்கொண்ட எலிகள் விஷம்.

அற்புதரணம்-- பலவித கிரந்திகளின் இலக்ஷணங்களைப்பெற்று விசேஷமாகப் பருத்தலும், உயர்ந்தலுமாயிருக்கும் கிரந்தி.

ஆ

ஆவரணபயித்தியம்-- அறிவுமயக்க பயித்தியம்.

இ.

இரத்தகுன்மம்-- சூதகக்கட்டி.

இரவுத்திரவிரணம்-- குதிகால் நெருப்புபட்டதுபோல் குதரிப்போகுதல்.

உ.

உதரவரதன்-- மகோதரம்.

உபசிம்மகவிரணம்-- உண்ணாக்கு விரணம்.

உருத்திரரோகம்-- மாரடைப்பு.

உன்மாதம்-- பைத்தியம்.

எ.

எலும்புருக்கி-- எலும்புகளின் மத்தியிலிருக்கிற மச்சை உருகிச் சூலையுடன் அல்குல் மார்க்கமாய் வெள்ளைநிறமாக வெளிப்படும் வியாதி.

வைத்திய சதகத்தின் அட்டவணை

க.

கண்டாலச்சியவிரணம்-- கண்டமாலை.
கதாக்கிரந்தி-- குதிகாலிலும், விரலிலும் விரணமாகுதல்.
கரதமவிரணம்-- சேற்றுப்புண்.
கன்னரோகம்-- காதுநோய்.

கா.

காமியவிரணம்-- ஆண் மர்மஸ்தான ரணம்.

கீ.

கீட்டகவிஷம்-- பூச்சி புழுக்களின் விஷம்.

கு.

குணக்கநோய்-- நகங்கருத்து இரணமாகுதல்.

கெ.

கெற்பவிப்புருதி (கெற்பவித்திரிதி)-- கருப்பையில் குத்தலோடுண்டாகும் கட்டி.
கெற்பினி சுகவரங்கள்-- கெற்பினிக்குச் சுகம்கொடுக்கும் திரவியங்கள்.

கோ.

கோடவிரணம்-- எரிவந்தத்தோடு கூடிய பலவிதப்புடைகள்.

ச.

சக்கராற்புதவிரணம்-- மூளையின் ரணம்.
சத்தியாவிரணம்-- காயங்களாலுண்டான விரணம்.
சருவாசியரோகம்-- முகரோகம்.
சன்னாசரோகம் (சன்னியாசிரோகம்)-- இது ஸ்திரிகளுக்குத் திடீரென்று காணும் ஒருவித மூர்ச்சை ரோகம்.

சி.

சிம்மரோகம்-- நாக்குரோகம்.
சிலிபத விரணம்-- முழங்கால் வாதம், நரித்தலை வாதம்.

சீ.

சீதபித்தம்-- உடம்பின் மேல் வளையாகாரமாயும், ரத்த நிறத்தோடுங் கூடிய புடைகள் விஸ்தாரமாயெழும்புதல்.

சு.

சுகப் பிரசூதி-- சுகப்பிரசவம்.
சுரசாதங் குரற்கம்மல்-- ஈனத்தொனி.

சோ.

சோகை (சோபை)-- நரம்புகளின் வீக்கம் ஏறுவதனால்வாந்தியும், தேககனதியும் உண்டாகும். இதுவே சோகையாம். இதற்கு ஊதல், அதைப்பு, சுரப்பு எனவும் பெயர்களுண்டு.
சோமரோகம்-- அதிமூத்திர ரோகம்.

த.

தந்தரோகம்-- பல்நோய்.
தனவிப்புருதி-- தனத்தில் குத்தலுடனுண்டாகும் கட்டி

தா.

தாபரவிஷம்-- செடிமரம் முதலிய வற்றலுண்டாகும் விஷம்.

முற்றும்

தாமரை
நூலகம்